Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර්

பக்கம் 24 ரூபா 30.00

செப்டெம்பர் 01 - 07, 2011

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 926

## நீதிக்காகக் காத்திருக்கிறார்கள் அரசியல் கைதிகள்




உலகெங்கும் கிளைபரப்பி
வியாபித்திருக்கும் – தன்
அடியவர் துயர்துடைக்க
தேரேறி வருகிறான்
நல்லைக் கந்தன்



## அதிகரிக்கிறது அமெரிக்க தலையீடு

## கடாபியின் ஆட்சி...





## 'கதம் கதம்'

சூடு - சுவை - சுவாரசியம் - அதுதான் தினமுரசு

# குரு வழிபாடு

'குரு' என்றால் பாசத்தை நீக்குபவர் அல்லது "அஞ்ஞானம்" என்னும் இருளை அகற்றுபவர் என்பது பொருள். மனமொழி, மெய்களால் வணக்குதற்குரிய சிவ சொரூபமாக இருப்பதோடு, குருவானவர் வாழ்வில் பின்பற்றுதற்குரிய சிறந்த இலட்சியமாகவும் ஆன்மீகத் துறையில் சந்தேகங்களைப் போக்கி நல்வழிப்படுத்தும் வழிகாட்டியாகவும் விளங்குகின்றார். குருவிடம் ஞானநூல்களைக் கேட்கும் போது அடக்கத்துடனும், பக்தியுடனும் இருந்து, கவனம் முழுவதையும் சொல்லப்படும் விடயத்தில் செலுத்திக் கேட்கவேண்டும். குருவுக்குச் செய்யும் சேவை மிகச் சிறந்த திருத்தொண்டாகும். குருவின் உபதேசப்படி ஒழுகுதல் அவர்க்குச் செய்யும் வழிபாடுகளெல்லாம் முதன்மையானது. அவரவருடைய குருவை உள்ளன்போடு வழிபடுவதுடன், சமய குரவர், சந்தான குரவர் ஆகியோருக்கும் குருபூசை செய்து வருவது அவசியம். நாயன்மார்களுள் திருமூலர், மங்கையற்கரசியார், குலச்சிறையார், அப்பூதியடிகள் ஆகியோர் குருவழிபாட்டால் வீடுபேறடைந்தோருட் சிலராவர். சந்தானகுரவர் முதலானோர் குருவழிபாட்டினாலேயே உயர்பதம் எய்தியவர்கள். தங்கள் குருவின்பால் தாங்கள் கொண்டிருந்த பக்தியையும் பெருமதிப்பையும் தங்கள் நூல்களிலும் அவர்கள் வெளிப்படுத்தியிருப்பதைக் காணலாம்.

அ.யானு - யாழ்ப்பாணம்.

# கடவுளின் கொடையே எமது உயிர்

மானிட வாழ்வின் மிகப் பெரிய மறைபொருள்களில் ஒன்று இழப்பு. யாரும் எதையும் இழக்க விரும்புவதில்லை. ஆனால், சிலவற்றை சில நேரங்களில் இழக்கும்போது, அந்த இழப்புக்கு கைம்மாறாக நாம் பெறும் இன்பம் இழந்ததைவிட பன்மடங்கு மதிப்புமிக்கது, மேலானது என்பதை அனுபவத்தின் மூலமாகத்தான் அறிய முடியும்.

மனித உயிர் கடவுளிடமிருந்து வருகின்ற கொடை. அதை நாமாகவே விரும்பிப் பெற்றதுமில்லை, நம் விருப்பப்படி நம் உயிரை நீட்டவோ குறுக்கவோ நமக்கு உரிமையுமில்லை. ஆனால் கடவுள் நமக்குத் தருகின்ற கொடையாகிய உயிரை நாம் பாதுகாத்துப் பேணி, பொறுப்போடு நடந்துகொள்கின்ற கடமை நமக்கு உண்டு. நம்உயிரைப் பாதுகாக்கும் எண்ணம் நம்மில் இயல்பாகவே உள்ளது. மற்றவர்களின் உயிர், உடல்களுக்கு நாமும் துன்பமிழைக்காமல் இருப்பது நன்று. மனிதர் தம் வாழ்க்கையின் இறுதிக் குறிக்கோளை ஒருநாளும் மறந்துவிடலாகாது. அக்குறிக்கோள் நாம் கடவுளோடு நிலையான வாழ்வில் இணைந்து பேரின்பக் கடலில் மூழ்கிட வேண்டும் என்பதே. இதை மறக்கின்ற வேளைகளில் இவ்வுலகத்தை மட்டுமே ஒரு பொருட்டாக எண்ணுகின்ற மனநிலை நம்மில் வளர்ந்து, இவ்வுலகு சார்ந்த உயிரை எப்படியாவது தக்க வைத்துக்கொள்வோம் என நாம் தவறாகக் கருதுகின்ற ஆபத்து எழுந்துவிடும். இதற்கு மாறாக, இயேசு வாக்களிக்கின்ற வாழ்வை நாம் குறிக்கோளாகக் கொண்டு செயற்பட்டால் அந்த நிலையான வாழ்வை அடைவதற்கு எல்லா முயற்சிகளையும் மனமுவந்து மேற்கொள்வோம்.

யா. சாண்டோர், யாழ்ப்பாணம்

ஆன்மீகம்

# புனிதமாகும் நோன்பு

ரமழான் மாதம் புனிதமான மாதமாகும். இம்மாதத்தின் ஒவ்வொரு நாளிலும் ஒரு முஸ்லிம் தவறாது துஆ கேட்பதற்கு சிறிது நேரத்தை ஒதுக்க வேண்டும். ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அருளியதாக ஜரத் அபூ ஸயீதுல் குத்ரீ (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: "ரமழான் மாதத்தின் ஒவ்வொரு இரவிலும் பகலிலும் அல்லாஹ்வின் புறத்திலிருந்து (நரகத்தின்) கைதிகள் விடுதலை செய்யப்படு கின்றனர். மேலும் ஒவ்வொரு முஸ்லிமுக்கும் ரமழானின் ஒவ்வொரு இரவிலும் பகலிலும் ஒரு துஆ ஏற்றுக் கொள்ளப்படுகிறது."

நூல்: தர்கீப்.

அல்லாஹு தஆலாவின் வாக்கும், ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் உண்மையான அறிவிப்பும் இருக்கும்பொழுது துஆ ஏற்கப்படுவதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

புனித ரமழான் மாதத்தின் இரவுகளில் ஓர் இரவான லைலத்துல் கத்ரு இரவு மிகுந்த பரக்கத்துகளும் நன்மைகளும் பொருந்திய ஓர் இரவாகும். ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அருளியதாக அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: "எந்த மனிதர் லைலத்துல் கத்ரு இரவில் ஈமானுடனும் நன்மையை நாடியவராகவும் (வணக்கம் செய்ய) நிற்கிறாரோ அவருடைய முந்திய பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்பட்டு விடுகின்றன."

நூல்: தர்கீப்.

ஆஷிகா, கொழும்பு-12.

# வாசகர் சாலை

## வாழ்த்துக்கள்

மக்களுக்காய் பிறந்து மக்களுக்காகவே வலம்வரும் முரசே! தொடர்ந்தும் பல்வேறு புதுத் தகவல்களோடும், உண்மைத்தன்மைகளோடும் எம்மை மகிழ்விப்பாய் என நம்புகின்றோம். அதிலும் நீ சுமந்து வரும் எக்ஸ்ரே ரிப்போர்ட், மதியூகி, போன்றவை உண்மைத்தன்மை வாய்ந்தவை. நல்ல நல்ல தகவல்களைத் தந்து நலமுடன் சேவைபுரியும் தினமுரசே உன்பணி மென்மேலும் மெருகுபெற எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

க.கிருஸ்ணா, யாழ்ப்பாணம்.

## அருமையிலும் அருமை

தமிழ் மக்களுடைய தேவைகளையும், பிரச்சினைகளையும் வெளிக்கொணருவதில் முரசுக்கு ஒரு தனித்துவம் உண்டு. அந்தவகையில் முரசில் வரும் அத்தனை அம்சங்களும் சிறப்பு வாய்ந்தவை. புலிகளின் தளபதி வாக்குமூலம் மிகவும் சிறப்பாக உள்ளது. சென்ற வாரம் வெளிவந்த முரசில் வெளியான தொடர் அருமையிலும் அருமை.

அரசியல் ரீதியான உண்மையான பல கட்டுரைகளையும் தகவல்களையும் நாசூக்காக வழங்குகின்றாய். இன்னும் பல உண்மைகளை நீ உரைத்திட வேண்டுமென கேட்டுக் கொள்கின்றேன்.

ம.பவளராணி, கிளிநொச்சி

## தூரநோக்கு

பார் புகழும் பாரினில் விரிவான தூரநோக்கோடு அறிவான எடுத்தியம்புகின்றாய். உன்னில் உள்ளடுக்கப்படும் செய்திகள் உள்ளத்தை தொடுகின்றது. மனதைத் தொடும் பல தகவல்களை வாரி வழங்குகின்றாய்.


அண்மையில் மக்கள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கும் மர்ம மனிதன் பற்றிய கட்டுரையான "பெண்களை குறிவைக்கும் மர்ம மனிதர்கள்" சிறப்பாகவுள்ளது.

என்னை உந்துசக்தியாக இழுத்து வியாழன் தோறும் உன் வருகைக்காக காத்திருக்க வைக்கின்றாய்.

தி.சர்மியா, காலி.




# கவிதைப் போட்டி இல.926



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பவேண்டிய கடைசித் திகதி 11.09.2011

கவிதைப் போட்டி இல. 926 தினமுரசு வாரமலர்,
த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

## உதவி

நாயின் நன்றிக்கடன்
மனிதனுக்கு இருக்குமா
குரங்கு தண்ணீரை
கடக்க உதவி
செய்கிறதே...

க.தனேஸ்வரன்,
பளை.

## ஆதரவு

போர் தந்த எச்சமாய்
தோள் சாய்க்க துணையின்றி
தவிக்கும் பிஞ்சுகளைக்
கணக்கெடுக்க நாம்
யாரும் துணியவில்லை
தவித்து நின்ற இவ் ஜீவனுக்கு
நன்றியுள்ள ஜீவன் ஒன்று
ஆதரவு தருகின்றது.

கே.சோபிதா, கல்வியங்காடு

## உயிர் நண்பன்

தோளுக்கு தோள்
கொடுப்பான் நண்பன்
தோளோடு தோள்கொடுத்து
முதுகில் ஏற்றிச் செல்வான்
உயிர்நண்பன்.

ம.பைரவி,
யாழ்ப்பாணம்.

## சிந்தித்துப் பார்!

ஆறறிவு மனிதர் நாம்
அடிபட்டுக் கொள்கிறோம்-
ஆனால்
ஐந்தறிவு ஜீவன்கள்
அன்புக்காய்
அரவணைத்து நிற்கின்றன!
இங்கு யார் அறிவு பெரிதென
மூட மனம் கொண்ட மனிதா
சிந்தித்துப் பார்.

ஏ.அருண்மொழி,
வவுனியா.

## நாயின் முதுகில்...

வானத்து நிலவு
தன் முதுகில் வராதா என
எண்ணிய நாயின்
முதுகில் குரங்கு.

மர்வி, கிண்ணியா-05

## ஐந்தறிவு

ஐந்தறிவு ஜீவனுக்கு இருக்கும்
நல்லெண்ணம் - ஆறறிவு
மனிதர்களுக்கு
தோன்றுமோ தெரியவில்லை.

சி.கஜானன்,
திருகோணமலை.

# கவிதைப்போட்டி இல.923

## பாராட்டுக்குரியது



## அன்பு

ஒன்று சேர்ந்த
அன்பினால்
மனம் பார்த்த அளவை
முகம் பார்க்கும்
விதமே
அன்பினால் பாரமும்
விளங்காது இன
மாற்றம் கொள்ளாது
குணம்...

ஜிந்து
இடிமன், கிண்ணியா


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 1772,
கொழும்பு,
த.பெ.இல:- 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212221811
தொலை நகல்
(Fax): 0212221811
ஈ-மெயில்:
(E-mail):- thinamurasu@live.com


# உங்கள் பக்கம்

## கட்டண அறவீடு குறைக்கப்படவேண்டும்

நாள்தோறும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் பயன்படுத்துகின்ற பொது இடங்களுள் யாழ்.போதனா வைத்தியசாலையும் ஒன்றாகும். இங்கு நோயாளர்கள், நோயாளிகளின் பராமரிப்பாளர்கள், நோயாளர்களை பார்வையிட வருவோர் எனப் பெரும்தொகையான மக்கள் இங்கு வருகை தருகின்றனர்.

இவ்வாறு இங்கு வருகின்றவர்கள், தங்களுடைய துவிச்சக்கர வண்டிகள், மோட்டார் வண்டிகளை நிறுத்துவதற்கு பாதுகாப்பான தரிப்பிட வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

இங்கு ஒருதடவை உள்நுழைகின்ற துவிச்சக்கர வண்டி ஒன்றிற்கு 5ரூபாவும், மோட்டார் சைக்கிளுக்கு 10 ரூபாவும் கட்டணம் அறவிடப்படுகின்றது. இதனால் வைத்தியசாலைக்கு வருகின்ற மக்கள் இதற்கு பெரும் தொகையை செலுத்த வேண்டி இருக்கிறது.


குறிப்பாக வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறுபவர்களின் பராமரிப்பாளர்கள் இதனால் பெரிதும் பாதிக்கப்படுகின்றார்கள். இது நியாயமற்ற முறையில் அறவிடப்படுவதாக பாதிக்கப்படுகின்ற மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதுதொடர்பாக புதிய அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியும் இதுவரை பலன் கிடைக்கவில்லை என்பதனால் முரசின் உங்கள் பக்கத்தினூடாக உரியவர்களின் கவனத்திற்கு கொண்டு வருவதன் மூலம் இந்த நியாயமற்ற பண அறவீட்டை கட்டுப்படுத்திக் கொள்ள முடியும் என்று எதிர்பார்க்கின்றோம்.

சி.செந்தூரான், யாழ்ப்பாணம்.

# சுமந்திரன், சங்கரி கைகலப்பு விருந்துபசாரத்தில் அநாகரீகம்





தமிழ்க் கட்சிகளின் ஒன்றுகூடல் இந்தியத் தலைநகரில் நடைபெற்ற போதிலும் அங்கு சென்றிருந்த கூட்டமைப்புப் பிரதிநிதிகள் அங்கு ஒருவருடன் ஒருவர் கைகலப்பிற்குச் செல்லும் வரையில் முரண்பட்டிருக்கின்றனர். இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

இரண்டு நாட்களாக நடைபெற்ற அமர்வில் இரண்டாம் நாள் அமர்வும் நிறைவு பெற்றதன் பின்னர் பரந்தன் ராஜனின் ஏற்பாட்டில் நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக் களுக்கான விருந்துபசாரம் இடம்பெற்றிருந்தது.

விருந்துபசாரத்தின் பின்னர், கூட்டத்தில் முடிவு-கள் எதுவும் எட்டப்படாத போதிலும் கூட்டத்தில் கதைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் எழுத்து மூலமான அறிக்கை ஒன்றைத் தருமாறு ஈ.என்.டி.எல்.எப். பரந்தன் ராஜன் வலியுறுத்தியிருக் கின்றார்.

எந்த முடிவுகளும் எட்டப்படாத நிலையில் அறிக்கையினை எவ்வாறு தயாரிப்பது? என்ற தயக்கத்தினை கூட்டமைப்புத் தரப்பு வெளிப்படுத்தியிருக் கின்றது. தொடர்ந்தும் ராஜன் வலியுறுத்தியதை அடுத்து "கூட்டத்தில் கதைக்கப்பட்ட விடயங்களை மட்டும் எழுதிக் கொடுங்கள்" என்று தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரி கேட்டிருக்கின்றார்.

இதனையடுத்து, கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுமத்திரன், கூட்டணி தலைவர் சங்கரி ஆகியோரிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் முற்றிய நிலையில் ஆத்திரமடைந்த திரு.சங்கரி, நீ ஒரு சட்டத்தரணியா? என்று சுமந்திரன் எம்.பி.யைப் பார்த்துக் கேட்டிருக்கின்றார். உடனடியாக திரு. சங்கரியைப் பார்த்த சுமந்திரன் எம்.பி, ஓம். நான் சட்டத்தரணிதான். ஆனால் நீர் பதிவாளர்தானே? என்று கேட்டிருக்கின்றார்.

இதனை அடுத்து ஆத்திரமடைந்த திரு. சங்கரி தனது இருக்கையில் இருந்து எழுந்து சுமந்திரன் எம்.பி.யை நோக்கி தாக்குவதற்காகப் பாய்ந்திருக்கின்றார். இடைநடுவில் நின்றிருந்த பரந்த ! ராஜன் திரு. சங்கரியை இடைமறித்த அதேவேளை திரு. சங்கரியை நோக்கி பாய்ந்த சுமந்திரன் எம்.பி.யை மாவை சேனாதிராசா எம்.பி. மறித்திருக்கின்றார்.

இவர்கள் இருவரும் ஆளுக்குஆள் தாக்க முற்பட்ட சம்பவத்தின் பின்னணி அவர்கள் இருவருக்கும் இடையில் நீண்டகாலமாக இடம்பெற்று வரும் பனிப்போர் என்று தெரியவந்திருக்கின்றது.

## தொழிற்சங்கப் போராட்டத்திற்கு தயாராகின்றது மின்சாரத்துறை

மின்சாரத்துறை அமைச்சின் அதிகாரிகள் நாடு தழுவிய தொழிற்சங்க போராட்டம் ஒன்றை நடத்தவுள்ளனர்.

எதிர்வரும் செபடெம்பர் மாதம் 7ஆம் திகதி இந்த போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. மின்சாரத்துறை அதிகாரிகளின் சங்க சம்மேளனத்தின், செயற்குழு உறுப்பினர் ரஞ்சன் ஜயலால் இதனை தெரிவித்துள்ளார். தமக்கு வழங்க வேண்டிய ஆறுமாத வேதன கொடுப்பனவுத் தொகையை உடன்வழங்க வேண்டும் என்க் கோரி, இந்த பணிப்பகிஷ்கரிப்பு போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

## குடிநீர்த் தட்டுப்பாடு

மன்னார் மாவட்டத்தின் வெள்ளாங்குளம் மூன்றாம்பிட்டி ஆகிய பிரசேதங்களைச் சேர்ந்த மக்களுக்கு குடிநீர் வழங்கலில் ஏற்பட்டுள்ள ஒழுங்கீனம் காரணமாக அப்பகுதி மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இப்பகுதி மக்களுக்கான குடிநீர் பௌசர் மூலமே வழங்கப்பட்டு வருகின்றது. நன்நீர் வழங்கலில் ஒழுங்கீனம் ஏற்பட்டுள்ளது. இதனால் குடிநீரைப் பெற்றுக்கொள்வதற்கு தூர இடங்களிற்கு செல்ல வேண்டியிருப்பதாகவும் இதனால் தேவையற்ற காலதாமதங்கள் ஏற்படுவதாகவும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

## மருந்துப் பொருட்களின் உற்பத்தியில் கவனம் செலுத்துவது அவசியம்-ஜனாதிபதி


எதிர்வரும் 2012 வரவு செலவுத் திட்டத்துக்கான, சுகாதார அமைச்சின் கருத்துக்களையும் யோசனைகளும் பெற்றுக் கொள்ளும் கூட்டம் ஒன்று ஜனாதிபதி தலைமையில் இன்று அலரிமாளிகையில் இந்த இடம்பெற்றது. நாட்டின் சுகாதார தேவைக்காக அரசாங்கம் பாரிய நிதியை வருடாந்தம் ஒதுக்குவதாக ஜனாதிபதி இதன்போது தெரிவித்தார். மக்களுக்கு அவசிய மானதும், வினைத்திற னானதுமான சுகாதார சேவையை வழங்குவதே அரசாங்கத்தின் நோக்கம் எனவும் அவர் குறிப்பிட்டார். இதேவேளை உள்நாட்டில் மருந்துப் பொருட்களை உற்பத்தி செய்வது தொடர்பில் அவதானம் செலுத்துவது அவசியம் எனத் தெரிவித்த ஜனாதிபதி, இதன் மூலம் இறக்குமதி செய்யப்படுகின்ற மருந்துகளை குறைக்கலாம் எனவும் தெரிவித்தார்.

## அம்புத் தாக்குதல்


கண்டி வைத்தியசாலையில் மருத்துவ சிகிச்சையைப் பெற்றுக்கொள்வதற்காக அங்கு சென்ற வேடுவர் சமூகத்தைச் சேர்ந்த ஒரு-வரை உள்ளே அனுமதிக்க மறுத்த பாதுகாப்பு உத்தியோகத்தர் மீது அம்பெய்து குறித்த உத்தியோகத்தரைக் காயப்படுத்தியுள்ளார் வேடுவர். வேடுவர் சமூகத்தின் அடையாளமாக அவர்களினால் பேணப்பட்டு வருகின்ற அம்பினை வைத்தியசாலையினுள் எடுத்துச் செல்வதற்கு பாதுகாப்பு உத்தியோகத்தர் மறுப்புத் தெரிவித்ததைத் தொடர்ந்து ஏற்பட்ட வாக்குவாதத்தினைத் தொடர்ந்து பாதுகாப்பு உத்தியோகத்தர் அம்புத் தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## நூல்கள் வெளியீடு




அமெரிக்காவில் இருந்து கொண்டு தமிழ் தொண்டும் சமயத் தொண்டும் செய்து வரும் அழகரசன் அவர்கள், மட்டக்களப்பு திருமலை மறை மாவட்டத்தில் இருந்து வெளிவரும் தொண்டன் பத்திரிகையின் பிரதம ஆசிரியராகவும் பல வருடங்கள் பணிபுரிந்தவர்.



அடிகளார் எழுதி தமிழ் நாட்டில் பரிசும் பாராட்டும் பெற்ற "வள்ளுவமும் விவிலியமும்" ஓர் ஒப்பாய்வு நூலும், அன்னாரின் சகோதரரும் சமூக ஆர்வலருமான முகில்வாணனின் "இன்னுமோர் இன்பத்துப்பால்" எனும் சமூக அவலங்களைப் படம் பிடித்துக்காட்டும் நூலும் 04.09.2011 சனக்கிழமையன்று பிற்பகல் 4 மணிக்கு மட்டக்களப்பு வில்லியம் ஓல்ற் மண்டபத்தில் அருட்பணி A.A. நவரெட்ணம் (நவாஜி) தலைமையில் மிகச் சிறப்பாக வெளியிட்டு வைக்கப்படவிருக்கிறது.

## புகைப்படக் கண்காட்சியும் அங்குரார்ப்பண நிகழ்வும்

திருகோணமலையில் செயற்பாடுகளை ஆரம்பிக்க வுள்ள ஐரோப்பிய ஒன்றிய வர்த்தக சம்மேளனத்தின் சம்பிரதாயபூர்வமான ஆரம்ப நிகழ்வுகள் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணிக்குப் புல்மோட்டையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கடற்தொழில் அமைச்சர் சுசந்த புஞ்சி நிலமே, மற்றும் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் எனப் பலரும் கலந்து கொண்டனர். இந்நிகழ்வின் சிறப்பம்சமாகத் திருகோணமலை ஊடகவியலாளர்களின் புகைப்படக் கண்காட்சி நடைபெற்றதுடன் சிறந்த புகைப்படங்களுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன.

## காட்டு யானைகள் ஊருக்குள் அட்டகாசம்

மட்டக்களப்பில் வவுனதீவுப் பிரதேசத்தில் பன்சேனை எனும் இடத்தில் உள்ள குடியிருப்பினுள் காட்டு யானை ஒன்று பிரவேசித்து அட்டகாசம் பண்ணியுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு ஊருக்குள் புகுந்த யானை அட்டகாசம் பண்ணியதில் 3 வீடுகள் சேதமடைந்ததுடன் வீட்டில் இருந்த பெறுமதிமிக்க பொருட்களும் சேதப்படுத்தப்பட்டுள்ளது. கடந்த 8 மாதங்களில் காட்டு யானைகளின் அட்டகாசத்தில் 150 இற்கு மேற்பட்ட வீடுகள் சேதமாக்கப்பட்டுள்ளதுடன் பல இலட்சம் பெறுமதியான சொத்துக்களும் அழிக்கப்பட்டுள்ளதாகக் குறித்த கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

தினமுரசு வாரமலர்

த.பெ.இல:-1772, கொழும்பு.

த.பெ.இல:-167, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: -021 222 1811

தொலைநகல்(Fax):- 021 222 1811

ஈ-மெயில்(E-mail):- thinamurasu@live.com

## முரசம்

### அரசியல் கைதிகள் விடுதலை பெறவேண்டும்

**அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.**

அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டதானது வரவேற்புக்குரிய விடயமாகும். அவசரகாலச் சட்டத்தால் அதிகம் துன்பப்பட்டவர்கள் தமிழ் மக்கள் என்பதை எவரும் மறுக்கமுடியாது.

இலங்கையின் விடுதலைப் போராட்டத்தின் பெயரால் பயங்கரவாதம் தலைவிரித்தாடியபோது அவசரகாலச் சட்டத்தின் தேவை உணரப்பட்டது. அவசரகாலச் சட்டம் பாதுகாப்புக்கான தேவையாக உணரப்பட்டது. பயங்கரவாதம் வெற்றிகொள்ளப் பட்டபோது, அவசரகாலச் சட்டத்தின் தேவை அவசியமற்றது என்ற சூழல் ஏற்பட்டது. அவசரகாலச் சட்டம் அமுலில் இருந்தபோது, சிறைகளில் அடைக்கப்பட்ட பலர், பல ஆண்டுகளாக இன்னும் தமது வாழ்க்கையைத் தொலைத்து வாழ்கின்றனர். பலர்மீது உரிய குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படாமலும், சட்டநடவடிக்கை எடுக்கப்படாமலும், தடுத்துவைக்கப்பட்டிருக்கும் அவசரகாலச் சட்டத்தின் கைதிகளுக்கு தற்போதாவது நியாயம் கிடைக்குமா? என்ற எதிர்பார்ப்பு தோன்றியுள்ளது.

அவசரகாலச் சட்டம் இல்லாத தற்போதைய சூழலில், அவசரகாலச் சட்டத்தினால் பாதிக்கப்பட்டுச் சிறைகளில் வாடும் அப்பாவிகளும், அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்பட வேண்டும். அவர்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்பது தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகும்.

அண்மையில் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தமது செய்திக்குறிப்பொன்றில் அவசரகாலச்சட்டம் நீக்கப்பட்டுள்ளதால் சுமார் ஆறாயிரம் பேர் விடுதலை செய்யப்பட வாய்ப்புள்ளதாகக் கூறினார் என்று அறிய முடிந்தது.

இன்னொரு வகையில் பார்த்தாலும் நேரடியாக புலிகளாகச் செயற்பட்டவர்கள் சுதந்திரமாக நடமாடவும், புனர்வாழ்வு அழிக்கப்பட்டதாக விடுதலை செய்யப்படவும் முடியுமான நிலைமை தற்போது உள்ளது.

அத்தகைய சூழலில், சந்தேகத்தின் பெயரில் மற்றும் உதவியதான குற்றச்சாட்டிலும் கைதாகி பல வருடங்களாக சிறைவாழ்க்கை வாழுகின்றவர்கள் ஏன் விடுதலை செய்யப்படக் கூடாது.

அவர்கள் சிறையில் அடைக்கப்பட்ட காலத்தை அவர்களுக்கான தண்டனையாகக் கருதி அவர்களுக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பை வழங்க வேண்டும் என்ற கோரிக்கைகளும் நீண்டகாலமாக இருக்கவே செய்கின்றது.

மாறிவந்திருக்கும் அரசியல் மற்றும் நாட்டின் சூழலை கருத்தில் கொண்டு அவசரகாலச்சட்டம் ஜனாதிபதியால் ஒருமனதாக தளர்த்தப்பட்டது போல், அதனால் பாதிக்கப்பட்ட கைதிகளுக்கும் பொதுமன்னிப்பு அடிப்படையில் அவர்களுக்கு புதிய வாழ்வை ஜனாதிபதி வழங்குவார் என்று நம்பிக்கை கொள்ளும் அதே வேளை, இந்த நாட்டின் பெரும்பான்மை மக்களின் நம்பிக்கையைப் பெற்ற ஒரே தலைவர் என்ற வகையில் இந்த நாட்டு மக்களிடையே பிரிவினைகளுக்குக் காரணமான அரசியல் பிரச்சினைக்கும் நியாயமானதும், கௌரவமானதுமான தீர்வைக் காண்பதற்கு ஜனாதிபதி விருப்பம் கொள்ள வேண்டும் என்றும் நம்பிக்கை கொள்வோம்.

சர்வதேச அழுத்தத்திற்காக ஜனாதிபதி அவசரகாலச் சட்டத்தை தளர்த்தினார் என்ற விமர்சனங்கள் அரசியல் எதிரிகளின் பிரசாரமாக இருக்கட்டும்.

நம் நாட்டு இறைமையிலும், உரிமையிலும் எவரும் தலையீடு செய்வதைத் தடுக்கும் சக்தியை ஜனாதிபதிக்கு இலங்கை மக்கள் வழங்கியிருக்கிறார்கள் என்பதே ஜனாதிபதி மீதான நம்பிக்கைக்கு காரணம் என்பது புரிந்து கொள்ளப்படவேண்டும்.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

# கடாபியின் ஆட்சி... 'கதம் கதம்'

எக்ஸ்ரே ரிப்போர்ட்

**கடந்த** 42 வருடங்களாக லிபியாவை ஆட்சி செய்துவந்த முஅம்மர் கடாபியினுடைய ஆட்சி முடிவுக்கு வந்துள்ளது. ஏறக்குறைய கடந்த ஆறு மாதங்களாக நேட்டோ விமானப் படையின் ஆதரவுத் தாக்குதலுடன் கிளர்ச்சியாளர்கள் மேற்கொண்டுவந்த தொடர்ச்சியான நடவடிக்கையின் பின்னர் தனது வாசஸ்தலத்தை

> **கடாபியும் அவரது இராணுவத்தினரும் தங்களது பிரதான தளப்பிரதேசமான திரிபோலியைக் கைவிட்டு இரவோடு இரவாக தப்பியிருக்கிறார்கள். இவர்களின் இவ்வாறான இந்த நடவடிக்கை நேட்டோ மற்றும் கிளர்ச்சியாளர் களையே திகைப்படைய செய்திருக்கிறது.**

நாள் ஒன்றுக்கு உற்பத்தியாகின்ற 1கோடி 60 லட்சம் பெரல் எண்ணெய் மீதும் மேற்குலகிற்கு கொள்ளைப்பிரியம். தருணம் பார்த்திருந்தவர்களுக்கு எகிப்திலும் டுனீசியாவிலும் மக்கள் புரட்சி வெடித்து அதுவெற்றி அளித்தது. அதுவே வாய்ப்பாகவும் அமைந்தது. லிபிய தேசத்தினுள்ளும் மக்கள் புரட்சி என்ற விதை லாவகமாக விதைக்கப்பட்டது.

லிபியாவில் ஜனநாயகம் மறுக்கப்படுகிறது சர்வாதிகாரம் கோலோச்சுகிறது போன்ற கருத்துக்களின் பின்னால் இழுபட்டுச் சென்ற

மாக பின்வாங்கியிருப்பதாகவும் இது தற்காலிகப் பின்னடைவு என்றும் விளக்கம் அளிக்கப்படுகிறது.

எனினும் களநிலவரங்களை ஆராய்ந்து பார்க்கின்ற போது கடாபியின் தோல்வி உறுதியாகிவிட்டது என்றே தெரிகிறது. கடாபி தரப்பிலிருந்து கூறப்படுவது போன்று யுத்த களங்களில் தந்திரோபாயமான முறையில் பின்வாங்குவதும் பின்னர் வாய்ப்பான பகுதிகளால் தாக்கி எதிரி பகுதிகளுக்கு பலத்த தேசத்தை ஏற்படுத்துவதும் யுத்த தந்திரம். அப்படியான

இரகசியமான முறையில் பேணப்பட்டு வந்ததாகவும் கூறுகின்ற தகவல்கள், அவற்றில் ஒன்றின் ஊடாக கடாபி திரிபோலியை விட்டு வெளியேறி தனக்கு வாய்ப்பான அயல்நாடு ஒன்றிற்கு இல்லையேல் லிபியாவின் கிராமங்களில் உள்ள தனக்கு ஆதரவான இடங்களில் தஞ்சம் அடைந்திருக்கக் கூடும் என்று சந்தேகிக்கப்படுகிறது.

எதுஎப்படியோ அமெரிக்கா உட்பட்ட மேற்குலக நாடுகளில் சவால்விடும் வகையில் செயற்பட்டுக் கொண்டிருந்த கடாபியினுடைய ஆட்சி நிறைவுக்கு வந்திருக்கிறது.



விட்டு வெளியேறி தலைமறைவாகியிருக்கிறார். இப்பொழுது லிபிய நாட்டு அரசாங்கம் இல்லாத நிலையில் புதிய அரசாங்கத்தை மேற்குலக ஆதரவுடன் கிளர்ச்சியாளர்கள் நிறுவுவதற்கு தாயராகி வருகின்றனர்.

உலகின் எந்த ஒரு பகுதியிலாவது மேற்குலகின் தாளத்துக்கு இசைந்து கொடுக்காத ஆட்சியாளர்களோ அரசாங்கங்களோ உருவாகுமாயின் அதை உருக்குலைத்து இருந்த இடம்தெரியாது செய்வது என்பது மேற்குலகிற்கு பிடித்தமான மற்றும் பழக்கமான கைங்கரியம் என்பதை கடந்த கால உலக வரலாறுகள் வெளிப்படையாக வெளிப்படுத்துகின்றன.

அந்தவகையிலேயே மேற்குலகின் நிகழ்ச்சி நிரலுக்கு முற்றுமுழுதாக வளைந்து கொடுக்காத முஅம்மர் கடாபி மீது மேற்குலகிற்கு நீண்ட நாட்களாகவே ஒரு கண் இருந்து வந்தது. அதுமட்டுமன்றி லிபியாவில்

புரட்சியாளர்களுக்கு இராணுவப் பொருளாதார உதவிகளை வழங்கப் போவதாக நேட்டோ நாடுகள் வெளிப்படையாக அறிவித்தன. சுமார் 850 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பணமாக வழங்கப்பட்டதுடன் விமானத் தாக்குதல்கள் மூலமும் நேட்டோ நாடுகள் கிளர்ச்சியாளர்களுக்கு உதவி புரிந்தன. கடந்த 5 மாதங்களாக லிபியாவின் தலைநகர் திரிபோலி உட்பட லிபியாவின் முக்கிய நகரங்கள் மீது நேட்டோ படைகள் நடாத்திய கண்மூடித்தனமான தாக்குதல்களினால் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் மடிந்துள்ளனர்.

இப்பொழுது முஅம்மர் கடாபியின் வாசஸ்தலமாகத் திகழ்ந்த பாப் அல்அசீசியா என்ற மாளிகையே கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றியதுடன் லிபியாவில் கடாபியின் யுகம் முடிவுக்கு வந்திருக்கிறது. தற்பொழுது தலைமறைவாகியுள்ள கடாபியின் தரப்பிலிருந்து தற்பொழுது தந்திரோபாய

தந்திர நோக்கோடு முன்னேறுகின்ற தரப்பு தமது பிரதான தளத்தை ஸ்திரமாக பாதுகாக்கின்ற அதேவேளை சேதங்கள் ஏதுமின்றி தமக்கு வாய்ப்பான பகுதிகளை நோக்கி பின்நகர்ந்து செல்வது யுத்த மரபு. ஆனால் 42 வருடங்களாக லிபியாவை ஆட்சி செய்து கடாபியும் அவரது இராணுவத்தினரும் தங்களது பிரதான தளப்பிரதேசமான திரிபோலியைக் கைவிட்டு இரவோடு இரவாக தப்பியிருக்கிறார்கள். இவர்களின் இவ்வாறான இந்த நடவடிக்கை நேட்டோ மற்றும் கிளர்ச்சியாளர்களையே திகைப்படைய செய்திருக்கிறது. லிபியாவைச் சுற்றி கிளர்ச்சியாளர்கள் தமது முற்றுகை இறுகி இருக்கின்ற நிலையில் கடாபி, மற்றும் அவரது மகன் உட்பட்டவர்கள் எவ்வாறு வெளியேறினர் என்பது மேற்குலகின் தற்போதைய பெறுமதியான கேள்வியாக மாறியிருக்கிறது. மிகவும் நீண்ட சுரங்க வழிப்பாதைகள் லிபியாவில் இருப்பதாகவும் அவற்றில் சில மிக

கடாபியின் வீழ்ச்சியானது அண்மைக்காலத்தில் சர்வதேச ஆதரவுடன் வேட்டையாடப்பட்ட ஈராக் அதிபர் சதாம் ஹுசைன் இலங்கையில் புலிகளின் தலைவர் பிரபாகரன் போன்றோரின் தோல்வியை ஒத்ததாக இருப்பதாக அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. அவர்களின் தமது இறுதிக் காலங்களில் தாங்கள் கட்டி வைத்திருந்த மிதமிஞ்சிய தம் மீதான சக்திக்கு மீறிய நம்பிக்கைக் கோட்டைகள் உடைந்து வீழ்ந்த போது தமது இறுதிக்கட்டங்களை ஒரு மர்மம் நிறைந்ததாக வெளியுலகிற்கு காண்பித்திருந்தனர். எனினும் காலப்போக்கில் உண்மைகள் மக்களுக்கு விளங்கியிருந்தன. அவ்வாறானதொரு நிலைதான் இன்று லிபியாவிலும் தோன்றியிருக்கிறது. அதேவேளை லிபியாவில் என்ன நடக்க வேண்டுமென மேற்குலகுகள் எதிர்பார்த்தனவோ அது கனகச்சிதமாக நடாத்தி முடிக்கப்பட்டு இருக்கிறது.

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)

# இசைப்பிரியா கொலைக்கும் பாப்பாவே காரணம்

## இது ஒரு சிலருக்கு மட்டுமே தெரிந்த உண்மை!

**புலிகளின் மூத்த தளபதி வழங்கிய ஒப்புதல் வாக்குமூலம்**

**திட்டமிட்டு** காலம் வரும்வரை காத்திருந்து குழிபறித்த பாப்பா மக்களை தன்னுடன் வைத்திருந்தது மட்டுமல்லாது, ஏற்கனவே தனக்கு நெருக்கமான சுமார் ஆயிரத்துக்கு மேற்பட்ட போராளிகளை தனது கட்டுப்பாடுக்குள் வைத்திருந்து கொண்டதனால் நமது தலைமையால் அவனை உடனடியாக நெருங்க முடியவில்லை.

இந்த பாப்பாவை எப்படியாவது அகற்றவேண்டும் என தலைமை நினைத்து நமது சில-போராளிகளை அந்த மக்கள் கூட்டத்துக்குள் அனுப்பிவைத்தது. இதனை அந்த பாப்பா அறிந்து கொண்டதனால் அந்த போராளிகளை மக்கள் முன்சுட்டு கொன்றுவிட்டு மக்களுக்கு ஒரு கதை விட்டான். இவர்கள் துரோகிகள் எங்களை அழிப்பதற்காக சிங்களவனின் கைக்கூலிகளாக வந்தவர்கள், அதனால் தான் சுடுகின்றோம்.

இதனால் நம் போராளிகளுக்குள்ளேயே ஒரு பிளவு ஏற்படத்தொடங்கியது. அதனால் நம் தலைமைப் பீடம் முக்கியமான போராளிகள் தவிர்ந்த மற்றைய அனைவரையும் ஆயுதங்களை வைத்துவிட்டு மக்களுடன் சேர்ந்து கொள்ளுமாறு பணித்துவிட்டது.

இதன் பின் அந்த பாப்பாவை நம் தலைமைப் பீடத்தால் கட்டுப்படுத்த முடியாமல் போனது உண்மையே.

அதுமட்டுமல்ல நம்முடன் இருந்த அந்த அப்பாவி மக்களுக்கு அப்போது தெரியாது இந்த பாப்பாவும் அவனுடன் சேர்ந்து கொண்டு இருந்த அந்த போராளிகளும் கைக்கூலியாக இப்போது செயற்பட்டுக்கொண்டிருப்பது அதுவரை நாளும் பாப்பாவும் புலிகளின் முக்கிய உறுப்பினர்தானே.

அதனால் அந்த மக்கள் புலிகள் தான் மக்களை கொல்கின்றார்கள் என புலிகள் மீது கடும் கோபம் கொண்டதும் உண்மைதான். இந்த பாப்பா என்ற ஒரு தனி நபர் தனக்கு நல்ல வாழ்வு தருவதாக சொன்ன சொல்லுக்காக, கூட இருந்த போராளிகளை மட்டுமல்ல தன் இன மக்களையுமே கதறக்கதறப் படுகொலை செய்து கொண்டான்.

இதை விட இன்னுமொரு செய்தியையும் சொல்ல விரும்புகின்றேன். அதாவது நீங்கள் இப்பொழுது அறிந்து கொண்ட இசைப்பிரியா கொலைக்கும் இவன்தான் சூழ்ச்சி செய்து கொடுத்தான் என்பது ஒரு சிலருக்கே தெரிந்த உண்மை.

ஆம்!

எம் இனத்தின் அவல நிலைமைகளை வெளி உலகுக்கு கொண்டுசெல்லும் ஊடகப்பிரிவிலும் கலை பண்பாட்டுக்கழகத்திலும் தன்னை நிலைநிறுத்திக் கொண்டு போராடிய அந்த இசைப்பிரியா ஒரு போராளியின் மனைவி. ஒரு குழந்தையின் தாய். இப்படிப்பட்ட அந்த பெண் தனது கணவனை முதலில் ஒரு சம்பவத்தில் இழந்து பட்டமரமாகி தானும் தன் குழந்தையும் என இருந்தவளுக்கு மறுபடியும் ஒரு இழப்பு அவள் குழந்தையையும் அந்த கொடிய கடவுள் எறிகணைத்தாக்குதல் மூலம் எடுத்துக்கொண்டான்.

அவள் தனிமரமாக நின்றவேளையில் அப்போதைய கடுமையான களநிலைமையால் ஆயிரக்கணக்கான மக்களும் போராளிகளும் காயப்பட்டும் கொல்லப்பட்டும் கொண்டிருந்த பொழுது அவர்களுக்கு மருத்துவ உதவி செய்வதற்காக தன்னை மருத்துவப் பிரிவினருடன் இணைத்துக்கொண்டாள்.

இப்படி மருத்துவ உதவி செய்ய சென்ற அந்த போராளியை சூசகமாக கைதுசெய்து கொடுத்தான் இந்த பாப்பா.

ஆம். இறுதி யுத்தம் நடந்து கொண்டிருந்த பொழுது வீதிகளிலும் காணிகளிலும் பல்லாயிரக்கணக்கானவர்கள் காயப்பட்டிருந்தபொழுது அவர்களை மீட்கும் பணியில் இவளும் இன்னும் பலரும் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். இந்த பாப்பாவின் பிடிக்குள் மக்கள் அதிகமானோர் அதுவும் இராணுவ எல்லைகளில் இருந்ததால் அங்கு காயப்பட்டவர்களுக்கு மருத்துவ உதவி செய்ய சென்றிருந்த வேளையில் சில முன்னரங்க பாப்பாவின் நபர்களுடன் இவள் வாய்த்தர்க்கம் செய்து அந்த மக்களை காப்பாற்ற சென்றுள்ளாள்,

(தொடரும்...)




நன்றி : இணையம்

**தமிழக அரசியல்**

# தி.மு.கவின் புதிய ஆதாரமும் இந்திய மத்திய அரசும்

**ஸ்பெக்ட்ரம்** ஊழல் வழக்கில் கைதாகி சிறையில் உள்ள கனிமொழியின் தரப்பில் சி.பி.ஐ. தனி நீதிமன்றத்தில் முக்கிய ஸ்டேட்மென்ட் ஒன்று பதிவாகியுள்ளது. காங்கிரஸ் அரசின் மீதுள்ள கோபத்தை இந்த ஸ்டேட்மென்டில் காட்டியுள்ள தி.மு.க. "நாங்கள் சிக்கினால், உங்களையும் விவகாரத்துக்குள் இழுத்து விடுவோம்" என்று மறைமுகமாக மிரட்டல் விட்டிருக்கிறது.

தி.மு.க.வின் இந்த புதிய ஸ்டான்ட், டில்லி வட்டாரங்களில் பரபரப்பைக் கிளப்பியுள்ளது. ஸ்பெக்ட்ரம் உரிமத்தை ஏலம் விடாமல், குறிப்பிட்ட சில நிறுவனங்களுக்கு மாத்திரம் வழங்கி அதனால் கனிமொழி, ஆ.ராசா உட்பட சிலர் ஆதாயம் அடைந்தார்கள் என்பதே சி.பி.ஐ. தொடர்ந்துள்ள வழக்கின் சுருக்கம். இந்தக் குற்றச்சாட்டில்தான் கனிமொழி சிறையில் இருக்கிறார்.

பரபரப்பை ஏற்படுத்தியுள்ள, கனிமொழியின் ஸ்டேட்மென்ட் என்ன? "ஸ்பெக்ட்ரம் உரிமத்தை ஏலம் விடுவதில்லை என்ற முடிவை அப்போதைய அமைச்சர் ஆ.ராசா தனிப்பட்டு எடுக்கவில்லை. அந்த முடிவை எடுத்ததில் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கும் அப்போதைய நிதியமைச்சர் சிதம்பரத்திற்கும் பங்குண்டு" என்று சி.பி.ஐ. தனி நீதிமன்றில் கனிமொழி கூறியுள்ளார்.

தனது கூற்றுக்கு ஆதாரமாக, பிரதமர் மன்மோகன் சிங், ப.சிதம்பரம் ஆ.ராஜா ஆகிய மூன்று பேரும் இதுகுறித்து ஆலோசனை நடத்தியதற்கான ஆதாரம் ஒன்றையும் நீதிமன்றில் தாக்கல் செய்திருக்கிறார் கனிமொழி. அவரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆதாரம், இந்த மூவரும் கலந்துகொண்டு, "ஸ்பெக்ட்ரம் உரிமத்தை ஏலம் விடுவதில்லை" என்று முடிவெடுத்த ஆலோசனைக் கூட்டத்தில் நடைபெற்ற உரையாடல்கள் அடங்கிய குறிப்பேடு (மினிட் புக்)!

"ஸ்பெக்ட்ரம் உரிமத்தை ஏலம் விடுவதில்லை" என்ற முடிவை தனக்கு தெரியாமலேயே ஆ.ராஜா எடுத்துவிட்டார் என்று பிரதமர் மன்மோகன் சிங் தொடர்ந்து கூறிவருகிறார். அப்படியான நிலையில், கனிமொழி இவ்வாறு குற்றம் சாட்டியிருப்பது பரபரப்பை கிளப்பியுள்ளது. அதற்கு ஆதாரத்தையும் தூக்கிப் போட்டிருப்பது, அதை மேலும் விறுவிறுப்பாக்கி காங்கிரஸ் கட்சியை பதற வைத்திருக்கிறது.

"இதற்கு மேலும் ஆதாரங்களை மறைப்பது ஒன்னும் நம்ம கையில இல்லை ஜி!ஸ்பெக்ட்ரம் ஊழல் குறித்த விசாரணை, டில்லி பாட்டியாலா தனி நீதிமன்றில் நடைபெற்று வருகிறது. சி.பி.ஐ.யின் வாதங்கள் முடிவு பெற்றுவிட்டன. இதையடுத்து, குற்றம் சாட்டப்பட்டவர்களின் வாதங்களை நீதிபதி சைனி கேட்டு வருகிறார்.

முதல் ஆளாக, ஆ.ராசா தனது வாதத்தை முன்வைக்கத் தொடங்கிய முதலாவது நாளில், பிரதமரின் பெயரையும், அப்போதைய நிதியமைச்சராக இருந்த ப.சிதம்பரத்தின் பெயரையும் பிரஸ்தாபித்தார். அப்போது அது, பரபரப்பை ஏற்படுத்தியது.

இரண்டாவது நாளும் தொடர்ந்த ஆ.ராசாவின் வாதத்தில், பிரதமரையும், ப.சிதம்பரத்தையும் மேலும் வழக்கில் இழுத்து சிக்கலில் ஆழ்த்துவார் என்று பலத்த எதிர்பார்ப்பு இருந்த நிலையில் பல்டியடித்தார் அவர்.

தான் யாரையும் நேரடியாகக் குற்றம் சாட்டவில்லை என்றார் ஆ.ராசா. முதல் நாள் வாதத்திலும் ஆ.ராசா தரப்பில் மிகக் கவனமாகவே பிரதமருக்கும் ப.சிதம்பரத்துக்கும் எதிரான வார்த்தைப் பிரயோகங்கள் அமைந்திருந்தன. தனது கூற்றை நிரூபிப்பதற்குத் தேவையான ஆதாரங்கள் ஏதாவது தன்வசம் இருப்பதாக அவர் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. இப்போது, ஆ.ராசாவின் கூற்றை நிரூபிக்கத் தேவையான ஆதாரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது,கனிமொழியால்! கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். ஆ.ராசாதான் மத்திய அமைச்சராக இருந்தவர். அவர், பிரதமர் மற்றும் ப.சிதம்பரத்துடன் தாம் கலந்து ஆலோசித்ததாக முதலில் கூறுகிறார்.

(22 ஆம் பக்கம் தொடர்ச்சி...)




# கதையளக்கும் பெண்கள்

மற்றவர்கள் குறித்து ஊர் வம்பு பேசுவது பெண்களின் பிறவிக் குணம். அது எந்த காலத்திலும் மாறாது. சமீபத்தில் இது குறித்த ஆய்வு இங்கிலாந்தில் மேற்கொள்ளப்பட்டது. அதில், நாள் ஒன்றுக்கு 298 நிமிடங்கள் அதாவது 5 மணி நேரம் பிறரை குறித்து பெண்கள் ஊர்வம்பு பேசுவது தெரியவந்தது.

குழந்தைகள் பற்றியும், கடைகள், உபயோகிக்கும் சோப்புகள், மற்றும் அந்தரங்கப் பிரச்சினைகள் குறித்தும்



பெண்கள் பேசுகின்றனர். அதேநேரத்தில் தங்களின் உடல் எடை, உணவு பழக்கவழக்கங்கள் மற்றும் உடை விவ்காரங்கள் குறித்து மட்டும் 24 நிமிடங்கள் விவாதிக்கின்றனராம்.

ஆய்வு மேற்கொண்டவர்களில் மூன்றில் ஒரு பங்கு பெண்கள் தங்களின் சாப்பாட்டு விஷயம் குறித்தே முக்கியமாக பேசுவதாக தெரிவித்துள்ளனர். மேலும் சிலரோ, தங்களின் உடல் அழகை அறுவை சிகிச்சை மூலம் சீரமைப்பது எப்படி என்பது குறித்து விவாதிக்கின்றனர்.

பொதுவாக தங்களின் தோழிகள், கணவன்மார்கள் மற்றும் தாயாருடன் பேசி வம்பு அளக்கின்றனர். இவர்களில் தோழிகளுடன் தான் அதிக ஊர்வம்பு பேசுவதாக ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

# தாய்லாந்து முதல் பெண் பிரதமர்

**தாய்லாந்தின்** புதிய பிரதமராகப் பியூ தாய் கட்சியைச் சேர்ந்த இங்லக் ஷினவத்ரா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளர். இதையடுத்து அந்நாட்டின் முதல் பெண் பிரதமர் என்ற பெருமையை அவர் பெற்றுள்ளார்.

இவர் அந்நாட்டின் முன்னாள் பிரதமர் தக்ஷின் ஷினவத்ராவின் இளைய சகோதரி என்பது குறிப்பிடத்தக்கது. தாய்லாந்தில் கடந்த யூலை 3ஆம் திகதி நடந்த பொதுத் தேர்தலில் இங்லக்கின் பியூ தாய் கட்சி ஆளும் கட்சியான ஜனநா யக் கட்சியைத் தோற்கடித்தது. நாட்டின் மொத்த வாக்கில் ஐந்தில் மூன்று பங்கு வாக்கைப் பெற்று வெற்றி வாகை சூடியது. இந்நிலையில் அந்நாட்டின் நாடாளுமன்றத்தில் புதிய பிரதமரைத் தேர்ந்தெடுப்பதற்கான வாக்கெடுப்பு நடைபெற்றது. இதில் 296 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இங்லக்குக்கு ஆதரவாகவும், 3 பேர் எதிராகவும் வாக்களித்தனர். 197 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்கெடுப்பைப் புறக்கணித்தனர். இதையடுத்து 50 சதவீதத்துக்கு மேலான வாக்குகளைப் பெற்று இங்லக் வெற்றி பெற்றதாக அவைத் தலைவர் சோம்சாக் அறிவித்தார். தாய்லாந்தில் 2006ஆம் ஆண்டில் இருந்தே மறைமுக இராணுவ ஆட்சி நடந்து வருகிறது. 2006இல் பிரதமராக இருந்த தக்ஷின் ஷினவத்ராவைப் பதவி இறக்கிவிட்டு இராணுவம் ஆட்சியைக்கைப்பற்றியது. பின்னர் சுராயுத் சுலனாண்ட் பிரதமராக நியமிக்கப்பட்டார். 2008 வரை அவர் பிரதமர் பதவியில் இருந்தார். திடீரென அவர் பதவியில் இருந்து நீக்கப்பட்டு மக்கள் சக்தி கட்சியைச் சேர்ந்த சொம்சாய் வோங்சாவத் பிரதமராக நியமிக்கப்பட்டார்.



இந்நிலையில் ஜனநாயக ரீதியிலான அரசைத் தேர்ந்தெடுக்க கடந்த யூலை 3ஆம் திகதி தேர்தல் நடத்தப்பட்டது. இத்தேர்தலில் இராணுவத்துக்கு எதிராக மக்கள் மத்தியில் இருந்த அதிருப்தி பிரதிபலித்தது. தாய்லாந்து இக்கட்டான சூழலை சந்தித்துவரும் நிலையில் இங்லக் ஷினவத்ரா பிரதமராகப் பொறுப்பேற்றுள்ளார். நாட்டில் அரசியல் ஸ்திரத்தை உருவாக்குவதுடன் ஜனநாயக அரசிடமிருந்து மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் கட்டாய நிலையில் அவர் உள்ளார்.

# பெண்ணின் மனம்

"என் மனம்
என்னவென்று என்னையன்றி
யாருக்குத் தெரியும்"

என்ற தென்னிந்திய தமிழ் திரைப்படப் பாடல் ஒன்று உள்ளது. உண்மையில் ஒரு பெண் மனம் இன்னுமொரு பெண் மனதுக்கு நூறு சதவீதம் புரியாது. ஆனால் பொதுவாக சொல்லப்படும் ஒரு கருத்து ஒரு பெண்ணின் மனம் மற்றொரு பெண்ணுக்குத்தான் புரியும் என்பதாகும். அக்கருத்தானது இக்காலத்தைப் பொறுத்தவரை முற்றிலும் தவறானது.

தற்காலத்தையப் பெண்கள் அனைவரும் ஒரே குணத்தையுடையவர்கள் அல்ல. ஒத்த மனதுடையவர்களும் அல்ல. நவநாகரிக காலமாகிய நிகழ்காலத்தில் மனத் தைரியமுடையவர்களுக்கு மத்தியில், கோழைகளும் வாழ்கிறார்கள்.

பெண் மனம், தன்னைத் தானே இளகிய மனம் என நினைத்தால் அட்டையாக சுருண்டுவிட வேண்டியதுதான். சந்தர்ப்பத்திற்கு ஏற்ப தன் மனதை மாற்றிக் கொள்ளப் பழக வேண்டும். அதற்காக ஒருவரை இழக்கவோ அல்லது காதலித்த ஒருவரை சந்தர்ப்பத்திற்காக துரோகம் இழைக்க வேண்டும் என்பது அர்த்தம் அல்ல. காலநேரம் அறிந்து செயற்பட்டாலே போதுமானதாக இருக்கும்.

பொதுவாக பெண்கள் கஷ்டங்கள் வரும் போதும், துன்பங்கள் ஏற்படும் போதும் மனஉறுதியை இழந்துவிடுவார்கள். மனம் ஏதேனுமொரு இக்கட்டான சூழ்நிலையில் எதிர்மறையான கருத்தை நினைத்தால் கிடைக்கவிருக்கும் வெற்றி கூட தோல்வியாகவே மாறும். இது போன்ற சந்தர்ப்பங்களில் பெண்கள் மனதை தளரவிடாது உறுதியாக இருப்பார்களாயின், பெண் மனதிற்கு தோல்வி என்பதே கிடையாது.

பெண்மனம் என்பது பொதுவானது. பாடசாலையில் கல்வி கற்கும் உயர்தர வகுப்பு மாணவிகளுக்கு, பாடசாலை மாத்திரம் அல்ல உலகம். அதற்குப் பிறகுதான் அவர்கள் சமூகத்திற்கு முகங்கொடுக்க வேண்டிய நிர்பந்தம் ஏற்படுகிறது. ஏமாற்றங்கள் பலவற்றை சந்திக்க நேரிடலாம். பெறுபேறுகள் அற்றவர்கள் தாழ்வு மனச்சிக்கல் கொண்டு உடைந்துவிடுவார்கள். அப்படியன்றி பெண்களுக்கு என்று உள்ள பல தொழிற்கல்விகளில் ஏதேனும் ஒன்றை தேர்வுசெய்து படிக்கலாம்.

மேலும், ஒவ்வொரு பெண்ணுக்குள்ளும் ஒரு திறமை உண்டு. அதை உணர்ந்து மனதில் திடம் கொண்டு அவற்றை வளர்க்கலாம். ஒரு பெண் தன் கோபத்தை, மனதில் எழும் உணர்வுகளை சட்டென்று வெளிப்படுத்துவாள். அல்லது முகத்திலேனும் பிரதிபலிக்கச் செய்வாள். பொறுமை கொள்ளும் பெண்மனம் பல சந்தர்ப்பங்களில் பொங்கி எழும் சம்பவங்களும் உண்டு. அதேநேரம் சகிப்புத் தன்மைக் கொண்ட பெண்கள் பட்ட துன்பங்களும் நிறையவே உள்ளன.

அன்பு நிறைந்த பெண் மனமானது, வெவ்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு விதமாய் மாறுகிறது. இரக்கம், கோபம், மகிழ்ச்சி, அகம்பாவம், என பல விதங்களில் மாறுகிறது. ஒரு பெண்ணின் மனம், அது கொண்ட குணத்தைப் பொறுத்தே அவளுடைய செயலின் பலன் அமைகிறது. கோழை மனம் படைத்த பெண்கள் சமுதாயத்தில் வீரப் பெண்கள் வாழ்ந்த வரலாறும் உண்டு. அவர்களின் வெற்றிக்கு, அவர்களுடைய மனமே காரணம்.


எனவே, பெண்ணானவள் உலகில் வாழும் காலத்தில் தைரியமுள்ளவளாக வாழ முயற்சிக்க வேண்டும்.

**ஆஷிகா, கொழும்பு-12.**

# இறால் குடமிளகாய் வறுவல்

இறால் - 1 கிலோ
பச்சை குடமிளகாய் - 2
சிவப்பு குடமிளகாய் - 1
வெங்காயம் - 4
பூண்டு - 6 துண்டுகள்
தனியாத்தூள் - 1 தேக்கரண்டி
மஞ்சள்தூள் - 1/2 தேக்கரண்டி
மிளகுத்தூள் - 1/4 தேக்கரண்டி
சீரகம் - 1/2 தேக்கரண்டி
கறிவேப்பிலை - ஒரு கொத்து
மிளகாய்த்தூள் - 2 தேக்கரண்டி
உப்புத்தூள் - 2 தேக்கரண்டி
எண்ணெய் - 1/2 கப்

**செய்முறை:**
இறாலை சுத்தம் செய்து நன்கு கழுவிக் கொண்டு தண்ணீரை ஒட்ட பிழிந்துக்கொள்ளவேண்டும். வெங்காயம், குடமிளகாயை நறுக்கி வைக்கவேண்டும். பூண்டை நசுக்கி வைக்கவேண்டும். அடி கனமான சட்டியில் ஒரு தேக்கரண்டி எண்ணெயை ஊற்றி இறாலை போட்டு நன்கு வதக்கி ஒரு தட்டில் கொட்டி வைக்கவேண்டும். பிறகு மீதியுள்ள எண்ணெயை ஊற்றி பூண்டை முதலில் போட்டு தொடர்ந்து வெங்காயத்தை போட்டு நன்கு வதக்கவேண்டும். பிறகு குடமிளகாயை கொட்டி கறிவேப்பிலையை போட்டு வதக்கவேண்டும். பிறகு எல்லாத்தூளையும் போட்டு நன்கு கிளறிவிடவேண்டும். குடமிளகாய் பாதி வேக்காடாக இருக்கும் பொழுது, இறாலைக் கொட்டி எல்லாவற்றையும் சேர்த்து கலக்கி விடவேண்டும். பிறகு ஐந்து நிமிடம் அடுப்பில் வைத்திருந்து நன்கு கிளறிவிட்டு இறக்கிசூடாக பரிமாறவேண்டும்.



## வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

**பரிசுப் போட்டி இல :- 284**

கேள்வி : தாய்லாந்தின் முதலாவது புதிய பெண் பிரதமராக நியமனம் பெற்றவர் யார்?

பரிசு 1000/- ரூபா.

விடையைப் பக்கத்திலுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பி வைக்கவும்.
அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:
**வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி, பரிசுப் போட்டி இல : 284**
**தினமுரசு வாரமலர், த.பெ.இல : 1772, கொழும்பு, த.பெ.இல - 167, யாழ்ப்பாணம்.**
அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:- **11.09.2011**
சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவார்.

பரிசுப் போட்டி இல:- 282 இற்கான விடை:- ஜான் தெரோய்ன்.
பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி:- ராஹிலா ஹலாம், இல 82/4, சாந்த செபஸ்தியன் வீதி, கொழும்பு-12

**284**

பெயர் : ..............................
முகவரி : ..............................
..............................
..............................
தே.அ. அட்டை இல : ..............................
விடை : ..............................
கையொப்பம் : ..............................

# மக்களைப் பாதிக்கும் விடயமும் அவசியமான விசாரணைகளும்

-லோகேஸ்வர்-

**கிழக்கு** மாகாணத்தில் ஏற்பட்டுள்ள மர்ம மனிதன் பீதி உண்மையில்லை என்று பாதுகாப்புத் தரப்பினர் கூறிக் கொண்டிருக்கையில் 15 வரையான சம்பவங்கள் நடந்து முடிந்திருக்கின்றன. இதற்கிடையில் இது ஒரு அரசியல் முறுகலுக்கும் மோதலுக்குமான களத்தையும் தோற்றுவித்திருக்கிறது.

இதில் என்ன வேடிக்கை என்றால், மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது உருவாகியுள்ள மர்ம மனிதன் செயற்பாடு சார்பான பீதி அதன் பின் இடம்பெற்ற வன்முறையின் பின்னணியில் தமிழ் தேசிய கூட்டமைப்பு இருப்பதாக காத்தான்குடி நகரசபை தலைவர் தெரிவித்திருக்கும் கருத்துதான் அது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிராக தமிழ் தேசியக் கூட்டமைப்பு சட்டநடவடிக்கை எடுப்பது பற்றி ஆராய்ந்துவருவதாக கூட்டமைப்பு அறிக்கை ஒன்றினையும் வெளியிட்டிருக்கிறது.

எந்த ஒரு விடயமும் மக்களை இம்சிப்பதாக இருந்தால் அது குறித்து விசாரணைகளை நடத்தி ஆராய்ந்து முடிவுகளைக் கொண்டு வருதல் வேண்டும் என்பது அரச தரப்பினருடையதும், அதிகார, அரசியல்தரப்பினரதும் சிந்தனையாக இருக்க வேண்டும்.

கடந்த ஒரு வாரகாலத்துக்கும் மேலாக இருந்துவரும் மர்மமனிதன் பீதி காரணமாக தமிழ் - முஸ்லிம் பிரதேசங்களில் தொடர்ந்தும் ஒரு வித அச்சநிலை காணப்படுகின்றது. இதன் காரணமாக மக்களின் இயல்பு நிலையும் பாதிக்கப்பட்டுள்ளது. சில இடங்களில் பாதுகாப்பு தரப்பினருக்கும், பொதுமக்களுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்படுகின்றது. மக்கள் தாக்கப்படுகின்றனர், உடைமைகள் சேதமாக்கப்படுகின்றது. இப்படியான சம்பவங்கள் தமிழ் பகுதியிலும், முஸ்லிம் பகுதியிலும் இடம்பெற்று வருகின்றது.

தம்மை பாதுகாக்க முற்படும் பொதுமக்களை பயங்கரவாதிகளென முத்திரை குத்துவதை பொலிஸார் தவிர்க்க வேண்டுமென மதத்தலைவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். இந்த வேண்டுகோள் மண்முனை வடக்கில் நடமாடியதாகத் தெரிவிக்கப்படும் மர்ம மனிதர்கள் விவகாரம் தொடர்பில் கிழக்கு மாகாண முதலமைச்சரின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு டேபா மண்டபத்தில் கடந்த வார இறுதியில் நடைபெற்ற விசேட கூட்டமொன்றிலேயே விடுக்கப்பட்டது.

மர்ம மனிதர்கள் தாக்குதலினால் ஆத்திரமடைந்த பொதுமக்கள் அவர்களை தேடியபோது ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையே பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் மோதல் ஏற்படுவதற்கு காரணமெனவும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது. ஆர்ப்பாட்டங்கள் மற்றும் வீதிமறியலில் ஈடுபடுவோர் பயங்கரவாதிகளாக கருதப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுமென மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் ரவீந்திர கரவிட்ட கூறியமைக்கு மதத்தலைவர்கள் மறுப்புத் தெரிவித்ததுடன், இவ்வாறான கருத்துக்கள் பாரதூரமானவையெனவும் தெரிவித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த திங்கட்கிழமை இரவு கூடு வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மண்டூர் பிரதேசத்தில் குடும்பப் பெண் ஒருவர் தாக்கப்பட்டு காயமடைந்துள்ளார். இதனையடுத்து அப்பிரதேச இளைஞர்கள் திரண்டெழுந்த வேளை பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப்படையினர் அவர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். இதில் யாரும் பலத்த காயத்துக்குள்ளாகவில்லை என்றாலும் தாக்கப்பட்டுள்ளனர்.

இதேநேரம் இதற்கு இரு தினங்களுக்கு முன்னர் செங்கலடி பதுளை வீதியில் ஒரு இளம் யுவதி தாக்கப்பட்டு காயமடைந்து சிகிச்சை பெற்றிருக்கிறார். இச் சம்பவம் நடைபெற்று சில மணிநேரத்தில் சந்தேகத்துக்கிடமான தனது அடையாளத்தை உறுதிப்படுத்தமுடியாத ஒரு இராணுவ உத்தியோகத்தர் பிடிபட்டு, அதன்பின்னர் அது தொடர்பில் வினாவிய இளைஞர்கள் தாக்கப்பட்டுள்ளனர். பின் பிரதேசம் முழுவதும் கடும் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.


> மர்மமனிதன் பீதி காரணமாக தமிழ் - முஸ்லிம் பிரதேசங்களில் தொடர்ந்தும் ஒரு வித அச்சநிலை காணப்படுகின்றது. கடந்த யுத்த காலத்தில் அமைதியாக அச்சத்துடன் இருந்த பொதுமக்களிடம் பொலிசார் கூறும் கருத்துக்கள் அச்சத்தின் காரணமாக எந்தப் பாதிப்பினையும் ஏற்படுத்தியிருக்கவில்லை. ஆனால் இப்போது சிந்திக்கத் தொடங்கியுள்ள மக்களுக்கு பொலிஸார் சொல்லும் சாட்டுக்கள் தேவையற்றனவாக அமைந்து விடுகின்றன. அதனாலேயே இவ்வாறான நிலை தோன்றியிருக்கிறது என்பது ஒரு சிலரது கருத்தாக இருக்கின்றது.
>
> எதுஎவ்வாறானாலும் பொது மக்கள் எந்தக்காரணத்தைக் கொண்டும் சட்டத்தைக் கையில் எடுக்க முடியாது என்பது தெரிந்திருந்தாலும் தமது பாதுகாப்பைத் தேடுவதற்குத் தமக்குரிமை இருக்கிறது என்று அவர்கள் கூறுகின்றனர்.


இதேபோன்று 15க்கும் மேற்பட்ட சம்பவங்கள் நடைபெற்றுள்ள நிலையில் பொய் என்று நம்ப முடியுமா என்ற கேள்வி பொது மக்களிடமிருந்து வருகிறது. சம்பவங்களைத் தொடர்ந்து நடைபெறும் வன்முறைகள் விடயத்தில் பாதுகாப்புத் தரப்பினர் நடந்துகொள்ளும் கடுமையான கைக்கொள்ளல்களால் பெரும் வன்முறைகள் வெடிக்கின்றன. இது விடயத்தில் பாதுகாப்புத் தரப்பினர் பொதுமக்களுடன் ஒத்திசைந்து அவர்களின் கருத்துக்களை கேட்டு செயற்படுவதே சிறப்பாக அமையும்.

ஒரு பிரதேசத்தில் அல்லது ஒரு இடத்தில் நடைபெற்றது போன்று எல்லா இடங்களிலும் நடைபெற வேண்டும் என்ற கட்டாயம் ஒன்றும் இல்லை என்பதே பொதுமக்களின் இப்போதைய விழிப்புக்குக் காரணமாக இருக்கிறது. இருந்தாலும் அச்சம் பீதி பரவுவதற்கு வீணான வதந்திகளும் காரணமாக அமைந்து விடுகின்றன. அச்சம் எத்தனையோ விடயங்களைச் செய்துமுடித்து விடுகிறது என்பது உண்மைதான். சம்பவங்கள் இடம்பெறும்போது அந்த இடத்துக்கு யாராவது அரசியல்வாதிகள் அல்லது முக்கியஸ்தர்கள் சென்று பொது மக்கள், பொலிசார், பாதுகாப்பு தரப்பினருடன் பேசி பதற்றத்தை நீக்கி அங்கு இயல்புநிலையை ஏற்படுத்த வேண்டிய தேவைப்பாடு ஏற்படுகிறது.

இம்மாதம் 17ஆம் திகதி பிற்பகல் மட்டக்களப்பு ஊறணியில் மர்மமனிதனின் கீறல் காயத்துக்கு பெண் ஒருவர் உள்ளான சம்பவத்தில், இதனை அடுத்து அந்த பகுதி மக்கள் வீதிகளில் இறங்கி ஆரப்பாட்டங்களில் ஈடுட்டனர். பதற்றநிலை காணப்பட்டது. மக்கள் மத்தியில் அச்சநிலை காணப்பட்டது. பொலிசாரும், இராணுவமும் அங்கு காணப்பட்டார்கள்.

பொலிசாரும் இராணுவத்தினரும் பொதுமக்கள் மீது சரமாரியாகத் தாக்குதல் நடத்தினர். கண்ணீர் புகைப்பிரயோகம் செய்யப்பட்டது. அந்த இடத்திற்கு கிழக்கு மாகாணசபை உறுப்பினரான தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியை சேர்ந்த பூ.பிரசாந்தன், ஐக்கிய தேசியக் கட்சியின் மாகாண சபை உறுப்பினர் மாசிலாமணி, மற்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் இரு பாராளுமன்ற உறுப்பினர்களும் வந்திருந்தனர். அவர்கள் கண்முன்னாலேயே மக்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இதன்பின்னர் வன்முறையில் ஈடுபட்டவர்களைச் சமாதானப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டிருந்த ஐக்கிய தேசியக் கட்சி மாகாண சபை உறுப்பினர் மாசிலாமணி மீது அடி விழுந்தது. வைத்தியசாலையில் சிகிச்சையும் பெற்றிருந்தார்.

இரவு வேளைகளில் பெரும்பாலான பிரதேசங்களில் பொதுமக்கள் நித்திரையின்றி இருக்கும் நிலை உருவாகியிருக்கையிலும் கூட பொலிஸ் மற்றும் பாதுகாப்புத்தரப்பினர் இந்த விடயம் பொய் என்று கூறிவருவது மக்கள் மத்தியில் பெரும் கவலையைக் கொண்டு வந்திருக்கிறது என்பதே உண்மை.

பொதுமக்களின் கடும் நடவடிக்கைகள் பொலிசாரால் முடியாது என்ற பின்னரே ஏற்படத் தொடங்கின என்பது எல்லோருக்கும் தெரியும்.

கடந்த யுத்த காலத்தில் அமைதியாக அச்சத்துடன் இருந்த பொதுமக்களிடம் பொலிசார் கூறும் கருத்துக்கள் அச்சத்தின் காரணமாக எந்தப் பாதிப்பினையும் ஏற்படுத்தியிருக்கவில்லை. ஆனால் இப்போது சிந்திக்கத் தொடங்கியுள்ள மக்களுக்கு பொலிஸார் சொல்லும் சாட்டுக்கள் தேவையற்றனவாக அமைந்து விடுகின்றன. அதனாலேயே இவ்வாறான நிலை தோன்றியிருக்கிறது என்பது ஒரு சிலரது கருத்தாக இருக்கின்றது.


எதுஎவ்வாறானாலும் பொது மக்கள் எந்தக்காரணத்தைக் கொண்டும் சட்டத்தைக் கையில் எடுக்க முடியாது என்பது தெரிந்திருந்தாலும் தமது பாதுகாப்பைத் தேடுவதற்குத் தமக்குரிமை இருக்கிறது என்று அவர்கள் கூறுகின்றனர். கடந்த வாரத்தில் பொலிஸார் ஒலிபெருக்கிகள் மூலம் மர்ம மனிதர் யாராவது வந்தால் அவர் மீது தாக்குதல் நடத்துபவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்ற தொனியில் அறிவித்திருந்தனர்.

அவ்வாறானால் ஒருவர் மீது ஒருவர் தாக்குதல் நடத்தினால் அவருக்கு எதிரத்தாக்குதல் நடத்தக்கூடாது என்றா பொருள் என்று சில பொதுமக்கள் கேள்வி எழுப்புகின்றனர். மர்ம மனிதன் உண்மைதானா இல்லை பொய்யா என்ற கேள்வி யாரிடம் கேட்டாலும் கையை விரிக்கும் நிலை ஏற்பட்ட போதும் மக்கள் மத்தியில் பீதி தணிந்தபாடில்லை.

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பிலும் அம்பாறையிலும் ஏற்பட்ட பதற்றம் திருமலையிலும் ஏற்பட்டது. ஆரம்பத்தில் முஸ்லிம் பிரதேசங்களை மையப்படுத்தியிருந்த இப்பீதி ஈற்றில் தமிழ் பிரதேசங்களில் கடுமையாக நடைபெற்றது. யுத்தம் காரணமாக மிகக் கொடுமையாகப் பாதிக்கப்பட்ட மிகுந்த ஏழைகள் வாழுகின்ற மட்டக்களப்பில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறுகின்றமை மக்கள் மத்தியில் மேலும் கலக்கத்தையே கொண்டு வந்திருக்கிறது.

இவ்வாறான கலக்கம் தமது வாழ்க்கையை சிறிதேனும் மேம்படுத்துதல் வேண்டும் என்று எண்ணும் மிச்சசொச்ச மக்களிடமும் மேலும் சலிப்பையே கொண்டுவரும். இந்த உண்மையை அனைத்துத் தரப்பினரும் புரிந்து கொண்டு செயற்பாட்டில் இறங்க வேண்டும். எல்லாவிதமான இயற்கை அழிவுகள், செயற்கையாக நடைபெறும் யுத்தம் முதல் திட்டமிட்ட செயற்பாடுகள் வரை பாதிப்புகளை மிகக் கொடுமையாக அனுபவிப்பவர்கள் மக்களே என்றவகையில் நமக்குரிய தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் முன்சாதாரண மக்களையும் நினைவில் நிறுத்த வேண்டும் என்பதே இக் கட்டுரையின் சிந்தனையாகும்.

அந்த வகையிலேயே இந்த மர்ம மனிதன் விவகாரத்தினை எல்லோரும் பார்த்தாக வேண்டும். அதனை விடுத்து பாரதூரமானதொரு விவகாரமாக இதனை அணுகி பாதுகாப்புத்தரப்பினருக்கும் பொதுமக்களுக்குமிடையிலான உறவில் பெரும் விரிசலை ஏற்படுத்தி தேவையற்ற முடிவுகளை கொண்டுவருதல் நிறுத்தப்படுதலே சிறப்பாகும். ◻



# அதிகரிக்கிறது அமெரிக்க தலையீடு

**யார் என்ன நியாயம் சொன்னாலும் இலங்கை சர்வதேச சமூகத்திடமிருந்து நெருக்கடிகளையும் சவால்களையும் எதிர்கொள்கின்றது என்பது உண்மையே. இருந்தாலும், சீனாவின் வீட்டோ அதிகாரத்தையும், இந்தியாவின் சர்வதேச செல்வாக்கையும் மீறி இலங்கை மீது அமெரிக்காவோ வேறு நாடுகளோ கையை வைக்க முடியாது என்ற நம்பிக்கை மட்டும் எஞ்சியிருக்கின்றது.**

அலசுவது
மதியூகி

அமெரிக்காவின் இராஜாங்க திணைக்கள உதவிச் செயலாளர் ரொபேர்ட் ஓ பிளேக் இவ்வாரம் இலங்கை வருவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் இறுதிநேரத்தில் அவரின் பயணம் இடம்பெறவில்லை.

அமெரிக்காவைத் தாக்கிய 'ஐரீன்' சூறாவளியால் சுமார் 20 இலட்சம் பேர் இடம்பெயரவேண்டிய அனர்த்த நிலைமையால் அவரின் பயணம் கைவிடப்பட்டதாக பின்னர் அறிவிக்கப்பட்டது.

பிளேக் இலங்கைக்கு வருகை தரும் வேளையில் ஜனாதிபதி மற்றும் உயர்பிரமுகர்களைச் சந்தித்து கலந்துரையாடுவார் என்றும், குறிப்பாக யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்து நிலைமையை ஆய்வு செய்வார் என்றும் கூறப்பட்டது.

பிளேக்கின் இலங்கை விஜயமானது தற்போது இலங்கை எதிர்கொள்ளும் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் முக்கியத்துவம் வாய்ந்ததாக எதிர்பார்க்கப்பட்டது. இலங்கை அரசு யுத்தத்தின் இறுதி காலப்பகுதியில், மனித உரிமைகளையும், சர்வதேச போர் சட்டதிட்டங்களையும் மீறியது. பல கொலைகளைச் செய்தது என்று சர்வதேச அளவில் கடுமையான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வருகின்றன.

இலங்கையில் அதிபர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் பாதுகாப்பு உயர் அதிகாரிகள் ஆகியோர் சர்வ தேச விசாரணை மன்றில் குற்ற வாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும் என்றும், வலியுறுத்தல்களும், கோரிக்கைகளும் தொடர்ந்துகொண்டிருக்கின்றன.

இந்த நிலையில் அமெரிக்காவும் யுத்தத்தில் பயங்கரவாதம் அழிக்கப் பட்டதை வரவேற்றபோதும், யுத்தத் தின் போது மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுக்களுக்கு இலங்கை அரசு பதிலளிக்கும் கடமைப் பொறுப்பை உணர்ந்து நடக்க வேண்டும் என்று கூறிவந்தது.

மிக அண்மையில் அமெரிக்காவின் அறிக்கை சற்றுக் காரமானதாக இருந் தது. அதாவது இலங்கை தொடர்ந்தும் பொறுப்புச் சொல்லும் நிலையிலிருந்து நழுவிச் செல்லுமாக இருந்தால் சர்வதேச அதிருப்தியைச் சம்பாதிக்க நேரிடும் என்று குறிப்பிட்டிருந்தது.

அந்த அறிக்கைக்குப் பின்னர் இலங்கை அரசு ஒரு செய்தியை வெளியிட்டிருந்தது. அந்தச் செய்தியில் அமெரிக்கா, இலங்கை மீது விசேட மான வகையில் இல்லாமல் உள்நாட்டுப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்த ஏனைய நாடுகளைப் போல் தனது ஆர்வத்தைக் கொண்டி ருக்க வேண்டும். அவ்வாறு இல்லாமல், இலங்கை மீது எச்சரிக்கை விடும் தொனியில் அறிக்கை விடுவது, இலங்கையை அபகீர்த்திக்கு உள்ளாக் கும் நோக்கம் கொண்டதாகும் என்று கூறப்பட்டதாக அந்தச் செய்தி கூறியது.

பின்னர் ஜே.எப்.ரஞ்சித் பெரேரா எழுதிய "வெல்லப்பட முடியாத போரை வெற்றி கொள்ளுதல்" என்ற நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய இலங்கையின் வெளிவிவகாரச் செயலாளர் கருணா திலக அமுனுகம யுத்தத்தின் போது எதிர்நோக்கிய சவால்களைவிட சர்வ தேச சமூகத்தைச் சமாளிப்பது மிகப் பெரிய சவாலாக இருப்பதாகக் கூறியிருந்தார்.

மில்லியன் கணக்கான மக்களையும், பில்லியன் கணக்கான வளங்களையும், பெரிய அரசுக்களையும் பெருந்தொகை யான ஊடகங்களையும் எதிர்த்துப் போராட வேண்டிய நிலையில் அர சாங்கம் இருப்பதாகத் தெரிவித்தார்.

யார் என்ன நியாயம் சொன்னாலும் இலங்கை சர்வதேச சமூகத்திடமிருந்து நெருக்கடிகளையும் சவால்களையும் எதிர்கொள்கின்றது என்பது உண்மையே.

இருந்தாலும், சீனாவின் வீட்டோ அதிகாரத்தையும், இந்தியாவின் சர்வதேச செல்வாக்கையும் மீறி இலங்கை மீது அமெரிக்காவோ வேறு நாடுகளோ கையை வைக்க முடியாது என்ற நம்பிக்கை மட்டும் எஞ்சியிருக்கின்றது. அதற்காக இந்தியாவுடனும், சீனாவுடனும் இலங்கை மிக நெருக்கமான உறவை கடைப்பிடித்து வருகின்றது. இதில இநதிய அவதானிகளைப் பொறுத்தவரை இலங்கை அரசா- னது இந்தியாவுக்கு போக்குக் காட்டிக்கொண்டு, சீனாவுட்ன் நெருக்கமடைகிறது. சீனாவை இந்தியாவுக்கு ஒரு அழுத்தசக்தியாக காட்டிக்கொள்வதனூடாக இந்தியா, தமிழக உணர்வுகளுக்கு எடுபட்டுவிடாத தந்திரோபாயத்தையும் இலங்கை வெற்றிகரமாக செய்து வருகின்றது என்பதாகும்.

இருந்தபோதும் இந்தியா மிக நிதானமாக பிராந்திய போக்கைக் கண்காணித்து வருகின்றது. புலிகள் இல்லாத சூழலில் இலங்கையில் உள்ள அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் ஒரே கருத்தில் இந்தியாவை வலியுத்தினால் அதைத் தட்டிக்கழிக்க முடியாத கட்டாயத்தில் இந்தியா தலையீட்டைச் செய்யும் என்ற எதிர்பார்ப்புக்களும் உண்டு.

ஐக்கிய நாடுகள் சபை, மனித உரிமை அமைப்புக்கள், அமெரிக்கா உட்பட்ட நாடுகள், இந்தியா போன்ற வெளிச்சக்திகளின் கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டிய பொறுப்பைத் தட்டிக் கழிக்க முடியாத நிலை மைக்குள் இலங்கை சென்று கொண்டிருக்கின்றது. இதன் முதல் கட்டமாகவே, பல ஆண்டுகளாக நடைமுறையில் இருந்து வந்த அவசரகாலக்கட்டத்தை கடந்த வாரம் (25.08.2011) ஆம் திகதி ஜனாதிபதி இனிமேல் தொடரப்போவதில்லை என்று பாராளுமன்றத்தில் அறிவித்திருந்தார். இதை அமெரிக்கா, இந்தியா, ஐக்கிய நாடுகள் சபை என்பன உடனடியாகவே வரவேற்றிருந்தன.

அதேநேரம் நடைமுறையிலிருக்கும் பயங்கரவாதச் சட்டத்துக்கும், அரசி யல் பிரச்சினைக்கும் தீர்வுகாண இலங்கை முயற்சிக்க வேண்டுமென்றும் அவை வலியுறுத்தியிருந்தன.

இந்த நிலையிலேயே பிளேக்கின் இலங்கை விஜயம் எதிர்பார்ப்புக்கு உரியதாகின்றது. பிளேக் இலங்கை வரும் போது, இலங்கையின் நியாயங்களை அமெரிக்காவுக்கு தெளிவுபடுத்துவதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன. தமிழ்க் கட்சிகள், சுயநிர்ணய உரிமை தனி யான அரசியல் அதிகாரப் பகிர்வு என்று கூறும் நடைமுறைச் சாத்தியமற்ற கோரிக்கைகள் இலங்கையில் வாழும் சிங்கள, முஸ்லிம் மக்களின் அச்சத்தை சந்தேகத்தை மேலும் அதிகரிக்கச் செய்வதோடு பிரச்சினைகளைக் கையாளும் அரசுக்கு தேவையற்ற அழுத்தத்தையும், சங்கடங்களையுமே ஏற்படுத்தியிருக்கின்றன.

எனவே, இவ்வாறான கள நிலைமைகளை சர்வதேச சமூகம் புரிந்துகொண்டு இலங்கை மீது நெகிழ்வுப் போக்கைக் கடைப்பிடிக்க வேண்டுமென்பதே இலங்கையின் எதிர்பார்ப்பாகும் என்ற செய்தியும் பிளேக் ஊடாக சர்வதேசத்துக்கு வழங்கப்பட முயற்சிக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

இதற்கிடையே பிளேக்கின் இலங்கை விஜயம் மறுதிகதி அறிவிக்கப்படாமலே பிற்போடப் பட்டுள்ளதான தகவல் இலங்கை அரசுக்கு சற்று ஏமாற்றமாகவே இருக்கும். எனினும், ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கூட்டம் செப்டெம்பர் 12 ஆம் திகதி நடை பெறவுள்ளதால் அதற்கு முன்னர் பிளேக் இலங்கைக்கு வருகை தரு வதற்கு அதிக வாய்ப்புகள் உண்டு.

சுவிஸின் ஜெனீவாவில் நடை பெறவுள்ள ஐக்கிய நாடுகளின் மனித உரிமை பேரவைக் கூட்டத்தில் இலங்கை மீது போர்க்குற்றச் செயல்கள் மற்றும் மனித உரிமை மீறல் என்ற குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் கேள்விகள் எழுப்பப்பட்டால் அதற்கு பதிலளிக்கும் வகையில் இலங்கை அரசு ஐவர் கொண்ட குழு இலங்கை அரசால் நியமிக்கப்பட்டுள்ளது. இவர்களில் அமைச்சர்களான மகிந்த சமரசிங்க, ஜீ.எல்.பீரிஸ், நிமால் சிறிபால டீ சில்வா, அனுர பிரியதர்ஷன யாப்பா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சஜின்வாஸ் குணவர்த்தன ஆகியோர் நியமிக்கப் பட்டுள்ளனர்.

இதற்கிடையே வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் இருவார காலப் பயணத்தை மேற்கொண்டு ஆறு நாடுகளுக்குப் பயணமாகியுள் ளார். இவர் சிங்கப்பூர், ஜோர்தான், தென்கொரியா, பிரித்தானியா, சேர்பியா, சுவிஸ்லாந்து ஆகிய நாடுகளுக்குச் சென்று மனித உரிமை பேரவைக் கூட்டத்தில் இலங்கைக்கு ஆதரவு திரட்டுவார் என்று இன்னொரு தகவல் கூறுகின்றது. இவரைத் தொடர்ந்து பிரதி வெளிவிவகார அமைச்சர் நியோமல் பெரேரா நான்கு தென் அமெரிக்க நாடுகளுக்கான பயணத்தை மேற்கொள்ளவுள்ள தாகவும் தெரியவருகின்றது.

இலங்கையின் தற்போதைய நிலைமையையும், ஐரோப்பிய மற்றும், மேற்கத்தேய நாடுகளுடனான உறவுச் சிக்கலையும் பயன்படுத்திக் கொள்ள அமெரிக்கா முற்படுகின்றது. அண்மையில் அமெரிக்கப் போர் விமானங்கள் இலங்கை வான் பரப்புக்குள் அத்துமீறிப் பறந்ததாகச் செய்திகள் வந்தபோதும் அதை விசாரிக்கவுள்ளதாக இலங்கை கூறியதும், அப்படியொரு சம்பவம் நடைபெறவே இல்லை என்று அமெரிக்கா கூறியிருந்தது நினை வில் கொள்ளும் அதேவேளை, கடந்த வாரம் அமெரிக்கப் படைகளும், இலங்கைப் படைகளும் அவசர காலப் பொதிகளைப் போடும் ஒத்திகையையும் அம்பாறையில் நடத்தியிருந்தன. பின்னர், இரண்டு நாட்டுப் படைகளும் போர் விமானப் பயிற்சியிலும் ஈடுபட்டன. இதைத் தொடர்ந்து பிளேக் இலங்கை வருகை தர வுள்ளார் என்று செய்திகள் வெளி யாகியது என்பதையெல்லாம் பார்க்கும்போது அமெரிக்கா, இலங்கை விரும்பாவிட்டாலும் தனது தலையீட்டைச் செய்ய எத்தனிக் கின்றது என்பது புலனாகின்றது.

அரபு நாடுகளில் ஏற்படுத்தப்பட்ட அரசியல் குழப்பங்களும், இலங்கை யின் நண்பரான கடாபியின் ஆட்சி வீழ்த்தப்பட்டுள்ள பின்னணியிலும், இலங்கைக்கு எச்சரிக்கை விடுக்கும் பாணியிலும் அமெரிக்கா நடந்து கொள்கின்றது என்று ஆர்வலர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

இந்தியாவும், சீனாவும் தமக்குள் ளான பிராந்திய நலனோடு இலங்கையை அணுகுவது உலகறிந்த பரகசியம். அதேபோல் அவ்விரு நாடுகளையும் இலங்கை நம்புவது தனது தேவைகளிலிருந்து என்பது வெளிப்படை. இந்த நிலையில் லிபியாவுக்குப் பின்னர், அமெரிக்காவின் கழுகுப் பார்வையில் இலங்கை சிக்கிவிடாமல் இருக்க வேண்டியது மிக மிக எச்சரிக்கையான தேவையாகும்.

# அவலம் சுமந்த அகதிகள்



'இதென்னண்ணை சனம் இப்பிடி நிற்குது...?" இளைய சகலன் அவனிடம் கேட்டான்.
'எல்லாம் எங்களை உங்களைப் போல ஆட்கள்தான். பஞ்சப்பரதேசியள்" கூறிவிட்டு அவன் சிரித்தான்.
சுமார் இரண்டு மணித்தியாலங்களின் பின்பு இரு அரச உத்தியோகத்தர்கள் வந்தார்கள். அருகில் உள்ள தரப்பாள் வீட்டுக்குள்ளிருந்து பிளாஸ்ரிக் மேசையும் கதிரைகளும் வெளியே எடுக்கப்பட்டு ஒரு மரநிழலின் கீழ் போடப்பட்டன.
"எல்லாம் தள்ளி நில்லுங்கோ. வெக்கையாக் கிடக்குது." அரச உத்தியோகத்தர் ஒருவர் கூறிக்கொள்கிறார்.
'ம்... சனங்களைக் கண்டால் சில அரசாங்க உத்தியோகத்தர்மாருக்கு அடக்கி வெருட்டுற மிடுக்குக் குணம் வந்திடும்..." அவன் கூறிக்கொள்ள... அதைக்கேட்டு இளைய சகலன் சிரித்தான்.

**அவளுக்கு** அழ வேண்டும் போல இருந்தது. சகலன் கூறியது உண்மைதான் எனவும் அவளுக்குள் புலப்படத் தொடங்கியது.

"உள்ள கழிவுகள் எல்லாத்தையும் கடற்தண்ணீர் உள்வாங்கிக் கரைச்சு வைச்சிருக்குது. அது தண்ணியோடை திரும்ப வந்து உடம்பில பட்டுதெண்டால் சொறி, சிரங்கு நோயள் வரத் தொடங்கியிடும்."

இளைய சகலன் கூறியதும் அருவருத்துக்கொண்ட அவர்கள், அவசரம் அவசரமாக உடுப்புகளை மாற்றிக்கொண்டு குளிப்பதற்காக கிணற்றடிக்குச் சென்றார்கள். கிணற்றைச் சுற்றி ஆட்கள் குறைவாக அதுவும் பெண்களே நின்றிருந்தார்கள்.

அவனுக்குக் கூச்சமாக இருந்தது.

"நீ... குளிச்சிட்டுவா குஞ்சு.... நான் பிறகு குளிக்கிறன்..." என்று கூறிவிட்டு அவன் ஒதுங்க முயற்சிக்கையில், கிணற்றடியில குளித்துக்கொண்டிருந்த ஒரு ஆச்சி அவனைக் கூப்பிட்டாள்.

"எட தம்பி! இந்தப் பிள்ளை ஆர் மோனை?"

"என்ர மனிசி ஆச்சி..."

"அப்பேன்ரா மோனை வெட்கப்படுகிறாய்? அவளோடு பக்கத்தில நிண்டு குளியன். நிலம் வெளுத்த உடன இடமில்லாமல் போகப்போகுது..."

காலைவேளை குளிர்நீரில் குளித்தால் ஆச்சியின் உடல் மெதுவாக நடுங்கிக்கொண்டிருந்தது.

"நீங்கள் வாங்கோ... குளிக்க..." அவள் அவனை அழைத்தாள். அவன் அவளருகில் வந்து அவளிடமிருந்து வாளியையும் கயிறையும் வாங்கினான்.

"அத்தான் இந்தாங்கோ... வாளியும் கயிறும்..." சின்னத்தங்கை வீட்டின் வாசலில் நின்று குரல் கொடுத்துவிட்டு, கிணற்றடியை நோக்கி நடந்து சென்றாள். மைத்துனி கொடுத்த வாளியை வாங்கிக்கொண்டு கிணற்றடியை நோக்கிச் சென்றபோது ஆச்சி கேட்டாள்.

"உந்தப் பிள்ளை உன்ர மச்சாளே...?"

"ஓமாச்சி... இவவின்ர தங்கச்சி..."

"இவ்வளவு நாளும் எங்கை இருந்தனிங்கள்...?"

"இரணைப்பாலையில..."

"அங்கலையும் ஆமி வந்திட்டான் போலக்கிடக்குது..." ஆச்சி கேட்டாள்.

"ஓமாச்சி... ஷெல்லுகள் விழத் தொடங்கியிட்டுது..." அவன் கூறிக்கொண்டே, கிணற்றில் இருந்து நீரை அள்ளி தன் மனைவியிடம் கொடுக்க, அவள் தன்னுடலில் ஊற்றிக் கொண்டிருந்தாள்.

"ஆச்சியின்ர இடம் எது...?" அவன் கேட்டான்.

"முரசுமோட்டை தம்பி..." பதில் கூறிய ஆச்சியின் முகம் மாறுதல் அடைந்தது. அந்த விடிகாலை வெளிச்சத்தில் அவன் கண்டுகொண்டான். ஆச்சியிடம் மேற்கொண்டு எதுவும் கேட்கவில்லை அவன். ஆச்சியும் பதில்கூற விரும்பாதவளாக அந்தளவுடன் பேச்சை நிறுத்திக்கொண்டு உடுப்பு மாற்றுவதற்காக கிணற்றடியை விட்டு அப்பால் அகன்றாள். அவனுக்கு ஓரளவு யூகிக்கக் கூடியதாக இருந்தது. முகமலர்ச்சியோடு தன்னுடன் உரையாடிய ஆச்சி, தனது இருப்பிடம் முரசுமோட்டை என்றதும், அத்தோடு பேச்சை நிறுத்தியதில் இருந்து ஆச்சியின் வாழ்க்கையில் ஏதோ பேரிடியான நிகழ்வு ஒன்று நடந்திருக்க வேண்டும் என அவனால் புரிந்துகொள்ள முடிந்தது.

"எனக்குக் காணுமப்பா... இனி நீங்கள் குளியுங்கோ..." அவள் கூறிவிட்டு உடுப்புக்களை வாளியில் அலம்பத் தொடங்கினாள். அவன் கிணற்றிலிருந்து நீரை அள்ளி உடலிலே வார்க்க ஆரம்பித்தான்.

குளியல் நிகழ்வு முடிந்து வீட்டின் முன் வந்தபோது இளைய சகலனோடு ஒருவர் உரையாடிவிட்டுப்போவது தெரிந்தது. ஈர உடுப்புக்களை முற்றமாய் இருந்த அச்சிறிய பகுதியில் கட்டப்பட்டிருந்த ஒரு கொடியில் போட்டுவிட்டு அவன் திரும்புகையில் இளையசகலன் கூறினான்.

"அண்ணை இடம்பெயர்ந்து வந்த ஆட்களுக்கு நிவாரணம் குடுக்கப் போகினமாம். எல்லாரையும் ஜி.எஸ். வீட்டைப்போய் பதியட்டாம்."

"ஆர் சொன்னது? அவன் திரும்பிக்கேட்டான்.

"இப்ப வந்தவர் சொல்லிப் போட்டுப் போறார்..."

"நிவாரணச் சாமான் உவங்களுக்கு எங்காலை...?"

"முந்தநாள் செஞ்சிலுவையின்ர கப்பல் வந்தது..."

"விதானையின்ர வீடு எங்க கிடக்குது? போய் பதியுறதுக்கு?"

"நீங்கள் தேத்தண்ணியைக் குடிச்சிட்டு வாங்கோவன். ரண்டுபேருமாப்போவம்."

"சரிபோவம்..." அவன் கூறிவீட்டு வீட்டுக்குள் சென்றான். மனைவி கொடுத்த தேநீரை வாங்கிக் குடித்துவிட்டு, குடும்ப அட்டை மற்றும் அடையாள அட்டை என்பனவற்றை எடுத்துக்கொண்டு சகலனுடன் புறப்பட்டான்.

தறப்பாள் வீடுகளுக்கிடையினால் நடந்துசென்று, ஒருவாறாக விதானையாரின் வீட்டைத் தேடிப்போனபோது அங்கு குழுமி நின்ற சனங்களைக் கண்டதும் திகைத்துப் போனார்கள்.

"இதென்னண்ணை சனம் இப்பிடி நிற்குது...?" இளைய சகலன் அவனிடம் கேட்டான்.

"எல்லாம் எங்களை உங்களைப் போல ஆட்கள்தான். பஞ்சப்பரதேசியள்" கூறிவிட்டு அவன் சிரித்தான்.

சுமார் இரண்டு மணித்தியாலங்களின் பின்பு இரு அரச உத்தியோகத்தர்கள் வந்தார்கள். அருகில் உள்ள தரப்பாள் வீட்டுக்குள்ளிருந்து பிளாஸ்ரிக் மேசையும் கதிரைகளும் வெளியே எடுக்கப்பட்டு ஒரு மரநிழலின் கீழ் போடப்பட்டன.

"எல்லாம் தள்ளி நில்லுங்கோ. வெக்கையாக் கிடக்குது." அரச உத்தியோகத்தர் ஒருவர் கூறிக்கொள்கிறார்.

"ம்... சனங்களைக் கண்டால் சில அரசாங்க உத்தியோகத்தர்மாருக்கு அடக்கிற; வெருட்டுற மிடுக்குக் குணம் வந்திடும்..." அவன் கூறிக்கொள்ள... அதைக்கேட்டு இளைய சகலன் சிரித்தான்.

"உந்த நிவாரணத்துக்குள்ள இனி எத்தனை வெட்டுக்கொத்துகள் நடக்கப்போகுதோ கடவுளுக்குத்தான் தெரியும்..."

அவர்களுக்குமுன்பாக நின்ற ஒரு நடுத்தரவயதுடையவர் கூறிக் கொள்கிறார்.

எல்லாரும் வரிசையில் வாங்கோ. அப்பதான் வேளைக்குக் குடுத்து முடிக்கலாம்.

அரசாங்க உத்தியோகத்தர் ஒருவர் மீண்டும் கூறிக்கொள்கிறார். ஆனால் குழுமியிருந்த சனம் அதைச் செவிமடுக்காது நிற்பதைக் கண்டதும், அந்த உத்தியோகத்தர் தனக்கு முன்பாக நின்றவர்களிடமிருந்து குடும்ப அட்டை மற்றும் சகலனின் அட்டையையும் வாங்கிக்கொண்டுபோய் சனங்களுக்கு மேலாக கையை நீட்டி அவரிடம் கொடுத்துவிட்டான். கொடுக்க இயலாதவர்கள் முந்திக் கொடுத்தவர்களையும் அந்த அரசாங்க உத்தியோகத்தரையும் வாயிலே வந்தபடி வசைவார்த்தைகளால் திட்டத் தொடங்கினார்கள்.

நாங்கள் பின்னுக்கு வரிசையில் நிற்கிறது விதானையாருக்குத் தெரியேல்லையோ இருட்டோடை வந்து எவ்வளவு நேரமாக் காவல் நிற்கிறம். கொஞ்சம்கூட மனச்சாட்சி இல்லாததுகள்..."

சனக்கூட்டத்தின் நடுவில் இருந்து தெறித்துவிழும் கண்டன வார்த்தைகளை அந்த அரச உத்தியோகத்தர் கவனத்திலெடுக்காதது, எல்லோரையும் விலகிப்போகும்படியும், பெயர் கூப்பிடும்போது, பெயருக்குரியவர் மட்டும் எழுந்து வரும்படியும் பணித்துக்கொண்டார்.

சுமார் அரைமணித்தியாலத்தின் பின் அவர்கள் இருவரினதும் பெயர்கள் வாசிக்கப்பட்டபோது, அடையாள அட்டை சமர்ப்பித்து பதிவுகள் மேற்கொள்ளப்பட்ட பின், சிறிய தொரு கடதாசித் துண்டொன்றில் முழுப்பெயர், குடும்ப அங்கத்தவர் எண்ணிக்கை முதலியவற்றோடு உத்தியோகத்தரின் இறப்பர் முத்திரையும் பொறிக்கப்பட்டு வழங்கப்பட்டது.

"துண்டு ஒரு மாதிரி வாங்கியாச்சுது. இனிச் சங்கக் கடைக்குப்போக வேணும்..." அவன் கூறினான்.

"எந்தக் கடையெண்டு போட்டிருக்கு துண்டில பாருங்கோ." இளைய சகலன் கேட்கவும் அவன் தனக்குத் தந்த கடதாசித்துண்டைப் பார்த்தான். 'கடை: M 40' என்று அதில் பதியப் பட்டிருந்தது. அவனுக்கு அந்தக் கடை இலக்கம் எங்குள்ளது என்பது தெரியவில்லை. பக்கத்தில் நின்ற ஒரு வரிடம் காட்டி விளக்கம் கேட்டபோது, அவர் அவனிடமிருந்து துண்டை வாங்கிப் பார்த்துவிட்டுக் கூறினான்.

"இது மாத்தளன் சந்தியில கிடக்கிற கடை தம்பி..."

"என்னெண்டு உங்களுக்குத் தெரிஞ்சது..?" இளைய சகலன் கேட்டான். அவர் சிரித்துவிட்டுக் கூறினார்.

"M- என்று போட்டால் மாத்தளன். A- என்று போட்டால் அம்பலவன் பொக்கணை. V- என்று போட்டால் வலைஞன் மடம்..."

"அட! அப்படியே சங்கதி. உங்களுக்கு என்ன எழுத்துப்போட்டிருக்குது.? அவன் கேட்டான்.

"எனக்கு A-26 என்று போட்டிருக்குது. அம்பலவன் பொக்கணை."

"சரியண்ணை. ரொம்ப நன்றி. நாங்கள் போட்டுவாறம்... கூறிவிட்டு அவர்கள் இருவரும் மீண்டும் தரப்பாள் வீடுகளுக்கு இடைவழியாக வந்து, மாத்தளன்-முள்ளிவாய்க்கால் பிரதான சாலையில் ஏறி மாத்தளன் சந்தியை நோக்கி நடக்கத் தொடங் கினார்கள்.

வெயில் நன்றாக ஏறிவிட்டிருந்தது. சாலையில் வாகனங்கள், மிதிவண்டிகள் எனப் போக்கும் வரவுமாக ஈடுபட்டுக்கொண்டிருந்தன. சாலை ஓரத்தில் வளர்ந்து நின்ற ஒரு வடலிமரத்திலிருந்து மட்டக்கங்குகளை ஒருவர் விறகுக்காக வெட்டிக்கொண்டிருந்தார். அருகே ஒரு சிறுவியாபாரி தனது பொருட்களைக் கடதாசி ஒன்றில் பரப்பிவிட்டு, பொருட்களைப் பற்றி அறிவிப்புச் செய்துகொண்டிருந்தார்.

"வெயில் நல்லா ஏறியிட்டுது..."

"ஓமண்ணை..."

"வீட்டிலை அதுகள் என்ன பாடோ தெரியாது. எங்களைக் காணேல்லை என்றவுடன் இயக்கம் புடிச்சுதோ தெரியாது எண்டு யோசிக்கப் போகுதுகள்." அவன் கூறி முடிக்கவில்லை. அவனோடு கூட வந்த சகலன் பதற்றத்துடன் சொன்னான்.

"அண்ணை அங்க நிமிர்ந்து றோட்டைப் பாருங்கோ. இயக்கத்தின்ர 'பிக்கப்' அவன் நிமிர்ந்து பார்த்தான்.

எதிரே வரும் வாகனத்தின் வேகத்தைப் பார்த்ததும், ஏதோ ஒரு விபரீதமான செயல் என்பதை ஊகித்துக் கொண்டான்.

அடுத்து அவன் செய்த செயல்...?

**(அவலம் தொடரும்...)**



நம்பிக்கை இமயமலை போன்றது.

காந்தியடிகள்

## வாரம் ஒரு திருக்குறள்



**வாய்மை**

**"மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானஞ்செய் வாரின் தலை"**

ஒருவன் தன் மனத்தோடு பொருந்த உண்மை பேசுவானானால், அவன் தவத்தோடு தானமும் ஒருங்கே செய்வோரை விடச் சிறந்தவன்.

**குறள்:295**


## எப்படி மிதக்கிறது கப்பல்?



சிறிய கப்பல்கள், பெரிய கப்பல்கள் என்ற வித்தியாசமின்றி எல்லா கப்பல்களுக்கும் அதிக எடை கொண்டவை. ஆகவே ஒரு கப்பல் தண்ணீரில் இருக்கும்போது அதன் உடற்பகுதி ஓரளவுவரை தண்ணீரில் அமிழ்ந்திருக்கும். அதாவது, கப்பலின் எடைக்குச் சமமான தண்ணீர் இடம்பெயரும் வரை அதன் உடற்பகுதி தண்ணீரில் அமிழும். 10 ஆயிரம் டன் எடையுள்ள ஒரு கப்பலின் உடற்பகுதி, அதே எடையுள்ள தண்ணீரை இடம்பெயரச் செய்யும். எனவே ஒரு கப்பலின் எடையைக் கூறுவதற்குப் பதிலாக, அது இடம்பெயரச் செய்யும் தண்ணீரின் எடையைக் கூறுகிறார்கள். அதாவது ஒரு கப்பலின் 'கப்பலில் கொண்டு செல்லக்கூடிய அதிகட்ச நிறை' 10 ஆயிரம் டன் என்று கூறுவார்கள்.

அமிழ்ந்துள்ள கப்பலின் ஒவ்வொரு பகுதியையும் தண்ணீர் அழுத்துகிறது. தண்ணீரில் கிடப்பு நிலையில் இருந்து ஏற்படும் அழுத்தங்கள் கப்பலின் உடற்பகுதியை நசுக்குகின்றன. ஆனால் அவை இந்த நடைமுறையில் ஒன்றையொன்று அமிழ்த்துச் சமநிலையை ஏற்படுத்துகின்றன. செங்குத்தான போக்கில் உள்ள அழுத்தங்களின் சக்தியே கப்பலின் எடையை ஒரு சமநிலைக்குக் கொண்டுவருவதாக ஆக்கிமிடிஸ் கருதினார்.

காற்றில் அமிழ்ந்துள்ள பொருட்களுக்கும் இந்தக் கொள்கை பொருந்தும். கியாஸ் உள்ளிட்ட எல்லா திரவங்களுக்கும் ஆக்கிமிடிஸின் கொள்கை பொதுவானதே. உதாரணமாக, பலூனை எடுத்துக்கொள்வோம். அது தனது பருமனுக்குச் சமமான எடையை விட இலேசாக இருந்தால் பறக்கும்.




## நல்லவன் வாழ்வான்

ஒரு ஊரின் எல்லைப்பகுதியில் ஒரு காளி கோவில் இருந்தது. கோவிலுக்குச் செல்லும் பாதையின் குறுக்கே அழுக்கான கிழிந்த ஆடை அணிந்து சோர்வாக ஒரு முதியவர் படுத்திருந்தார். அவர் தலைக்கு அடியில் ஒரு அழுக்கான துணிமூட்டை இருந்தது.

அந்த வழியாக சென்றவர்கள் அனைவரும் அவரது துர்நாற்றம் தாங்காமல் மூக்கைப் பிடித்துக் கொண்டே சென்றனர். அப்போது அந்த வழியாக வந்த ஒருவர், கோவிலுக்குச் செல்லும் பாதையின் குறுக்கே படுத்திருக்கிறீர்?, என்று சத்தம் போட்டார். மாறாக, முதியவரோ தண்ணீர் தாகமாக இருக்கிறது என்பதை சைகையால் காட்டினார். நமக்கு எதுக்கு வம்பு என்று நினைத்த அவர், அந்த இடத்தை விட்டு நகன்றார். அவரைப்போலவே அந்த வழியாக வந்த அனைவரும் முதியவர் கண்டுகொள்ளாமல் சென்றனர்.

அப்போது ஆடுகளை மேய்த்தபடி ஒரு இளைஞன் வந்தான். முதியவர் தண்ணீர் வேண்டும் என்பதாக கைகாட்டியபடியே படுத்திருந்தார். "அய்யா... பெரியவரே...!" அவன் மெல்ல அழைத்தான். அவர் லேசாக கண்ணை திறந்தார். உயிருடன் இருக்கிறார் என்று தெரிந்து கொண்டவன், உடனே வேகமாக சென்று குடுவையில் தண்ணீர் கொண்டு வந்தான்.

அவர் முகத்தில் சிறிது நீர் தெளித்தான். பின் குடிப்பதற்கு தண்ணீரும் கொடுத்தான். 'மடக்' மடக்கென்று நீர் பருகிய முதியவர், எழுந்து உட்கார்ந்தார். 'தம்பி' அவர் மெல்ல அழைத்தார். "என்னய்யா சொல்லுங்கள்"என்றான் அந்த இளைஞன்.

இப்போது பாதையை விட்டு சற்று தள்ளி அமர்ந்தார். தன் தலைக்கு அடியில் இருந்த அழுக்கு மூட்டையை எடுத்தார். "தம்பி, நான் சாவின் விளிம்பில் இருக்கிறேன். அதற்கு முன் இந்த மூட்டையை ஒரு நல்ல மனிதனிடம் ஒப்படைக்க நினைத்தேன். நிச்சயம் கோவிலுக்குப் பலர் வருவார்கள். பக்தர்கள் பலர் இருப்பார்கள். அவர்களில் ஒருவரிடம் இதைக் கொடுத்து விடலாம் என்று நினைத்தேன்.

ஆனால், என் எண்ணம் பொய்த்தது. அவர்களில் யாரும் மனிதர்கள் இல்லை. மாறாக, ஒருவர் ஒன்றைச் செய்தால் அதையே தானும் செய்யும் செம்மறி ஆட்டுக் கூட்டங்களாகத்தான் இருந்தார்கள். ஆனால், காளிதேவி என்னை ஏமாற்றவில்லை. ஆடுகளை மேய்க்க வந்த உன்னிடம் மனிதாபிமானத்தையும் உயர் பண்பையும் கண்டேன். நான் நினைத்த சரியான மனிதன் நீதான். நான் இந்த நாட்டின் பெரிய செல்வந்தன். எப்போதும் பேராசை கொண்டு, பொருள் சேர்ப்பதிலேயே என் வாழ்நாள் முழுவதையும் கழித்துவிட்டேன். எனக்கென்று குடும்பம் இல்லை.


"இந்த பொருளுக்காக என் சுற்றத்தையும், நட்பையும் கூட நான் இழந்தேன். ஒரு நல்ல துணிகூட நான் உடுத்தியது இல்லை. எனவே, இனியாவது நான் இத்தனை நாள் கட்டிக்காத்த, வாழ்நாள் முழுவதும் நான் உழைத்து சேர்த்த செல்வத்தை இந்த மூட்டையில் கட்டி வைத்திருக்கிறேன். இதை, ஒரு நல்ல மனிதன், அனுபவிக்கும் பொருட்டு உன்னிடம் ஒப்படைக்கிறேன். இதை வைத்து நீ நல்லா இரு" என்று கூறி, கிழவர் உயிர் துறந்தார்.

ஆடு மேய்க்கும் அந்த இளைஞன் மனம் வருந்தினான். உடனே அந்த பெரியவரை அடக்கம் செய்தான். பின் அந்த மூட்டையைத் திறந்து பார்த்தான். அத்தனையும் தங்கக்காசுகள். அதைக் கண்டதும் அதிர்ச்சியாலும், மகிழ்ச்சியாலும் அவனது உடல் சிலிர்த்தது. பின் ஒரு நிலைக்கு வந்தவன் இது காளியின் அருள் என்று எண்ணி, அந்த தங்கக்காசுகளை எடுத்துச் சென்றான். பிறருக்காக ஆடு மேய்க்கும் தொழிலைவிட்டான். தானே பல ஆடுகளும், மாடுகளும் வாங்கினான். ஒரு வீட்டையும் கட்டிக்கொண்டான். தனக்கென்று ஒரு நல்ல பெண் பார்த்து திருமணம் செய்து கொண்டான். ஏழை, எளிய மக்களுக்கு வேலை கொடுத்து அவர்களது வாழ்க்கைத்தரம் உயர பாடுபட்டான்.

**கதைசொல்லும் நீதி: எவன் ஒருவன் மனிதத்தன்மையுடன் வாழ்கிறானோ, அவனை இறைவன் ஒருநாளும் கைவிடமாட்டான் என்பதையே இந்தக்கதை நமக்கு உணர்த்துகிறது.**

## கண்ணீர் வருவது எப்படி?

கண்ணீர், உப்புச்சுவை உடைய நீர் என்பது அனைவருக்கும் தெரிந்த விஷயம். கண்ணுக்கு மேலாக நம் கண்ணில்படாத மாதிரி மறைவாக லேக்ரிமல் கிளாண்ட் என்று ஒரு சுரப்பி உள்ளது. இது சுரக்கும் லாக்ரிமா என்ற திரவம்தான் கண்ணீராக வருகிறது. சோகம், அளவுக்கு அதிகமான மகிழ்ச்சி, பயம் இவையெல்லாம் இந்தச் சுரப்பியைத் தூண்டிவிட்டு, கண்ணீரை வரவழைக்கிறது. பொதுவாக விழிக்கோளத்தில் தூசுபட்டால், அலம்பி விடுவதுதான் இந்தச் சுரப்பியின் வேலை. அதனால் தேவையான நேரத்தில் தான் இது தன் வேலையைச் செய்யும். புகை மற்றும் வெங்காயம் உரிக்கும்போதும் இந்த சுரப்பி, வேலை செய்து கண்ணீரை வரவழைத்துவிடும்.



## தகவல் களஞ்சியம்

*நைல் நதியின் மேல் செல்லும் நீரோட்டத்தை விட, அதன் அடிமட்டதில் செல்லும் நீரோட்டம் 6 மடங்கு அதிகமாக இருக்கும்.

*நமக்கு மகிழ்ச்சி அளிக்கும் செயல்களை நாம் பார்க்கும்போது, நமது விழித்திரையானது சாதாரண நிலையைவிட 45 சதவீத அளவில் விரிந்து விடுகிறது.

* உலகளவில் மனிதனின் இறப்பிற்கு அதிகளவில் காரணமாக இருப்பது கொசுக்கள்தான்.

* நீலநிற கண்களை உடையவர்களுக்கு இருட்டில், மற்றவர்களைவிட பார்வைத்திறன் அதிகம்.

* பண நோட்டுகள் காகிதம், பருத்தி போன்ற சிறப்பு கலவையின் மூலம் தயாரிக்கப்படுகிறது.



## வாரம் ஒரு நாடு
## ஆர்மீனியா

**தலைநகர்:** எரவன்

**பரப்பளவு:** 29 ஆயிரத்து 800 சதுர கிலோ மீற்றர்.


**மக்கள் தொகை:** 32 இலட்சத்து 30 ஆயிரம்

**எழுத்தறிவு:** 99 சதவீதம். **மொழி:** ஆர்மீனியன் **நாணயம்:** திராம் **மதம்:** கிறிஸ்தவம். **அமைவிடம்:** ஹரேஷியாவில் கருங்கடலுக்கும், கஸ்பியன் கடலுக்கும் இடையில் நிலம், சூழ அமைந்துள்ளது. மேற்கே துருக்கியும், வடக்கே ஜோர்ஜியாவும், கிழக்கே அசர்பெய்ஜனும், தெற்கே ஈரானும் உள்ளன. கிழக்கு ஐரோப்பாவும், மேற்கே ஆசியாவும் சந்திக்கும் இடத்தில் அமைந்துள்ளது.

**விளைபொருட்கள்:** தானியங்கள், உருளைக்கிழங்கு, ஒலிவ், பாதாம், திராட்சை, **கனிமவளம்:** செம்பு, துத்தநாகம், அலுமினியம், மாலிப்டினம், சலவைக்கல்.

**தொழில்:** கிரானைட், சீமெந்து, இரசாயனம், துணி நெசவு, தரை விரிப்புகள்.

## வியப்பூட்டும் வெந்நீர் ஊற்றுகள்!





பூமியில் சில இடங்களில் தரைப்பரப்பின் அடியில் உள்ள நீர் மிகவும் சூடாகி கொதிநிலையை அடைகிறது. நீரின் கொதிநிலை 212 டிகிரி பரனைட். ஆனால் மிகுந்த அழுத்தத்தினால் கொதி நிலையை அடையும்முன்பே மிகச் சூடடைந்துவிடுகிறது. பிறகு கொதிநிலையை அடைந்த உடனே நீராவியாகி விரிவடையத் தொடங்குகிறது. அவ்வாறு விரிவடையும்போது நீரை மேலே தூக்குகிறது. இதனால் நீர்ப்பரப்பில் அழுத்தம் குறைய, அப்பரப்பில் உள்ள தண்ணீர் கொதிநிலையை அடைந்து மேலும் நீராவி உண்டாகிறது. இம்மாதிரி சேரும் நீராவியின் விசையால் தண்ணீர் மேலே தூக்கப்பட்டு தரைப்பரப்பில் இருந்து 15 முதல் 20 மீற்றர் உயரம் வரை பீய்ச்சி அடிக்கப்படுகிறது. பிறகு நீரூற்றுப் பாதையில் மேலும் குளிர்ந்த நீர் வந்து சேர, அது கொதிநிலை அடைந்து, நீராவி மேலும் நீரை வெளியே தள்ளுகிறது. இந்தச் சுழற்சி தொடர்கிறது.

எரிமலைகள் உள்ள பகுதிகளில் வெந்நீர் ஊற்றுகளும், கொதி நீரூற்றுகளும் அதிகமாகக் காணப்படுகின்றன. குறிப்பாக தென் அமெரிக்கா, ஜப்பான், மலாய் ஆர்ச் பிலாகோ, இத்தாலி போன்ற நாடுகளில் வெந்நீரூற்றுகள் உள்ளன. ஐஸ்லாந்து, நியூசிலாந்து, யெல்லாஸ்டோன் பார்க் ஆகிய இடங்களில் இவை அதிகமாக உள்ளன. 'கெய்ஸர்' என்று அழைக்கப்படும் கொதிநீரூற்று தரையில் இருந்து 15 மீற்றர் முதல் 80 மீற்றர் வரை பீறிட்டு அடிக்கும். நீரையும், நீராவியையும் பல மீற்றர் உயரத்துக்குப் பீய்ச்சி அடிக்கும்.

## கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்

**இங்குள்ள படத்தில் ஒரு மிருகத்தின் முன்பாதி மட்டும் தெரிகிறது அல்லவா? மீதியுள்ள பாகத்தையும் ஊகித்து அது எந்த மிருகம் என்று சரியாக கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.**





போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு புத்தகமொன்று பரிசாகக் காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 11.09.2011

**வர்ணம் தீட்டும் போட்டி இல.905**

தினமுரசு வாரமலர்

த.பெ.இல:1772, கொழும்பு. த.பெ.இல:167, யாழ்ப்பாணம்.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 903**

**பரிசுக்குரியவர்:** கே.கஜானன், உடுப்பிட்டி தெற்கு, உடுப்பிட்டி.

01. யோ.சிவரஞ்சினி, சரசாலை தெற்கு, சரசாலை.
02. க.பிரஜீன், கம்மடுவ, இறத்தோட்டை.
03 க.சியான்,கல்லூரி வீதி, திருகோணமலை.
04. சி.அபிஷா, சின்னக்கடை, மன்னார்.
05. எஸ்.செஞ்சிலூசியா, முரசுமோட்டை, கிளிநொச்சி.
07. கே.பிரியங்கா, புலோலி தெற்கு, புலோலி.
08. ம.கிருபாலினி, தென்னங்கும்புர, கண்டி.
09. எம்.எச்.ஷஹீலா, தர்ஹாநகர்.

(சென்ற வாரத் தொடர்ச்சி)

மனக்குழப்பம் காரணமாக ஏற்படும் தலைவலியின் குறிப்பிட்ட அறிகுறிகள் என்ன?

ஒரு வேலையை குறிப்பிட்ட நேரத்தில் முடிக்க வேண்டும் என்ற பதற்றம் காரணமாக தலைவலி ஏற்படலாம். வேலைப்பளு, அதிக தூக்கம், நீண்டதூரப் பயணம், உடல் தசைகள் அதிக அளவுக்குச் சுருங்குதல் காரணமாக இத்தகைய தலைவலி வரும். பொதுவாக இந்தத் தலைவலி தாங்கக்கூடியதாக இருக்கும். இந்தத் தலைவலியில் வாந்தி, குமட்டல் இருக்காது. வெளிச்சத்தைக் கண்டால் கண் கூசுதல், ஓசையைக் கேட்டாலே வெறுப்பு ஆகிய உணர்வுகள் இருக்காது.

தலைவலி இருக்கும்.

சுத்தியல்களால் அடிப்பது போல் வலி மண்டையைப் பிளக்கும். வாந்தி, குமட்டல் இருக்கும். வெளிச்சத்தைப் பார்த்தால் கண்கள் கூசும். இந்த வலி வரும்போது ஓசையைக் கேட்டாலே வெறுப்புணர்வு ஏற்படும். தலையைக் குனிந்தால் வலி ஏற்படும். நடந்தால் தலைவலி அதிகமாகும்.

உடலின் சிறு அதிர்வுகளுக்குக்கூட வலி அதிகமாகி வாந்தி வரும். வாசனை காரணமாகவும் ஒற்றைத் தலை வலி ஏற்படலாம். மேலே சொன்ன பொதுவான தலைவலிகளும் (குறைத் தூக்கம், பசி, ஐஸ்கிரீம், சொக்லெட் போன்ற உணவுப் பொருள்கள்..) ஒற்றைத் தலை வலியைத்

நன்றி-இணையம்




# தலைவலி இளமைக்கு சவால்!

எனினும் தசைகள் அதிக அளவுக்குச் சுருங்குதல் காரணமாக குழப்பம் தலைவலி ஏற்படும் நிலையில் தலையில் கை வைக்க முடியாத அளவுக்கு, சீப்பைக் கொண்டு தலையை வார முடியாத அளவுக்கு வலி இருக்கும்.

**ஒற்றைத் தலைவலியின் முக்கிய அறிகுறிகள் என்ன?**

மாதக்கணக்கில், வருஷக் கணக்கில் விட்டு விட்டு வரும் தலைவலி.

ஒற்றைத்தலைவலி



('மைக்ரேன்' Migraine) எனப்படுகிறது. பெயருக்கு ஏற்றாற்போல் இந்த வலி தலையில் ஒருபுறம் மட்டுமே வரலாம். தலையில் இரு புறமும் மாறி, மாறியும் அல்லது பிடரியில் வலி வந்தாலும் ஒற்றைத் தலைவலிதான்

மக்கள் தொகையில் 10இல் ஒருவருக்கு ஒற்றைத் தலைவலி பிரச்சினை உள்ளது! ஒருவரது இயல்பான வாழ்க்கையை முடக்கும் ஆற்றல் ஒற்றைத் தலைவலிக்கு உண்டு. அதாவது மருத்துவ விடுப்பு எடுத்துச் சிகிச்சை பெறும் அளவுக்கு இந்தத் தூண்டும்.

**ஒற்றைத் தலைவலிப் பிரச்சினைக்கு பாரம்பரியத் தன்மை உண்டா?**

உண்டு. குடும்பத்தில் அப்பா, அம்மா, மாமா, சித்தப்பா, உடன் பிறந்தோர் ஆகியோரில் யாராவது ஏற்கெனவே ஒற்றைத் தலைவலியால் பாதிக்கப்பட்டிருந்தால் ஒற்றைத் தலைவலி பிரச்சினை வர வாய்ப்பு உண்டு. ஆண்களைவிட பெண்களே ஒற்றைத் தலைவலி பிரச்சினையால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். குறிப்பாக மாதவிடாய் வருவதற்கு முன்பு பெண்களுக்கு ஒற்றைத் தலைவலி ஏற்படுகிறது. கர்ப்பிணிப் பெண்களுக்கு ஒற்றைத் தலைவலி வருவதற்கான வாய்ப்புகள் உண்டு.

**தொகுப்புத் தலைவலியின் அறிகுறிகள் என்ன?**

ஒற்றைத் தலைவலியில் மிகவும் கொடியது இந்த வகை. இந்தத் தலைவலி பெரும்பாலும் ஆண்களுக்குத்தான் வரும். இந்தத் தலைவலி தூக்கத்தில் வரும். தூங்கிக் கொண்டிருக்கும் நோயாளிக்கு வலியை உருவாக்கி அவரை எழச் செய்யும் ஆற்றல் இந்த வகை ஒற்றைத் தலைவலிக்கு உண்டு. ஏதாவது ஒரு பக்கம் மட்டுமே இந்தத் தலைவலி இருக்கும். வலி வரும் பக்கத்தில் உள்ள மூக்குத் துவாரத்திலிருந்து மூக்கில் நீர் ஒழுகும்.

ஒரே நாளில் மூன்று அல்லது நான்கு-முறை இந் தத் தலைவலி வரும். வாந்தி, குமட்டல் இருக்காது.

(தொடர்ச்சி அடுத்த வாரம்)



# 69 திருப்பங்கள் நிறைந்த பூலான்தேவியின் வாழ்க்கை வரலாறு

எல்லோருக்கும் – அவள் பயங்கரக் கொள்ளைக்காரி, படு பயங்கரக் கொலைகாரி என்று தான் தெரியும். அவள் அதுவும் ஒரு பெண் – ஏன் அப்படி மாறினாள் என்று எத்தனை பேருக்குத் தெரியும்? பூ ஒன்று புயலான கதை. ஏற்கனவே முரசில் பிரசுரிக்கப்பட்ட இப்பக்கங்கள், வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் பிரசுரிக்கப்படுகின்றன.

எனக்கு அழுகையாக வந்தது. மல்லாவே தன்து வாயால் என்னைப் போகச் சொல்லியிருந்தால் கூட நான் இப்படி மனம் வெதும்பியிருக்க மாட்டேன்.

அங்கு நடக்கும் சம்பவங்களுக்கும் தனக்கும் ஒரு தொடர்புமே இல்லாத மாதிரியும், நான் யாருடன் போனால் தனக்கென்ன என்பது போலவும் மல்லா வெகு அலட்சியமாக நடந்து கொள்வதைத்தான் என்னால் தாங்க முடியாமல் இருந்தது.

"என்ன யோசிக்கிறாய்? வா பூலான்!" என்று மறுபடி அழைத்தார் பூல்சிங்.

நான் முடிவு செய்துவிட்டேன்.

என்னைச் சுமையென்று நினைத்துத்தானே மல்லா கை கழுவிவிட நினைக்கிறான். இனியும் நான் இங்கிருந்தால் வெள்ளிக்காசுக்கும் மதிப்பிருக்காது.

பூல்சிங் எனக்கு அப்பா மாதிரித்தானே? போய்விடலாம். எனக்கு யார் இருக்கிறார்கள்? இந்த உலகத்தில் நான் ஒரு தனிப்பிறவி. தனி மனுஷி... அதிர்ஷ்டம் கெட்ட பிறவி.. என்னை எனக்கே பிடிக்கவில்லை. என்மீது எனக்கே வெறுப்பாக இருந்தது.

"என்ன புறப்படலாமா?" என்றார். பதில் சொல்ல நா எழவில்லை.

தொண்டைவரை வந்துவிட்ட விம்மலை வலுக்கட்டாயமாக அடக்கிவைத்திருந்தேன். எப்படி வாயைத் திறந்து பேசுவது? தலையை மட்டும் ஆட்டினேன்.

"உன் துணிமணிகள் இல்லையா?" என்று பூல்சிங் கேட்டார். அதற்கும் இல்லையென்று தலையை ஆட்டினேன்.

"சரியம்மா புறப்படு" என்றுவிட்டு முன்னால் சென்றார். என்னால் கால் எடுத்து வைக்க முடியவில்லை. கால்களை யாரோ பிடித்துத் தரையோடு சேர்த்து ஆணியடித்துவிட்டது போல இருந்தது.

"சே இது என்ன வெட்கம் கெட்டித்தனமாக இருக்கிறது...! மல்லா என்னை ஒரு புழுவாக நினைத்து அலட்சியம் செய்யும் போது நான் ஏன்... இப்படி இப்படி.. தயங்கவேண்டும்? என்று நினைத்தபடி என் கால்களை



அசைத்து ஒரு அடிகூட எடுத்து வைத்திருக்க மாட்டேன். பின்னாலிருந்து இடிமுழக்கம் போல மல்லாவின் குரல் கேட்டது.

"நில், இன்னும் ஒரு அடி எடுத்து வைத்தால் சுட்டுவிடுவேன்!" என்றான்.

சீட்டாட்டத்தில் இருந்து மல்லா எப்போது எழுந்தான். என் அருகே எப்போது வந்தான் என்றெல்லாம் எனக்குத் தெரியாது. மல்லா சொன்னதுதான் தாமதம் நான் அப்படியே அசையா-மல் நின்றேன்.

மல்லாவை நான் பார்க்கவில்லை. அவனை நேரடியாகப் பார்த்தால் எங்கோ அழுதுவிடுவேனோ என்று பயந்தேன்.

"இது என்ன விளையாட்டு விக்ரம்மல்லா? கன்ஷிராமுடன் பகைக்க நினைக்காதே!" என்றான் பூல்சிங்குடன் வந்திருந்த இருவரில் ஒருவன்.

"டேய் வாயை மூடு! கன்ஷிராம் என்ன கடவுளா? அவனும் கொள்ளைக்காரன். நானும் கொள்ளைக்காரன்." என்றான் மல்லா.

தர்க்கம் வளர்வதை விரும்பாத பூல்சிங் குறுக்கிட்டார்.

கன்ஷிராமின் ஆட்களுக்கும் மல்லாவுக்கும் வாய்த்தர்க்கம் தொடர்வதைக் கண்ட பூல்சிங்,

"இங்கே பார் மல்லா, உன்னை மிரட்டவோ, வலுக்கட்டாயமாகப் பூலானை இங்கிருந்து அழைத்துச் செல்லவோ நான் இவர்களை அழைத்துவரவில்லை. பூலானையே கேள். அவள் எப்படி விரும்புகிறாளோ அப்படியே செய்துகொள்ளட்டும்!" என்றார்.

மல்லா என்னை உற்று நோக்கினான். என் மனதில் என்ன இருக்கிறது என்று என் முகத்தில் அறிய விரும்பினான் போலும்,

"பூலான் நீ எங்களுடன் வருகிறாயா? இங்கேயே இருக்கப் போகிறாயா? சொல்லிவிடு நான் போய்விடுகிறேன்." என்றார் பூல்சிங்.

என் நிலை இருதலைக் கொள்ளி எறும்பாக

> **நில், இன்னும் ஒரு அடி எடுத்து வைத்தால் சுட்டுவிடுவேன்! என்றான் சீட்டாட்டத்தில் இருந்து மல்லா எப்போது எழுந்தான். என் அருகே எப்போது வந்தான் என்றெல்லாம் எனக்குத் தெரியாது. மல்லா சொன்னதுதான் தாமதம் நான் அப்படியே அசையாமல் நின்றேன். மல்லாவை நான் பார்க்கவில்லை. அவனை நேரடியாகப் பார்த்தால் எங்கோ அழுதுவிடுவேனோ என்று பயந்தேன்.**

மாறிவிட்டது. எந்தக் கைமாறும் கருதாமல் என்னைச் சிறையில் இருந்து மீட்டவர் பூல்சிங். அதற்காக வாழ்நாள் முழுக்க நன்றிக்கடன் பட்டவள் நான்.

அவர் முகத்தைப் பார்த்து நான் எப்படி மறுப்புத் தெரிவிப்பேன்? "ஐயோ துர்க்கையம்மா! இந்த இக்கட்டில் இருந்து என்னை எப்படியாவது விடுவித்துவிடு தாயே!" என்று மனதில் மன்றாடினேன்.

என் மனதில் எழுந்த எண்ணங்களையெல்லாம் எப்படித்தான் மல்லா ஊகித்துக் கொண்டானோ தெரியவில்லை. அவனே பூல்சிங்கிடம் என் சார்பாகப் பேசினான்.

"பூலான் உங்கள் மீது மதிப்பு வைத்திருக்கிறாள். என்னிடம் சொல்லியிருக்கிறாள். உங்கள் வார்த்தையை அவள் மீறுவதாகவோ நினைக்காதீர்கள். இப்போது அவள் உங்களுடன் வரமுடியா நிலையில் இருக்கின்றாள். ஏனென்றால் இந்த விடயத்தில் அவள் தனியாக முடிவு செய்ய முடியாது."

(திருப்பங்கள் தொடரும்...)

# சீமானுக்கு புதிய அவதாரம் ‘கண்டுபிடி கண்டுபிடி’

யதார்த்தமான பாத்திரங்களை ஏற்று நடித்திருக்கும் சீமான், முதல்முறையாக நகைச்சுவை கலந்த திகில் படத்தில் நடிக்க இருக்கிறார். அதுவும் கதாநாயகனாக நடிக்க இருக்கிறார். அப்புதிய படத்திற்கு ‘கண்டுபிடி கண்டுபிடி’ என்று பெயரிட்டிருக்கிறார்கள். இயக்குனர் பிரபு சாலமனிடம் உதவி இயக்குனராக பணியாற்றிய ராம் சுபாராமன் இப்படத்தின் மூலம் இயக்குனராக அறிமுகமாகிறார். இப்படத்தை பற்றி இயக்குனர் கூறியதாவது:- முழுக்க முழுக்க கிராமத்தில் நடக்கும் நகைச்சுவை கலந்த திகில் படம் இது. கதை இப்படித்தான் நகரும் என்று ஆரம்பம் முதல் இறுதிவரை யாராலும் யூகிக்க முடியாத வகையில், திரைக்கதை அமைக்கப்பட்டு இருக்கிறது. சி.பி.ஐ. டைரி குறிப்பு படத்தில் மம்முட்டி ஏற்ற கதாபாத்திரத்துக்கு நிகராக சீமானின் கதாபாத்திரம் உருவாக்கப் பட்டுள்ளது. தேனி மாவட்டத்தை சுற்றியுள்ள பகுதிகளில், கதாபாத்திரங்களுக்கு தேவையான முகங்களை கண்டுபிடித்து, சுமார் 50 பேர்களை அறிமுகப்படுத்துகிறோம். என்றார்.

இப்படத்தில் சீமானுக்கு ஜோடியாக கேரள அழகி ஐஸ்வர்யா தேவன் நடிக்கிறார். சுகுமார் ஒளிப்பதிவு செய்கிறார். சினேகன் எழுதிய பாடல்களுக்கு கல்கி இசையமைக்கிறார்.



# வீட்டுக்காரியாகிறார் சமீரா ரெட்டி

‘வாரணம் ஆயிரம்’ படம் மூலம் தமிழில் நாயகியாக அறிமுகமானவர் சமீரா ரெட்டி தெலுங்கு, இந்திப் படங்களிலும் நடிக்கிறார். இவர் கூறியதாவது: நான் நவம்பரில் வீட்டுக்காரியாகப் போகிறேன். திருமணம் செய்து கொள்ளப்போவதாக சந்தேகப்பட வேண்டாம் ஒரு வீட்டு உரிமையாளர் ஆகப் போகிறேன். மும்பையில் பெரிய வீடு கட்ட வேண்டும் என்பது என் நீண்ட நாள் கனவு. அது தற்போது நிறைவேறுகிறது. அங்குள்ள ஜுகு பகுதியில் இடம் வாங்கி வீடு கட்டிக் கொண்டு இருக்கிறேன். எனது தந்தையும், தம்பியும் அங்கேயே முகாமிட்டு கட்டுமானப் பணிகளை கவனித்து வருகின்றனர். எனது ஆசைப்படி வீட்டை வடிவமைத்து கட்டி வருகிறார்கள். நவம்பரில் கிரஹப்பிரவேசம் நடத்த உள்ளோம் என்கிறார் சமீரா.



எவ்வளவு கோடிக்கு விற்கிற
ாதும் என்றார். இந்த டீலுக்கு
8 கோடிக்கு மேலும் சம்பளம்
வட்டாரம். நம்பர் ஒன் ஹீரோ
‘ஹீரோயின்’ படத்தில் தலைப்
அவருக்காகவே படம் பிசினஸ்
ஸ்டார் நடிகர்கள் மட்டுமே
முதன்முறையாக இந்
யின் என்ற பெ

அ

# இந்தியில் ரமணா?

ஊழலுக்கு எதிராக மக்கள் மத்தியில் கிளம்பியிருக்கும் அலையை பொலிவூட் பட ஹீரோக்கள் தங்கள் படங்களில் பயன்படுத்த திட்டமிட்டுள்ளதாக பட வட்டாரம் கூறுகிறது. தமிழில், கப்டன் விஜயகாந்த் நடிப்பில் டைரக்டர் முருகதாஸ் இயக்கத்தில் வெளியாகி வெற்றி பெற்ற ‘ரமணா’ படத்தை இந்தியில் ‘ரீமேக்’ பண்ண படப்புள்ளிகள் யோசித்துள்ளார்கள். பொலிவூட்டில் உள்ள முன்னணி நாயகர்கள் ‘ரமணா’ படத்தை பார்த்தார்கள். ஊழலுக்கு எதிராக நாடு முழுவதும் விவாதம் கிளம்பியுள்ள சூழலில், ‘ரமணா’ போன்ற படம் ரசிகர்கள் மத்தியில் வரவேற்பை பெற வாய்ப்புள்ளது என்கிறது சினிமா வட்டாரம். இந்தியில் ‘கஜினி’ வெற்றிக்கு பிறகு ‘ரமணா’வை ரீமேக் பண்ண ஆர்வம் காட்டினேன். ஆனால் அது முடியாமல் போனது. சூர்யா நடிப்பில் உருவான ‘ஏழாம் அறிவு’ படம் வெளியான பிறகு தமிழில் விஜய் நாயகனாக நடிக்கும் படத்தை இயக்குகிறேன். பொலிவூட் ஸ்டார் ஹீரோ அக்சய் உடன் படம் பண்ண போறேன் என்கிறார் டைரக்டர் முருகதாஸ்.




# நாயகி தேடும் பிரகாஷ்ரா

தமிழ், தெலுங்கு இரு மொழிகளில் பிரகாஷ்ராஜ் இயக்க உள்ள ‘தோனி’ என்ற காதல் படத்தில் பாலிவுட் இளம் நடிகையும் தன் காதல் மனைவி போனி வர்மாவின் தோழியுமான முக்தாவை தனது லேட்டஸ்ட் படத்திற்காக இழுக்க பிரகாஷ்ராஜ் முயற்சி செய்தாராம்.

படத்தின் கதை அதில் வரும் நாயகி கதாபாத்திரம் பற்றியெல்லாம் பிரகாஷ்ராஜின் டீமிடம் கேட்ட முக்தா படத்தில் நடிக்க கையெழுத்து போடவில்லையாம். நாயகி தேடிய கதை சொல்கிறார் இயக்குநர்.

முதல் இடம் நாயகியான கவிதா நாயரை அந்த காலத்து சரோஜாதேவி மாதிரி இருக்காங்களே என்று வியக்க இளசுகள் ஏரியாவில் உதட்டை பிதுக்குகிறார்கள். ஆனால் தன் படத்தின் ஹீரோ யின் தேடிய கதையை படத்தின் டைரக்டர் பி.குமரனே விளக்கினார்.

படத்திற்கு ஹீரோயின் தேடிக் கொண்டிருந்த போது நிறையப் படங்கள் வந்தன. அதில் இந்த பெண்ணின் கண்களும் அழகும் எங்களை கவர்ந்தது. விசாரித்தால் பிரபல மலையாள இயக்குநர் ஹரிஹரன், தான் இயக்கப் போகும் புதுப்படத்திற்காக அவரை தேர்வுசெய்து வைத்திருந்த விபரம் தெரிந்தது. ரொம்ப இயற்கையாக இருக்க வேண்டும் என்று மேக்கப் போடாமல் வீட்டில் நிற்க வைத்து அவரே எடுத்த போட்டோதான் எங்கள் பார்வைக்கு வந்தது. நாங்க இந்த பெண்ணை அணுகி கேட்டபோது, ஹரிஹரன் சேர்ட்ட கேட்கணும். அவர் சம்மதித்தால்தான் நடிக்க முடியும் என்று சொல்லிவிட்டார். பின்னர் படத்தின் முழுக்கதையையும் அவரிடம் சொல்லித்தான் சம்மதிக்க வைத்தோம் என்றார் பி.குமரன்.



இட
கைவிடமா



# லாபத்தில் பங்கு கேட்கிறார் நாயகி!

பொலிவூட்டில் சல்மான் கான், ஷாருக்கான், அமீர்கான் ஆகியோர் லாபத்தில் பங்கு என்ற முறையில் தங்களது சம்பளத்தை பெறுகின்றனர். இந்த வரிசையில் இடம் பிடித்திருக்கிறார் பொலிவூட் ஹீரோயின் கரீனா கபூர். 'ஹீரோயின்' என்ற படத்தில் கரீனாவின் கால்ஷீட் கேட்ட பொலிவூட் தயாரிப்பாளர்கள், 'தனக்கு சம்பளமாக 8 கோடி தர வேண்டும்' என்றதும் அதிர்ந்து போனார்கள். சம்பளத்தை குறைத்துக்கொள்ளச் சொல்லி எவ்வளவோ கேட்டும் மறுத்துவிட்டார். வேறுவழியே இல்லையா என்றபோது மற்றொரு யோசனைக்கு ஒப்புக்கொண்டார். சம்பளமே வாங்காமல் நடிக்கிறேன். பிறகு படம் ...க்கு விற்கிறதோ அதற்கு ஏற்ப பங்கு கொடுத்தால் பே- ...இந்த டீலுக்கு தயாரிப்பாளர்கள் ஒப்புக்கொண்டனர். இதில் ...லும் சம்பளம் கிடைக்க வாய்ப்புள்ளது என்கிறது பொலிவூட் ...ஒன் ஹீரோயினாக கரீனா இருக்கிறார். ...த்தில் தலைப்புக்கான கேரக்டரில் அவர் நடிக்கிறார். இதனால் ...படம் பிசினஸ் ஆகும் என்கிறார்கள். இதுவரை சூப்பர் ...ள் மட்டுமே படவிற்பனையில் பங்கு பெற்றுவந்த நிலையில் ...றையாக இந்த பட்டியலில் இடம் பிடித்திருக்கு ம் சூப்பர் ஹீரோ ...ன் என்ற பெயரை தட்டிச் சென்றிருக்கிறார் கரீனா கபூர்.

# சிம்புவுடன் குத்தாட்டம் போட ஒப்புக் கொண்டார் கத்ரீனா

இயக்குனர் தரணியின் இயக்கத்தில் சிம்பு நடித்து வரும் படம் ஒஸ்தி. இப்படத்தில் ஒரு குத்தாட்ட பாடல் இடம் பெற இருக்கிறது. அப்பாடலில் சிம்பு மற்றும் சோனு சூட்டுடன் ஆடுவதற்கு நயன்தாரா மற்றும் ஸ்ரேயாவை தயாரிப்பு தரப்பு அணுகி இருப்பதாக, முன்பு தகவல்கள் வெளியாகின. ஆனால் இத்தகவல்களை மறுத்தார் சிம்பு. தற்போது ஒஸ்தி படத்தின் இறுதிக்கட்ட படப்பிடிப்பு நடந்து வருகிறது. இதனால் மீண்டும் இந்த குத்தாட்ட சர்ச்சை எழுந்திருக்கிறது. இது குறித்து விசாரித்தபோது, இப்பாடலில் ஆட வைக்க பிரபல பொலிவுட் நடிகைகளான தீபிகா படுகோன், கத்ரீனா கைப், பிரியங்கா சோப்ரா மற்றும் மல்லிகா அரோரா ஆகியோரிடம் ஒஸ்தி படக் குழுவினர் கேட்டுப் பார்த்தனர். யாரும் ஒத்துக்கொள்ளாத நிலையில் கத்ரீனா கைப் மட்டும், ஒரு கோடி ரூபாய் கொடுத்தால் நான் சிம்புவுடன் குத்தாட்டம் போடத் தயார் என்று சொல்லியிருக்கிறாராம். இதற்கு நடிகர் சிம்புவும், இயக்குனர் தரணியும் பச்சைக்கொடி காட்டிவிட்டார்களாம். இதை வைத்துப் பார்க்கும் போது பிரபல பொலிவூட் நடிகையான கத்ரீனா கைப் விரைவில் 'ஒஸ்தி' படத்தில் குத்தாட்டம் போடுவார் எனத்தெரிகிறது.





# அமெரிக்காவை அசத்தப் போகும் மங்காத்தா

ஹொலிவுட் சினிமா உலகமான அமெரிக்காவினை அஜித்குமாரின் மங்காத்தா கலக்கப் போகிறதாம். அஜித்குமாரின் 50ஆவது படமான மங்காத்தா அமெரிக்காவில் மட்டும் 70 திரையரங்குகளில் வெளியாகி றது. அமெரிக்காவில் இத்தனை திரையரங்குகளில், அஜித்தின் படம் வெளியாவது இதுவே முதல்முறையாகும். வெங்கட் பிரபு இயக்கத்தில் உருவாகியுள்ள மங்காத்தாவில் அஜித்துடன், அக்ஷன் கிங் அர்ஜுன், திரிஷா, லட்சுமிராய், அஞ்சலி, ஆண்ட்ரியா, பிரேம்ஜி அமரன் என மாபெரும் நட்சத்திரப் பட்டாளமே நடித்துள்ளது. இப்படத்திற்கு அட்டகாசமான இசையை கொடுத்திருக்கிறார் யுவன்சங்கர் ராஜா. வெளிநாட்டு விநியோக உரிமையை ஐங்கரன் பிலிம்ஸ் இன்டர்நஷனல் நிறுவனம் பெற்றுள்ளதால், இப்படம் அமோக வசூலை அந்நிறுவனத்திற்கு அள்ளித்தரும் என்று கொலிவூட் வட்டாரம் நம்புகிறது. ஆகஸ்ட் 31 அன்று மங்காத்தா வெளியாவது மட்டுமின்றி, அன்றுதான் இப்படத்தின் இசையமைப்பாளரான யுவனின் பிறந்தநாளும் வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

...பில்
...ஜய்
...டார் ஹீரோ
...முருகதாஸ்.

## ...ஷ்ராஜ

...வரே எடுத்த
...வந்தது. நாங்கள்
...து, ஹரிஹரன்
...ல்தான் நடிக்க
...னர்

# சயீப் கைவிடமாட்டாராம் கரீனாவின் நம்பிக்கை

இந்தி திரையுலகில் அழகு மயிலாக வலம் வருபவர் கரீனா கபூர். இவருக்கும் நடிகர் சயீப் அலிகானுக்கும் உள்ள காதல் இந்தி திரையுலகில் பரபரப்பாக பேசப்படுகிறது. முதல் மனைவி அமிர்தாவை சயீப் விவாகரத்து செய்துவிட்டார். கரீனா கபூரை சயீப் எந்த நேரமும் 2ஆவது திருமணம் செய்யலாம் என மும்பை திரையுலகில் பரபரப்பாக பேசப்படுகிறது.

இந்நிலையில் மும்பையில் இணைய இதழுக்கு கரீனா அளித்த பேட்டியில் கூறியதாவது: சயீப்புக்கும் எனக்கும் இருக்கும் காதல் முறிந்துவிட்டதாக கூறுவது முட்டாள்தனம். வருங்காலத்தில் ஒருவேளை சயீப் என்னை ஏமாற்றி விடுவாரோ என்று சந்தேகப்பட அவசியம் இல்லை. அந்த நாள் வரவே வராது. நான் அதிர்ஷ்டக்கார பெண். இருவருக்கும் காதல் இருக்கிறது. எனவே துரோகம் என்ற பேச்சுக்கே இடமில்லை. ஒருபோதும் அவர் என்னை கைவிடமாட்டார்.




# தேன் கிண்ணம்

## வழிதேடும் பயணங்கள்

முகம்தெரியா உறவுகளின்
முற்றுகையின் போது
முன்னேற முடியவில்லை
முற்றுகை தகர்த்து
வெளியேற முயலவுமில்லை
முட்களின் நடுவில்
முகம் மலர்ந்திருக்கும்
ரோஜாவாக பூத்துக் குலுங்கவே
விரும்புகிறது என்மனம்
மூன்றாம் பிறைபோல
தேய்ந்து சென்ற போதும்
முழுமதியாகுவேன் எனும்
நம்பிக்கையில்
நகர்ந்து கொண்டிருக்கின்றன
நாட்கள் மிக மெதுவாக.

ஆஷா, யாழ்ப்பாணம்.



## சொல்லிவிடு உன் காதலை!

ஏன் பெண்ணே...!
உன்னோடு நான்
உரையாடும் போதெல்லாம்
நீ உணரவில்லையா
என் காதலை?

உனக்காக
உன் வரவை எதிர்பார்த்து
நீ போகும் போது கூட...
ஒரு புள்ளியாய்
நீ மறையும் வரை...
உனை பார்க்கும்
நேரங்களிலும் கூட...
தெரியவில்லை உனக்கு
நான் உன்னைக்
காதலிக்கிறேன் என்று!

நீ காத்து நிற்கும்
கனப்பொழுதுகளில்
உன்னிடம் கையசைத்து
நான் விடைபெறும்
பொழுதுகள்
ஏன் உணர்த்த
மறுத்துவிட்டன
என் காதலை?

உன்னிடம்
காதல் பார்வை பார்க்கும்
என் விழிகளை
உன் பக்கம் இருந்து
திசை மாற்ற முடியாமல்
நான் தவிக்கையில்
உன் மனம்
கூறவில்லையா
என் காதலை?

இல்லை...
இவை யாவும்
உன் விழிகளினால்
நீ பார்க்க
மறுத்ததற்கு
வாய்ப்புகள் இல்லை...!

இன்னும் ஏனடி,
தயக்கம் கலந்த
பார்வையால் என்னைத்
தாக்குகிறாய்...?
இன்னுமோர் சலனத்தை
இதயம் ஏற்காது
சொல்லிவிடு
உன் காதலை!

ஹா.நுஸ்ரா, வவுனியா.

## வடக்குச் சூரியன்

மனிதர்கள் நாம்
மனசுண்டு வலியுண்டு
அதை உணர எந்த
மகானால் முடிந்தது...

யுத்தம் முடிந்தாலும்
தமிழனின் அவலம்
மடியாது போலும்...

உறவுகளையும்
பலிகொடுத்தோம்
ஊனக் காலும் கொண்டோம்...
ஊன்றுகோலும்
ஊன்ற சுதந்திரமில்லை...

உறவுகள் பிரிவையும்
உறவுகளைத் தேடியும்
வருந்தவும்... தேடவும்
விடுதலையில்லை...

அகதி வாழ்வு
யாருக்குப் புரியும்
வாழ்ந்திருந்தால்
வலியும் தெரியும்...

சுவாசத்தில் கூட
சுடு காடு
மணமே அடிக்கிறது...
சுதந்திரமாய்
வாழ தேசம்
எங்கே இருக்கிறது...

வடக்குச் சூரியன்
விடியல் தருமா...?
அன்றாவது தமிழனின்
சுதந்திரம்
விதைக்கப்படுமா...?

ஏரூர் முகைதீன், ஏறாவூர்.

## பிரிவாகும் உறவுகள்...

மனிதன் ஒரு சமூக பிராணி. தனித்து வாழாமல் உறவுகளுடன் வாழும் குணம் கொண்டவன். உறவுகள்தான் அவனை மெருகேற்றுகின்றது, மனதின் வெற்றிடங்களை நிரப்புகின்றது. அந்த உறவுகளை தளரவிட்டால் அதில் விரிசல் ஏற்பட்டுவிட்டால் மனதளவில் பாதிக்கப்படுவான். இருவர் இணைந்திருக்க வேண்டிய பல உறவுகள் இன்று தளர்ந்து விரிசலடைந்தே காணப்படுகிறது. முகமுகமாக இருக்க வேண்டிய உறவுகள் முதுகுமுதுகாக திரும்பியிருக்கின்றன. உறவை பேண தெரியாமல் உறவின் இனிய உணர்வுகளை இழந்து நிற்கிறான்.

உறவுகளை வலிமைப்படுத்த பேச்சு, பேசும் விதம் மிகவும் முக்கியமானதாகும். யுத்தக்களமான பேச்சுகள் பலமான பாலத்தையும் இடித்து தொடர்புகளை



துண்டித்துவிடும். தான் நினைப்பதை, விரும்புவதை பிறரிடம் கட்டளை பிறப்பித்து வற்புறுத்தி திணிக்காமல், பேச்சு என்னும் பாலத்தை சரியான அணுகுமுறையில் மெலிதாக அமைக்க வேண்டும்.

எப்பொழுதும் பிறரை குத்துகின்ற பேச்சுகள், மற்றவர்களைவிட தானே பெரியவன் என்பதை வெளிப்படுத்தும் பேச்சுகள், பிறரின் பலவீனங்களை விமர்சிக்கின்ற பேச்சுகள் என்று அனைத்து பேச்சுகளையும் தானே ஆக்கிரமித்து பேசிக்கொண்டிருந்தால் அவன் இருக்கிற உறவையும் இழந்துவிடுவான். சில காதல் ஜோடிகளை பார்க்கும்போது, அவர்களிடையே ஜோடி பொருத்தம் எதுவும் இருக்காது ஆனால் தங்களுடைய மனதை, எண்ணத்தை பேச்சால் வெளிப்படுத்துகிறார்கள். அங்கே உறவு பாலம் பிரிக்க முடியாத அளவிற்கு வலிமையடைகிறது. எனவே உறவை பேணுவதற்கு பேச்சு என்பது ஒரு சிறந்த கருவியாகும் அதனை கையாளக் கற்றுக்கொள்ளுங்கள்.

வீட்டில் மட்டுமல்ல வெளியே நண்பர்களிடமும், உறவினர்களிடமும் சென்று நல்லுறவை ஏற்படுத்தும் பழக்கம் இன்று குறைந்து வருகிறது. இன்னும் சிலர் அனைத்து உறவுகளையும் பகைத்து எங்களுக்கு யாருமே வேண்டாம் என்கிறார்கள். உறவுகளின் மூலமாக சந்தோஷங்களை சம்பாதித்துக் கொள்ளுங்கள், அதற்கான வாய்ப்புகள் இன்னும் உங்களிடம் உள்ளது. எல்லாவற்றையும் இழந்த பிறகு, கால விரயங்களை கடந்த பிறகு உறவின் சந்தோஷங்களை இழந்து விட்டேனே என்று வருந்துவதை விட இப்பொழுதே உங்கள் உறவை மேண்படுத்திக் கொள்ளுங்கள்.

## காலமெல்லாம் உன் மடியில்

இரவின் மடியில்
வெள்ளைமதி.
கடலின் மடியில்
மோதும் அலைகள்.
கொடியின் மடியில்
வண்ண மலர்கள்.
புல்லின் மடியில்
பனித்துளிகள்
உனது மடியில்
ஏழை நான்.

ஏ.எச்.எம்.றக்கீப்,
புல்மோட்டை-03.

## என் மனம்...

உதாசீனத்தால்
உதறப்பட்ட
உயிர்த்துடிப்புள்ள
ஜீவன்
என் மனம்...

தொட்டுச் செல்லும்
பேரலைகளால்
கடற்கரை மணலில்
சரிந்து விழுந்த
மனக்கோட்டை
என் மனம்....

கறையான் அரித்து
ஓட்டை விழுந்த
தொடர்கதைப்
புத்தகம்
என் மனம்....
சினத்தின் உச்சத்தில்
கோர்வையற்ற
நினைவுகளால
ஊமையாகும்
புல்லாங்குழல்
என் மனம்...

தாழ்வுணர்ச்சியாய்
தாக்கப்பட்டு
தலைகவிழ்ந்த
செந்தாமரை
என் மனம்...
தூவானமாய்
கொட்டும்
துன்பங்களை
சகித்துக்கொள்ளும்
பூமித்தாய்
என் மனம்...
விலைபேசித்
திரியும்
மானிடர்கள்
அறியாத
விலைமதிப்பற்ற
பொக்கிஷம்
என் மனம்...


ஏமாற்றங்களை
தாங்காது
எரிந்துபோன
வீணை நரம்பு
என் மனம்...

அன்புக்காய்
ஏங்கும்
அநாதையாகிப்போன
குழந்தையான
என் மனம்...

என் மனம்
இன்பமாய் திளைத்து
இருநொடி வாழ்ந்து
இமை மூட
காலம் வரும் எப்போது?...

ஆஷிகா, கொழும்பு-12

# காசநோய் பற்றிய விழிப்புணர்வு



**ஒ. விழிப்புணர்வு நடவடிக்கைகள்**

உலகில் 'காசநோய் தினம்' மார்ச்-24, மற்றும் வேறு நிகழ்வுகளில் காசநோய் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்தலாம்.

இதற்குக் கட்டுரைகள், ஓவியங்கள், நாடகங்கள், நடனம், வில்லுப்பாட்டு, வீதி நாடகம் என்பவற்றைப் பயன்படுத்தலாம்.

* காசநோய் கடுமையான சுகாதாரப் பிரச்சினை. இதுவே தொற்றுநோய்களில் அதிக அளவில் வயது வந்தவர்களைக் கொல்லுகின்றது. மூளைக் காசம் போன்ற நோய்கள் குறை-வடைவதாக இல்லை. இதனால் அதிக சிறுவர்கள் பாதிக்கப்படுகின்றனர். மேற்கூறியவற்றை நேர-டிக் கண்காணிப்பின் கீழ-ான சிகிச்சையினால் முற்றாகக் கட்டுப்படுத்தலாம்.

*காசநோய் முற்றாகக் குணப்படுத்தக் கூடியது. சமூகத்தில் பரவுவது கட்டுப்படுத்தக் கூடியது. ஒவ்வொரு 100 காசநோயாளருக்குச் சிகிச்சை அளிக்கும்போது 15 இறப்புக்கள் தவிர்க்கப்படுகின்றன.

**Dr. சீ. ஜமுனானந்தா**

*காசநோய் இளவயதினைப் பாதிப்பதால் சமூகப் பொருளாதாரப் பாதிப்பனை ஏற்படுத்துகின்றது.

*காசநோய் சமூகத்தில் பரவு-வதைக் கட்டுப்படுத்தலாம் போன்ற விழிப்புணர்வுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

**காசநோய் நலன் பேணலின் சமூகத்தின் பங்கு**

**சமுதாய நேரடிக் கண்காணிப்பிலான சிகிச்சை**

"உற்றவன் தீர்ப்பான் மருந்துழைத்துச் செல்வான் என்று அப்பால் நாற் கூற்றே மருந்து" எனத் திருக்குறளில் பொருட்பாலில் திருவள்ளுவர் கூறியமை சமுதாய நேரடிக் கண்காணிப்பிலான காசநோய்ச் சிகிச்சைக்குச் சாலப்பொருந்தும். அதாவது நோயைப் போக்கவல்ல மருந்து, நோயாளி நோயாளியைக் கண்காணிப்பவன் மருந்துவன், மருந்து என்பன சிகிச்சையில் அடங்குகின்றன.

காசநோய்க் கட்டுப்பாட்டில் சகல சமூக அங்கத்தவர்களும் ஈடுபடக் கூடிய சந்தர்ப்பத்தினைச் சமுதாய நேரடிக் கண்காணிப்பிலான சிகிச்சை அளிக்கின்றது. சமூகத்தில் காசநோய் பற்றிய அறிவு சகலருக்கும் கிடைப்பதால் நோய் அறிகுறிகளை ஆரம்பத்திலேயே அடையாளம் காணக் கூடியதாக இருக்கும்.

மேலும் நோய் அறிகுறி உடையவர்களின் சளியினை சேகரித்து மார்பு நோய்ச் சிகிச்சை நிலையத்திற்கு கொண்டுவர உதவி புரியக் கூடியதாக அமையலாம். காசநோய்க்குரிய மருந்துகளை நோயாளிகள் இருக்கும் இடத்திற்கு அருகில் வந்து நோயாளிகள் எடுப்பதற்கு நேரடியாக ஊக்குவிக்கலாம்.

சமூகத்தில் மருந்து எடுத்து, இடையில் கைவிட்ட நோயாளி-களைத் தேடிக் கண்டுபிடித்து மீளவும் சிகிச்சையினைப் பெற நடவடிக்கையினை எடுக்கலாம்.

காசநோய் தொடர்பாக சமூகத்தில் விழிப்பூட்டல் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். காசநோயாளருக்கு இலகுவில் இலவசமாக சிகிச்சை கிடைப்பதற்கு உதவலாம். இனம் காணப்பட்ட காசநோயா-ளிகள் ஒழுங்காக ஆறுமாதங்கள் மருந்தினை உள்ளெடுக்கின்றார்களோ என்பதனைக் கண்காணிக்கலாம். காசநோயாளிகளுக்கும், அவர்களது குடும்பத்திற்கும் ஆதரவு நல்கலாம்.

**காசநோய் பரவாது இருப்பதற்கான பொதுவான அறிவுரைகள்**

காசநோய் ஏற்படாது தடுக்க நோயைப் பரப்புவோரைக் கண்டுபிடித்து அவர்களுக்குச் சரியாக சிகிச்சைபெற வைத்தல் இன்றியமையாததாகும். நோயாளிகள் சரியான சிகிச்சையினைப் பெற அவரது குடும்பத்தவர்களும் உதவவேண்டும். அப்பகுதிச் சுகாதார சேவையாளர்களும் இதற்கு உதவ வேண்டும். காற்றோட்டமான சூரிய ஒளிபடும் இடத்தில் வசித்தல் வேண்டும். காசநோய்க் கிருமிகள் காற்றில் ஆறு மணிநேரம்வரை இருக்கும். 20 நிமிடத்தில் சூரியஒளி யில் அழிந்துவிடும்.

பொதுவான சுகாதாரப் பழக்கவழக்கங்களைக் கடைப்பிடிக்க வேண்டும். இருமும் போதும், தும்மும்போதும் மூக்கு வாய்ப்பகுதியி னைக் கைக்குட்டையினால் மூடிக் கொள்ள வேண்டும். கண்டகண்ட இடங்களில் சளி, எச்சில் துப்புவதைத் தவிர்த்தல் வேண்டும். நோயாளியில் சளியைக் கவனமாகச் சேகரித்து ஆழமாகப் புதைத்துவிடல் அல்லது எரித்துவிடல் வேண்டும்.

**கிராமிய காசநோய்க் கட்டுப்பாட்டாளர்கள்**

காசநோய் நகரம், கிராமம், சேரிப்புறம் எனப் பிரதேச வேறுபாடின்றிக் காணப்படுகின்றது. எனவே காசநோயாளர்களை இலகு வில் இனம் காணப்பட்டு சிகிச்சை பெற வெவ்வேறு வழிகளை நாடல் வேண்டும்.

நரகத்தின் வர்த்தக நிலையங்கள், மற்றும் தொழில் நிலையங்கள் என்பவற்றில் காசநோய் தொடர்பான வழிப்பூட்டல் நிகழ்வுகள் அமைதல் வேண்டும். தனிப்பட்ட வைத்திய நிலையங்களிலும் சளிப்பரிசோதனை செய்வதற்கு அதாவது இரண்டு கிழமைகளிற்கு மேல் இருமல் காணப்படின் சளிப்பரிசோதனை செய்வதற்கு வசதிகள் அமைக்கப்படல் வேண்டும். நகரங்களில் உள்ள கழகங்கள் கிராமத்தில், சேரிகளில் காசநோய்த் தடுப்பில் உதவவேண்டும்.

கிராமத்தில் கிராமிய காசநோய்க் கட்டுப்பாட்டாளர்கள், விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். நோய் அறிகுறி உடையவர்களை சளிப்பரிசோதனைக்கு உட்படுத்தி உதவலாம். மேலும் சேரிக-ளில் மருந்துகளை கிரமமாக உட்கொள்வதனை அவதானிக்கலாம்...

(தொடரும்...)

**எல்லாம் ஒரு சில ஆண்டுகளே!**

நாத்திகனாக இருக்கும்வரையில் எதைப்பற்றியும் அதிகமாகப் பாட முடிய வில்லையே?

நாத்திகத்தில் என்ன இருக்கிறது பாடுவதற்கு?

ஆத்திக உள்ளம் வந்த பிற்பாடுதான் ஆயிரக்கணக்கான பாடல்கள் பிறந்தன.

கடல் போன்று பரந்து விரிந்து நிற்பது கடவுள் தன்மை.

நீந்தத் தெரிந்தவன் அந்தக் கடலில் இறங்கிவிட்டால், ஒரே உற்சாகம்தான்.

நான் இன்னும் பார்க்கிறேன். கவிஞர்கள் என்று தங்களைச் சொல்லிக் கொள்ளும் சிலர், மேடைகளில் பாடும்போது, "நான் பெரியார் பாசறை யில் புடம்போட்டு எடுக்கப்பட்டவன்" என்கிறார்கள். அவர்கள் கவிதைகள் நிற்கவும் இல்லை. அவை கவிதை களாகவும் இல்லை.

பாசறையில் எப்படிப் புடம் போடுவதோ எனக்கும் புரியவில்லை.

எல்லாம் போலித்தனம்! அபத்தம்!

'கண்ணதாசன் எழுதுகிற அளவு நம்மால் எழுத முடியவில்லையே' என்று ஆதங்கப்படுகிறார்கள்.

நான் எழுதுகிற அளவுக்கு அவர்கள் எழுதவேண்டுமானால், முதலில் தாங்கள் இந்துக்கள் என்பதை அவர்கள் உணர வேண்டும்.

வே, உபநிஷத, இதிகாச புராணங்களைப் படிக்க வேண்டும்.

வெறும் வார்த்தை விளையாட்டுக்கள் பலிக்க மாட்டா.

மீண்டும் சொல்கிறேன். நம்முடைய பல்லாண்டு கால மூதாதையர்கள் ஒன்றும் முட்டாள்களல்ல.

திருமணத்துக்கென்று அவர்கள் சில சடங்குகள் வைத்திருக்கிறார்கள். அவை ஒன்றும் பார்ப்பனச் சடங்குகள் அல்ல. அந்தச் சடங்குகளில் இருந்து மாறுபட்டுச் சுயமரியாதைத் திருமணம் என்ற பெயரில் நாத்திகர்கள் ஒரு கோமாளிக்கூத்தை ஏற்படுத்தினார்கள்.

ஆடு, மாடு குட்டிச் சுவர் களுக்கிடையே கூடிக்கொள்கிற மாதிரி, அது ஒரு திருமண முறை.

தலைவர் முன்னிலையில் மாலை மாற்றுவதாம்! தாலியும் கிடையாதாம்.

மாலையைக் கழற்றியவுடனேயே மணப்பந்தமும் அகன்றுவிடுமே?

நாத்திகன், சடங்குகளை மட்டுமல்ல, மாதர் கற்பையும் மதித்ததில்லை.

"கற்பு என்ன, கற்பு! ஒருத்திக்கு ஒருவன் என்பதே முட்டாள்த்தனம்!" என்று பேசியவர் பெரியார்.

ஆகவே நாகரீக உலகத்தில் ஒரு காட்டுமிராண்டி தர்மத்தை உருவாக்க வந்தவர்களே நாத்திகர்கள்.

சில சுயமரியாதைத் திருமணங்களுக்கு நான் தலைமை வகித்திருக்கிறேன்.

தாலி அறுப்பதைப் பற்றியும், விதவை ஆவதைப் பற்றியும் சீர்திருத்தவாதிகள் பேசுவார்கள்.

சாதாரண மனித நாகரிகத்துக்கு ஒத்து வராத மடத்தனம் இது என்பது, அவர்களுக்கு மறந்தே போய்விட்டது.

எங்களூரில், 'நாத்திகனை நம்பி வீட்டுக்குள் விடாதே' என்பார்கள்.

'அவன் பண்பாடு தெரியாதவன். பவித்திரமில்லாதவன். யாருடைய பெண்டாட்டியையும் கை வைத்துவிடுவான்' என்பார்கள்.


தெய்வத்திற்குப் பயப்படாதவன் வேறு எந்த நியாயத்துக்குப் பயப்பிடுவான்?

பழைய காலங்களில் எது எது எங்கெங்கு இருக்க வேண்டுமோ, அது அது அங்கங்கே இருந்தது.

இப்போதோ, கழுதை கட்டிலில் படுத்திருக்கிறது! யானை தொட்டிலில் தூங்க ஆசைப்படுகிறது, பூனை புல்லாங்குழல் வாசிக்க விரும்புகிறது: புள்ளிமான் உப்புக்கண்டமாகிறது.

நாகரிகத்திலேயே தர்மம் தடம் புரளுமானால், நாத்திகத்தின் விளைவு என்ன?எனக்குத் தெரிந்தவரை, நாத்திகம் பேசிய உண்மையானவர்களில் பலர்

# கண்ணதாசனின் அர்த்தமுள்ள இந்துமதம்




சொத்திழந்தார்கள். சில உத்தமத் தொண்டர்கள், பெண்டாட்டியை இழந்தார்கள்.

அக்கிரமக்காரர்கள் மட்டுமேதான் அனுபவித்தார்கள்.

பூஜை அறைக்கும்; குளிக்கும் அறைக்கும் பேதம் தெரிந்தவன், ஆத்திகன்.

தாய்க்கும் தாரத்திற்கும் பேதம் தெரிந்தவன், ஆத்திகன்.

எதுவும் தாரம்தான் என்று கருதுகிறவன், நாத்திகன்.

தர்மம் தர்மம் என்று பயப்படுகிறவன், ஆத்திகன்.

அனுபவிப்பதே தர்மம் என்று நினைப்பவன், நாத்திகன்.

ஆத்திகன் மனிதனாக வாழ்ந்து தெய்வமாகச் சாகிறான்.

நாத்திகன், மனிதன் போலக் காட்சியளித்து, மிருகமாகச் சாகிறான். உண்மையிலேயே ஒருவன் நாத்திகம் பேசினால் அவன் உணர்ச்சியற்ற ஜடம்; ஆராயும் அறிவற்ற மூடம்.

பகுத்தறிவு ஒழுங்காக வேலை செய்யுமானால், அது கடைசியாக இறைவனைக் கண்டுபிடிக்குமே தவிரச் சூனியத்தைச் சரணடையாது.

**பெரியது கேட்பின்....**

சனற்குமாரத் என்ற மகாயோகியை நாரதர் அணுகி, 'ஐயனே! எனக்கு உபதேசம் செய்ய வேண்டும்' என்று கேட்டுக்கொண்டார்.

'நல்லது நாரதா! உபதேசம் செய்வதற்கு முன்னால் ஒரு வார்த்தை. உனக்கு ஏற்கெனவே என்னென்ன தெரியும் என்பதை முன்கூட்டிச் சொல்லிவிடு அதன் பிறகுதான் உதை உபதேசிக்க முடியும் என்பதைத் தெரிந்துகொள்ள முடியும்!" என்றார் சனற்குமார்.

நாரதர் தான் கற்ற வித்தைகளைக் கூறத் தொடங்கினார்.

"குருதேவா! எனக்கு ரிக், யஜுர், சாம, அதர்வண வேதங்கள் தெரியும். இதிகாச புராணங்கள் தெரியும். வேதங்களின் வேதமாகிய இலக்கணம், பிதுரு, கல்பம், கணித சாஸ்திரம், சகுன சாஸ்திரம், கால நிர்ணயம், தர்க்க சாஸ்திரம், நீதி சாஸ்திரம், நிருத்தம், பூதத்தை, போர்முறை, வான சாஸ்திரம், சர்ப்ப வித்தை, கந்தர்வ வித்தை, இவை அனைத்துமே தெரியும்" என்றார் நாரதர்.

அப்படிச் சொன்ன நாரதர் தன் சந்தேகம் ஒன்றையும் தெளிவுபடுத்தினார்.

"தேவா! இவ்வளவு வேத மந்திரங்களை நான் கற்றுக்கொண்டேனே தவிர, துன்பங்களைக் கடந்து செல்லும் ஆத்மயோகத்தை அறிந்தவனாக இல்லை. 'எவனொருவன் ஆத்மாவை அறிந்துகொள்கிறானோ அவனே துன்பத்தைக் கடப்பான்' என்று பெரியவர்கள் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன். தயைகூர்ந்து எனக்கு நீங்கள் துன்பத்தைக் கடக்கும் மார்க்கத்தைக் கற்றுத்தர வேண்டும்" என்றார் நாரதர்.

தொடரும்...

கடந்த இரு வாரங்களுக்கு முன் நடை பெற்று முடிந்த COPA AMERICA FIFA உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் உருகுவே வெற்றிக்கிண்ணத்தைத் தட்டிச் சென்று எதிர்பார்க்கப்பட்ட ஆர்ஜென்ரீனா மற்றும் பிரேசில் நாடுகளை அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

தொடர்ந்து தற்போது தென்அமெரிக்காவின் கொலம்பியா நாட்டில் இன்னொரு உதைபந்தாட்டப் போட்டி நடைபெற்று முடிவடைந்திருக்கிறது. இந்தப் போட்டி இருபது வயதுக்குட்பட்டோருக்கான FIFA உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி இப்போட்டியின் இறுதியாட்டம் இரண்டு வாரங்களுக்கு முன் நடைபெற்றது. இறுதியாட்டத்தில் கலந்துகொண்ட நாடுகள் பிரேசில் மற்றும் ஐரோப்பாவின் போர்த்துக்கல் நாடுகள். இதற்கு முன்னதாக 1991 இல் நடைபெற்ற 20 வயதுக்குட்பட்டோருக்கான உதைபந்தாட்டப் போட்டியில் பிரேசில் அணியை போர்த்துக்கல் அணி பெனால்டி முறையில் தோற்கடித்து வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரித்திருந்தது. இதேவேளை 2011 வெற்றியானது பிரேசிலின் வெற்றிக்கிண்ணம் பெறும் ஐந்தாவது சந்தர்ப்பமாகும். போர்த்துக்கல் நாடோ இதுவரையில் இரண்டு சந்தர்ப்பங்களில் மட்டுமே வெற்றிக் கிண்ணத்தைத் தனதாக்கி இருந்தது.

# மினி உலகக் கிண்ணம்


இம்முறை இறுதி ஆட்டத்துக்கு வந்த இரண்டு அணிகளுமே சமபலம் வாய்ந்தவையாகவே இருந்தன. ஆனாலும் பிரேசிலின் மிகத் திறமையான ஒரு வீரர் போர்த்துக்கல் நாட்டின் வெற்றிக்குக் குறுக்காக நின்றார் என்று கூறினால் அதில் பிழையில்லை. அவரது பெயர் ஒஸ்கார். பிரேசில் 3-2 என்ற கணக்கில் போர்த்துக்கல் நாட்டைத் தோற்கடிக்க அந்த மூன்று கோல்களையும் போட்டு Hatric சாதனை புரிந்தவர் ஒஸ்கார்.

ஆட்டம் ஆரம்பமாகி ஐந்தாவது நிமிடத்திலேயே ஒஸ்கார் முதல் கோலை அடிக்கிறார். ஆனால் போர்த்துக்கல் சமபலம் கொண்ட அணி என்பதை நிரூபிப்பது போல ஒன்பதாவது நிமிடத்தில் அலெக்ஸ் கோல்போட அணிகள் சமநிலை அடைகின்றன.

இது போதாதென்று 59ஆவது நிமிடத்தில் போர்த்துக்கல் அணியின் நெல்சன் ஒலிவோஸ் கோல்போட போர்த்துக்கல் அணி 2-1 என்று முன்னிலை வகிக்கலாயிற்று. ஆனால் பிரேசிலின் ஒஸ்கார் விட்டுக்கொடுப்பதாக இல்லை. 78 ஆவது நிமிடத்தில் ஒஸ்கார் தனதும், தன் அணிகளுக்குமான இரண்டாவது கோலைப்போட ஆட்ட நேர இறுதிவரை 2-2 என்று சமநிலையில் ஆட்டம் நிறைவு பெறுகிறது. இந்நிலையில் மேலதிக நேரத்துக்கு ஆட்டம் செல்லவே பரபரப்பு அதகரிக்கிறது. 111 ஆவது நிமிடத்தில் ஒஸ்கார் தனது மூன்றாவதும் பிரேசிலின் வெற்றிக்கானதுமான கோலை (Golden gold) அடிக்க 2011 இல் FIFA 20 வயதுக்கு உட்பட்ட சுற்றுப் போட்டியில் வெற்றிக் கிண்ணத்தைப் பெருமையுடன் பிரேசில் கைப்பற்றுகிறது. ஒஸ்கார் சாதனை வீரராகப் பரிணாமிக்கின்றார்.




# நம்பிக்கை வீண் போகாது





இலங்கை அணி இங்கிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டபோது டில்ஷான் அணித்தலைவராக நியமிக்கப்பட்டாலும் நிரந்தர அணித்தலைவர் என்ற வகையில் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. உலகக் கிண்ணப் போட்டிகளின் பின்னரான மாற்றங்களின் காரணமாக சங்கக்கார, மற்றும் மஹேல போன்றோர் அணித்தலைவர், உபதலைவர் பதவிகளில் இருந்து விலகிக்கொள்ளவே அந்த இடங்களை நிரப்பவேண்டிய நிலையில் டில்ஷான் அணித்தலைவராக நியமிக்கப்பட்டார். அவ்வேளையில் ஏனோ உபதலைவர் நியமிக்கப்பட்டிருக்கவும் இல்லை.

இதேவேளை இங்கிலாந்துக்கு எதிரான போட்டிகளும் இலங்கைக்கு வாய்ப்பாக அமைந்துவிடவில்லை. இப்பொழுது அவுஸ்திரேலிய அணி இலங்கையில் விளையாடிக் கொண்டிருக்கும் வேளையில் டில்ஷானின் தலைமைப்பதவி இவ்வாண்டு இறுதிவரை நீடிக்கப்பட்டுள்ளது. அதாவது இவ்வருடத்துக்குள் நடைபெறவிருக்கும் தென்னாபிரிக்கா, மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு எதிரான தொடர்களுக்கு டில்ஷானே அணித்தலைவராகக் கடமையாற்றுவார். இந்த நீடிப்பானது டில்ஷானுக்குக் கிடைத்த வெகுமதியாகவே கொள்ளப்படுகின்றது.

அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான இரண்டுக்கு இருபதுக்கு இருபது போட்டிகளிலும் இலங்கை அணி வெற்றிபெற்றிருந்தது. இதேவேளை ஐந்து ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் முதல் மூன்றில் தோல்விகண்டு தொடரை இழந்திருந்தாலும் அடுத்த இரண்டு ஆட்டங்களிலும் இலங்கை அணி அவுஸ்திரேலியாவைத் தோற்கடித்ததன் மூலம் கௌரவமான அணியென்ற பெயரையும் பெற்றுக்கொண்டது. அதோடு எதிர்வரும் டெஸ்ட் போட்டிகள் முக்கியம் என்பதால் டில்ஷானுக்கு ஒரு நம்பிக்கையையும் உத்வேகத்தையும் கொடுக்கத்தக்க வகையில் பதவிநீடிப்பு வழங்கப்பட்டிருக்கலாம். இந்தவகையில் தான் தெரிவுக்குழு அங்கத்தவர்களின் கருத்தும் செல்கிறது. இதேவேளை ஆரம்பத்திலேயே டில்ஷானை நீண்டகால அணித்தலைவராக நியமிக்காமல் அர்ஜுன ரணதுங்கவும் சாடியிருந்தார். இப்பொழுது அவரது கருத்தும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பது போலத் தெரிகின்றது.

இன்னொரு புறம் IPL போட்டிகள் முடிந்தும் முடியாத நிலையில் இலங்கை வீரர்கள் இங்கிலாந்துச் சுற்றுப்போட்டிக்குத் தயாராகும் வகையில் இலங்கைக்கு மீள அழைக்கப்பட்டபோது பலர் பலவித கருத்துக்கள் கூறினாலும், டில்ஷான் அத்தனை வீரர்களிலும் முதலாவதாக இலங்கை திரும்பி இருந்தார். அதன்பின்னரே ஏனைய வீரர்கள் வந்தனர். மேலும் போதிய பயிற்சி ஆட்டங்களில் கலந்து கொண்டு தன்னைத் தயார்ப்படுத்திக் கொள்ளவும் இதனால் டில்ஷானுக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. இந்த விடயம் டில்ஷான் பற்றிய உயர்வான கருத்தொன்றை கிரிக்கெட் வட்டாரங்களில் உருவாக்கி இருந்தது. அதுமட்டுமன்றி ஊடகங்களிலும் சந்தர்ப்பம் வரும்போதெல்லாம் டில்ஷானுக்குச் சார்பாக இவ்விடயம் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

டில்ஷானை வருட இறுதிவரை அணித்தலைவராக நியமித்தமை தொடர்பில் பிரதம தெரிவாளர் துலிப் மென்டிஸ் கருத்துக் கூறும்போது, நீண்டகாலம் என்பது டில்ஷான் அவுஸ்திரேலிய அணியை இலகுவாகக் கையாள சந்தர்ப்பத்தைக் கொடுக்கும் என்றும் கூறியுள்ளார். எனவே டில்ஷான் மீது பெரியதொரு நம்பிக்கை இருப்பது தெரியவருகிறது. அடுத்துவரும் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டிகளிலும் சிறப்பாக அணியை வழிநடத்தி இலங்கை அணியைக் கௌரவமான இடத்துக்கு டில்ஷான் கொண்டு வருவார் என்று நம்பலாம்.

## விளையாட்டு

ஜோசப் கிருஸ்ணா

# திறமைக்குக் கிடைக்கும் பரிசு



சர்வதேச மற்றும் ஐரோப்பிய உதைபந்தாட்ட வட்டகையில் சாமுவெல் ஈட்டோ என்ற பெயர் மிகவும் பிரசித்தம். கமரூன் நாட்டின் தேசிய அணியைப் பிரதி நிதித்துவப்படுத்துபவர் இவர். பல்வேறு ஐரோப்பிய நாடுகளின் கழகங்கள் உலகின் சிறந்த வீரர்களைத் தம் அணியில் சேர்த்துக்கொள்ள மிகுந்த பிரயத்தனங்கள் எடுத்துக்கொள்ளும். அவர்களுள் முதன்மையானவர்களுடன் ஒருவர் சாமுவெல் ஈட்டோ. இவர் தற்போது விளையாடிக் கொண்டிருக்கும் அணி இன்ரர் மிலான். இந்த அணியில் இருந்து இவரை ரஷ்ய நாட்டின் அன்ஸீ மக்காசக்லா அணி தன்வசமாக்கிக்கொள்ள 38.9 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலுத்தத் தயாராகிவிட்டதாகத் தெரியவருகிறது. இந்த அணியின் தலைவராக இருப்பவர் தற்போது 38 வயதாகும் பிரேசில் நாட்டின் முன்னாள் நட்சத்திரம் றொபேட்டா கார்லொஸ். இதுவே அன்ஸீ அணியின் கனதியைக் குறிக்கப் போதுமானதாகும். இவரோடு சாமுவேலும் சேர்ந்துவிட்டால் அன்ஸீ மிகப் பலமான அணியாகி சாதனைகள் பல புரியும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

மேலும் இந்த வீரரின் பரிமாற்றம் மூலம் உலகின் அதிகூடிய வேதனம் பெறும் உதைபந்தாட்ட வீரர் என்ற பெயரையும் சாமுவேல் தட்டிச் செல்கிறார். சாமுவேல் அன்ஸீ அணியால் மூன்று வருட காலத்திற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறார். ஒவ்வொரு காலப்பகுதிக்கும் இவரது வேதனமாக அமையப் போவது 28.8 மில்லியன் அமெரிக்க டொலர்கள். பின்வரும் ஒப்பீட்டின் மூலம் இவரது தகுதியைத் தெரிந்துகொள்ள முடியும். கிறிஸ்ரியானோ றொனால்டோ, றியல் மட்ரிட் அணிக்காக விளையாடப் பெறும் வேதனம் 17.3 மில்லியன் அமெரிக்க டொலர்கள். லயனல் மெஸ்ஸி பார்சலோனா அணிக்காக விளையாடப் பெறும் வேதனம் 15.1 மில்லியன் அமெரிக்க டொலர்கள். இந்த வகையில் ரஷ்ய அணி சாமுவேலின் மீது கண்வைத்துள்ளது.

பெரும் எதிர்கால எதிர்பார்க்கையுடன் என்பதும் தெளிவாகிறது. சாமுவேல் முன்னதாக பார்சலோனா அணிக்காக ஆடிய போது, பார்சலோனா வென்ற இரண்டு வெற்றிக் கிண்ணங்களின் பங்குதாரர் அதேபோல இன்ரர் மிலானுக்காக விளையாடியபோது ஒரு சாம்பியன்ஷிப் வெற்றிக் கிண்ணத்தின் பங்குதாரர். எனவே ஐரோப்பிய வட்டகையில் பெருமளவு அறிமுகம் இல்லாத அன்ஸீ அணியின் உரிமையாளர் கோடீஸ்வரர் கரிமொவ் திட்டமிட்டே மிகப் பிரபல்யமான வீரர்களைப் பொருட்செலவுகளையும் கருத்தில் கொள்ளாமல் தன் அணியில் சேர்த்துக்கொள்கிறார் என்பது துலாம்பரமாகத் தெரிகின்றது. இதன் ஒரு அங்கமாகத்தான் பிரபல்யமான ஐரோப்பிய அணிகளை விஞ்சிப் பெரும்தொகைப் பணத்தை வாரி இறைத்து சாமுவெல் ஈட்டோவை தன் அணிக்கு வாங்கியுள்ளார். அதோடு உலகின் முதல்நிலை வேதனத்தையும் கொடுத்துள்ளார். அடுத்தடுத்து வரும் சுற்றுப் போட்டிகளில் சாமுவெல் ஈட்டோயின் திறமையை நாம் அறிந்துகொள்ளக் கூடியதாக இருக்கும்.

# நீதிக்காகக் காத்திருக்கிறார்கள் அரசியல் கைதிகள்

**அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டமையை அடுத்து இலங்கையில் புலிகளின் மீது விதிக்கப்பட்டுள்ள தடை இயல்பாகவே இல்லாது போயுள்ளது. அத்துடன், அதியுயர் பாதுகாப்பு வலயங்களும் இல்லாது போயுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். அவசரகால சட்டம் நீக்கப்பட்டமைக்கு சர்வதேச அழுத்தம் இருந்தமை மறுப்பதற்கில்லை. ஆனால் வெறுமனே அந்த சட்டத்தை அகற்றிவிட்டதாக மாத்திரம் கூறுவதில் எவ்வித அர்த்தமும் இருக்கப்போவதில்லை என்பதே விமர்சகர்களின் கருத்தாகும்.**

இலங்கையிலும் இலங்கைக்கு வெளியிலும் இலங்கை தொடர்பான பல அரசியல் நிகழ்வுகள் கடந்த வாரத்தில் இடம்பெற்றன.

குறிப்பாக இலங்கையில் கடந்த 30 வருட காலமாக நடைமுறை யில் இருந்த அவசரகால சட்டம் நீக்கப்பட்ட நிகழ்வு முக்கிய அம்சமாக கருதப்படுகிறது.

இந்த சட்டத்தை நீக்கும் வகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஆற்றிய உரை முக்கியத்துவம் பெற்றிருந்தது. இதன்போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, நாட்டில் ஜனநா யகம் தோற்றம் பெற்றிருப்பதால் அவசரகால சட்டத்தை நீடிக்கவேண்டிய அவசியம் இல்லை என்று குறிப்பிட்டார். இதனையடுத்து ஜனாதிபதியின் இந்த தீர்மானத்துக்கு இலங்கையின் எதிர்க்கட்சி தலைவர் தமது நன்றியை தெரிவித்தார்.

அத்துடன் இனப்பிரச்சினைக்கான தீர்விலும் இவ்வாறான தீர்மானம் எடுக்கப்படவேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

ஜனாதிபதியின் அவசரகால சட்ட நீக்கம் தொடர்பான அறிவிப்பு இலங்கையின் அரசியல்வாதிகள் மத்தியில் இருந்து கலப்புமிக்க கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளது.

ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன், பயங்கரவாத சட்டமும் நீக்கப்படவேண்டும் என்று கேட்டுக் கொண்டார் இதனை விடுத்து அவசரகால சட்டத்தின் சில சரத்துக்களை பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் சேர்ப்பது ஏற்புடையதல்ல என்று அவர் குறிப்பிட்டார். இதன் காரணமாக சிறை களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்களின் விடுதலை இடம்பெறாது போகும் என்று மனோ கணேசன் தெரிவித்தார்.

கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேந்திரன் இது காலம் கடந்த தீர்மானம் என்று குறிப்பிட்டார்.

2009 ஆம் ஆண்டு போர் முடிவடைந்தவுடன் அரசாங்கம் இந்த தீர்மானத்தை எடுத்திருக்கவேண்டும். இதன் அடிப்படையில் அந்த சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் விடுவிக்கப்பட்டிருக்கவேண்டும். ஆனால் அரசாங்கம் தற்போது சர்வதேச அழுத்தத்தின் கீழ் இந்த முடிவை எடுத்துள்ளது என்பதே அவரின் கருத்தாக அமைந்திருக்கிறது.

அரசாங்கத்தினால் மனமுவந்து இந்த தீர்மானம் மேற்கொள்ளப்படவில்லை. பொதுமக்கள் அரசாங்கப்படையினருக்கு எதிராக ஏற்படுத்தி வரும் தாக்கங்களே இந்த தீர்மானத்துக்கு காரணம் என்று ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் பி.சந்திரசேகரன் தெரிவித்தார். எனவே இது பொதுமக்களுக்கு கிடைத்த வெற்றி என்று ஜே.வி.பி குறிப்பிட்டுள்ளது. அவசரகால சட்டம் நீக்கப்பட்ட நிலையில் அதன் கீழ் கைதுசெய்யப்பட்ட பலர் விடுதலை செய்யப்படவேண்டும் என்று அமைச்சர் வாசுதேவ நாணயக்கார கோரியுள்ளார். எனினும் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த அவ்வாறு சிறையில் உள்ளவர்களை விடுவிக்கமுடியாது என்று குறிப்பிட்டுள்ளார். மனித உரிமை ஆர்வலர் ஒருவரின் கருத்துப்படி அவசரகால சட்டம் நீக்கப்பட்டமையை அடுத்து இலங்கையில் புலிகளின் மீது விதிக்கப்பட்டுள்ள தடை இயல்பாகவே இல்லாது போயுள்ளது. அத்துடன், அதியுயர் பாதுகாப்பு வலயங்களும் இல்லாது போயுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். எனினும் இதனை இலங்கை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுமா? என்பது கேள்விக்குரிய விடயமாகும். அவசரகால சட்டம் நீக்கப்பட்டமைக்கு சர்வதேச அழுத்தம் இருந்தமை மறுப்பதற்கில்லை. ஆனால் வெறுமனே அந்த சட்டத்தை அகற்றிவிட்டதாக மாத்திரம் கூறுவதில் எவ்வித அர்த்தமும் இருக்கப்போவதில்லை என்பதே விமர்சகர்களின் கருத்தாகும். இதன்போது கிழக்குமாகாண முதலமைச்சரும் அரசாங்கத்தின் பங்காளியுமான பிள்ளையான் என்ற சிவநேசத்துரை சந்திரகாந்தன், தெரிவித்துள்ள கருத்து முக்கியமானதாகும். அவசர காலச் சட்டம் நீக்கப்பட்ட பின்னர் காவல்துறையினரின் அதிகாரம் பொது நிர்வாக அமைச்சின் கீழ் கொண்டு வரப்படவேண்டும். ஆனால் அது தொடர்ந்தும் பாதுகாப்பு அமைச்சின்கீழ் இருக்கும் என்று கூறப்படும் போது அவசரகால சட்டம் நீக்கப்பட்டதில் எவ்வித அர்த்தமும் இல்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவசரகால சட்டம் இலங்கையில் நீக்கப்பட்ட நிலையில் இந்திய லோக் சபா மற்றும் ராஜ்யசபாவில் இலங்கை தொடர்பான பிரச்சினை தொடர்பில் கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

எதிர்க்கட்சிகளான பாரதீய ஜனதாக்கட்சி உட்பட்ட கட்சிகள், இலங்கை விடயத்தில் இந்தியாவின் அணுகுமுறைகளைக் கண்டித்தன.

இதனையடுத்து பதிலை வழங்கிய இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம்.கிருஸ்ணா, இலங்கை இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கான அழுத்தத்தை இந்தியா கொடுத்துக்கொண்டேயிருப்பதாகக் குறிப்பிட்டார்.

இலங்கையின் வடக்குக் கிழக்கு பிரச்சினையை நேரில் பார்ப்பதற்காக இந்திய ராஜ்சபா எதிர்க்கட்சி தலைவர் சுஸ்மா சுவராஜ் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் இலங்கை அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் இலங்கைக்கு செல்லவுள்ளதாகவும் இந்திய நாடாளுமன்றக்குழு இலங்கை செல்லவுள்ளதாகவும் கிருஸ்ணா குறிப்பிட்டார். எனினும் தாம் தமது இலங்கை பயணத்தை ரத்துச்செய்து விட்டதாக சுஸ்மா சுவராஜ் குறிப்பிட்டிருப்பது இலங்கை அரசாங்கத்துக்கு சங்கடத்தை ஏற்படுத்தியுள்ளது.

அத்துடன் முறிந்துபோன இலங்கை அரசாங்கத்துக்கும் கூட்டமைப்புக்கும் இடையிலான பேச்சுவார்த்தை தொடரவேண்டும் என்றும் எஸ்.எம். கிருஸ்ணா கேட்டுக்கொண்டார். எனினும் பேச்சுவார்த்தை முறிந்தமைக்கு தமது நிபந்தனைகளே காரணம் என்று இலங்கை அரசாங்கம் கூறுவதைக் கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தன் செவ்வி ஒன்றின் போது மறுத்தார். உறுதியான நிலைப்பாட்டுடன் பேச்சுவார்த்தையை நடத்தவேண்டும் என்று தாம் கோரியதை இலங்கை அரசாங்கம் மாற்று வடிவில் எடுத்து பேச்சுவார்த்தை முறிந்துவிட்டதாக குறிப்பிட்டுள்ளது என்று சம்பந்தன் தெரிவித்தார்.


**அமலன்**

இந்தநிலையில் இலங்கை இனப்பிரச்சினையில் தமிழ்க்கட்சிகள் மத்தியில் இணக்கத்தை கொண்டுவர இந்திய காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுதர்சன நாச்சியப்பன் கூட்டிய கலந்துரையாடல் தீர்மானம் இன்றியே முடிவடைந்ததாக தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத்தின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார். கூட்டமைப்பு இலங்கை இனப்பிரச்சினை தீர்வு தமது இணக்கத்தின் அடிப்படையிலேயே ஏற்படவேண்டும் என்று விரும்புகிறது. அத்துடன் இந்திய அரசாங்கத்தை அது முழுமையாக நம்புகிறது. அதே நேரம் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கட்சி இன்னமும் இரு தேசக்கொள்கையை புதுடில்லி கலந்துரையாடலில் வலியுறுத்தியது. எனவே அந்த கலந்துரையாடலில் இணக்கம் எதுவும் ஏற்படவில்லை. இதற்கு அப்பால் இந்த கலந்து ரையாடலுக்கு தளம் அமைத்த ஈ.என்.டி.எல்.எப்.பின் பரந்தன் ராஜனுக்கு முழு மரியாதையும் சென்று விடக்கூடாது என்பதில் ஏனைய கட்சிகள் குறியாக இருந்தன

எனவேதான் புதுடில்லி கலந்துரையாடல் வெற்றிப்பெறாமல் போனது என்று தமிழ்த்தரப்புகள் சுட்டிக்காட்டுகின்றன. எனவே மீண்டும் இவ்வாறான கலந்துரையாடல் இடம்பெறுமா என்பதை பொறுத்திருந்தே பார்க்கவேண்டும். இதற்கிடையில் இலங்கை அரசாங்கம் இனப்பிரச்சினை தீர்வில் அசமந்தப்போக்கை கடைப்பிடிப்பதால், இந்தியாவினால் மீண்டும் ஒரு தீர்வு திணிக்கப்படக்கூடிய நிலை ஏற்படும் என்று ஸ்ரீலங்கன் காடியனில் அவுஸ்திரேலியாவை சேர்ந்த சிங்கள பேராசிரியர் ஒருவர் எழுதியுள்ளார். அத்துடன் இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம். கே.நாராயணன், புலிகள் இன்னும் தாக்குதல் வலிமையை இழந்துவிடவில்லை என்ற கருத்தை வெளிப்படுத்தியுள்ளார். எனவே இலங்கையின் இனப்பிரச்சினை அவசரமாக தீர்க்கப்படவேண்டிய ஒன்று என்ற கட்டத்தை இலங்கை அரசாங்கம் உணரவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

(22ஆம் பக்கம் தொடர்ச்சி...)


**மலையாள மாந்தரீக முறைப்படி**


**45 வருட காலம் தொட்டுச் செய்யும் எமது தெய்வீக சேவை**

மழைக்கு முளைக்கும் காளான் பயிரைப் போல் அல்லாது தொன்று தொட்டு பரம்பரை பரம்பரையாக, வாழையடி வாழையாக வாடிக்கையாளர்களின் நம்பிக்கையை ஆணிவேராகக் கொண்டு வளர்ந்து வரும் எமது மகத்தான மாந்திரீக சேவையின் நிமித்தமே நாம் வாரா வாரம் செய்து வரும் விளம்பரம்.

வாடிக்கையாளர் ஒருவர் தன் பிரச்சினையை என்னிடம் ஒப்படைத்த அடுத்த விநாடியே ஒருவர் புது வீடு கட்டத் திட்டமிட்டு அஸ்திவாரம் போட்டு அவ்வீடுவரை உறுதியாக, உண்மையாக உழைக்கின்றாரே, அதேபோல் வாடிக்கையாளரின் பிரச்சினைகளை உள்வாங்கி முழுமனதோடு அவரின் பிரச்சினை தீரும் மட்டும் இருந்து இரவு பகலாக தியான பூஜைகள் நடைபெறுவது என்பது உறுதி.

தொடர்ந்து வாராவாரம் விளம்பரம் செய்வது என்றாலே அது எமது மாந்திரீக உச்சாடன பீடம் மட்டுமே. கருணை, அன்பு, நேர்மை, உண்மை, உழைப்பு இவை அனைத்தையும் கொண்டு வாடிக்கையாளர்களுக்குச் சேவைபுரிந்து அவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்து அவர்களின் சிரிப்பிலே இறைவனைக் காண ஆதி பராசக்தி எனக்கு இந்த அற்புத அருள்ஞான சக்தியை அருளியுள்ளார்.

"நேரம் காலம் பாராது காலா காலம் பழைமை வாய்ந்த ஜோதிட மாந்திரீக சேவை என்றால் அது எனது சேவையே!" என நான் சொல்வதில் பெருமிதம் அடைகிறேன். நல்லது நடக்க நல்வாழ்வு பெற என்னை ஒரு முறை சந்திக்கலாமே!

ஒரே கூரையின் கீழ் சகல சாந்தி பரிகாரங்களும் செய்வதற்கு விசேட பிரிவுரைகள் உண்டு. உண்மையையும், நேர்மையையும் அடித்தளமாகக் கொண்டு, பரிசுத்தமாகச் செய்யும் என் பரிகாரத்தால், எத்தனையாம் திகதி, எத்தனை மணிக்குப் பிரச்சினைகள் தீரும், நல்லது நடக்கும் எனத் திட்டவட்டமாக உறுதியாக உறுதிமொழி வழங்குவது மட்டுமல்லாது உறுதிக்கடிதம் வழங்குவது மாந்திரீக சேவை யில் நான் மட்டுமே.!

வெளிநாட்டவர்கள் அவரவர் குறைநிறைகளுக்கு ஜாமபிரம்ப முகூர்த்தத்தில் தியான பூஜைகள் கடல் கடந்து செயல் புரியும் வண்ணம் உத்வேகத்துடன் நடைபெறுகின்றது. மேலும் வெளிநாட்டவர்கள் என்னிடம் தொடர்புகொள்ள 24 மணிநேர தொலைபேசி சேவையும் எம்மால் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

திட்டவட்ட ஜாதகக் குறிப்பு என்றால், என் கணிப்புத் திட்டவட்டமாக இருக்கும். செல்வாக்கு, செல்வாக்கு அருளியது எனது குருநாதர், சிவகாமியின் செல்வ குமரகுருபரனே!

நல்லது செய்ய நினையுங்கள், நல்லது நடக்கும்,
நல்வாழ்வு பெற என்னிடம் வாருங்கள்.
எல்லாம் நன்மைக்கே!

(என்னைச் சந்திக்க முன் அனுமதி பெற்று வருவது மிக முக்கியம்.)

*** வெளிநாட்டவர்கள் ஐயாவிடம் நேரடியாக கதைக்க விரும்பினால் முன் அறிவித்தலுடன் (ஸ்கைப்). (Skype:drpksamy) மூலம் கதைக்கலாம்.**

**DESABANTHU Prof.P.K.SAMY (J.D.G.A.N.) JP. ஐயா**

SRI DURGADEVI MANTHIRIKA UTCHADA PEEDAM.
NO.23,MAYFIELD ROAD, KOTAHENA, COLOMBO-13
011-2470615, 011-2342463, 011-2342464, FAx 094-112344831
நுவரெலியா கிளை இல.33, Daily Fair Complex052-2222508




# ஆபத்தானவர்கள்

**அது** மூன்றடுக்குக் கப்பல் என்பது அவருக்கு விளங்கியது. இரண்டாவது அடுக்கில்தான் அவரது அறை. ஜான்ஜன் தங்கியிருப்பதும் இதே பகுதியில்தான்.

மேற்புற அறையில்தான் ரேடியோ டிரான்ஸ்மிட்டர் இருக்கவேண்டும். அநேகமாக அது கப்டனின் அறையாக ஒட்டியே இருக்கும்.

புஷ்பராஜ் இரும்பு ஏணி ஒன்றின் முன்பாக வந்து நின்றார்.

ஏணியில் ஏறினால் பார்த்து திசையைக் கண்டுபிடிக்கலாம். ஏதாவது ஒரு நட்சத்திரக் கூட்டத்தை அடையாளம் தெரிந்துகொண்டால், அதை வைத்துத் திசையைக் கணிக்கலாம்.

ஏணிப்படிகளில் ஏறி மேற்புறத்துக்கு வந்தார் புஷ்பராஜ். அதோ அங்கும் ஒரு காவலாளி.

அவர் சட்டென்று துப்பாக்கியை உயர்த்திக் குறி பார்த்தபடி கேட்டார் "நீங்கள் யார்?"

"நான் ஒரு டாக்டர்.

அதன் பிறகு அவர் மௌனமானார்.

டாக்டர் என்ற வார்த்தை அவனுக்குள் மரியாதையை ஏற்படுத்தியது.

"என்ன டாக்டர்... உங்களுக்குத் தூக்கம் வரவில்லையா?"

"ஆமாம்.. நான் கடலில் பயணம் செய்து பழக்கம் இல்லாதவன்." புஷ்பராஜ் பதில் அளித்தார்.

"அப்படியானால் கப்பல், கடல் ஆகியவை பற்றி உங்களுக்கு அவ்வளவாகத் தெரிந்திருக் காது."

"உண்மைதான். கப்பல் எந்தத் திசையில் செல்கிறது என்றுகூட எனக்குத் தெரியாது."

"திசை கண்டுபிடிக்கச் சுலபமான ஒரு வழி இருக்கிறது. இப்போது ஆகாயத்தில் தெளிவடைந்து இருப்பது ஓரியன் நட்சத்திரக் கூட்டம். அப்படியானால் கப்பல் மேற்குத் திசையில் பயணம் செய்கிறது."

"ஓகோ..."

"கடலில் வழக்கமாகப் பயணம் செய்பவர்கள் இதையெல்லாம் வெகு சாதாரணமாகத் தெரிந்து வைத்திருப்பார்கள்."

"நீங்கள் கெட்டிக்காரர்தான்!" புஷ்பராஜ் பாராட்டினார்.

"டாக்டர் இந்தத் திறந்தவெளிப்பகுதியில் அதிக நேரம் நிற்காதீர்கள். ஒரு சிலருக்கு இந்தக் காற்றுச் சரிப்படாது."

"சரி... நான் வருகிறேன்." புஷ்பராஜ் படியிறங்கித் தனது அறைக்குத் திரும்பினார்.

புஷ்பராஜ் சிந்தனையில் ஆழ்ந்தார். "கப்பல் இதே திசையில் பயணம் செய்தால், விரைவில் ஆப்பிரிக்காவின் ஏதாவது ஒரு நாட்டுக்கோ அல்லது ஆள் நடமாட்டமற்ற ஒரு தீவுக்கோ செல்லலாம். எனவே, இந்தப் பயணத்தை முடிந்த அளவுக்குத் தவிர்க்க வேண்டும். இல்லாவிட்டால், தப்பிப்பது, டிக்சனைப் பத்திரமாகக் கொண்டுபோய்ச் சேர்ப்பது உட்பட எல்லாமே பெரும் சிக்கல் ஆகிவிடும்.!"

அப்போது டிக்சனின் பங்களாவில் பொலிஸ் அதிகாரிகள் அமர்ந்து அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை நடத்தினர்.

ஜோஸப் மாத்யூவும் அப்துல் கபூரும் மிகுந்த கவலையுடன் தென்பட்டனர்.

புரபசர் கப்பல் ஒன்றில் ஏற்றிச் செல்லப்பட்டார். அந்தக் கப்பல் தற்போது கடலில் பயணம் செய்கிறது... ஆனால், அது எந்த இடம் என்பது பற்றி இதுவரை தெளிவான எந்த ஒரு தகவலும் கிடைக்கவில்லை.

அந்தச் சூழ்நிலையில்தான் மாலைதீவிலிருந்து ஒரு டாக்டர் சுதீரிடமிருந்து அவர்களுக்கு தொலைபேசித்தகவல் ஒன்று கிடைத்தது.

"துப்பறிவாளர் புஷ்பராஜ், டாக்டர் ஷெரீப் என்ற பெயரில் புரபசர் டிக்சன் என்று சந்தேகப்படும் நபர் உள்ள கப்பலில் பயணம் செய்கிறார்!" என்ற தகவல்தான் அது.

அது அவர்களுக்கு ஓரளவு ஆறுதலளித்தது.

"இருந்தாலும் எதிரிகளின் கைவசம் உள்ள ஒரு கப்பலில் புஷ்பராஜ் என்கிற ஒரு தனிமனிதர் என்ன செய்ய முடியும்?" கபூர் கேட்டார்.

"அந்த விடயத்தில் எனக்கு நல்ல நம்பிக்கை இருக்கிறது. அவர் இந்த மாதிரியான சாகசச் சூழ்நிலைகளை எத்தனையோ முறை நேரிட்டு வெற்றி கண்டுள்ளார்." ஜோஸப் மாத்யூ கூறினார்.

"அவன் நன்றாக இருப்பதாக என்னிடம் பேசினார்." டயானா தெரிவித்தாள்.

"அப்படியா... இது எப்போது நடந்தது?" ஜோஸப் மாத்யூ விசாரித்தார.

டயானா நடந்ததைக் கூறினாள்.

"அது இரண்டு மணி நேரத்துக்கு முன்னால்... ஆனால், இப்போதைய நிலை குறித்து யாருக்கு என்ன தெரியும்?"

"மீண்டும் ஒரு முறை தொடர்புகொள்ள முயற்சியுங்கள்."

"ஏறத்தாழ நள்ளிரவு ஆகிவிட்டதே... ஒருவேளை அவர் நல்ல உறக்கத்தில் இருக்கலாம்." டயானா கூறினாள்.

"இந்தச் சூழ்நிலையில் அப்படி அவரால் உறங்கமுடியும் என்று எனக்குத் தோன்றவில்லை. ஒருவேளை புஷ்பராஜுடன் அவர் பேசிக்கொண்டிருக்கவும் செய்யலாம்." கபூர் கூறினார்.

"அவர் சொல்வதுதான் சரி. எதற்கும் ஒருமுறை முயறசி செய்துபாருங்கள்!" ஜோஸப் மாத்யூ கூறினார்.

எனவே. டயானா எழுந்து தனது அறைக்குச் சென்றாள்.

தொடர்புகொள்ளும் கருவியை இயக்கினாள்.

சற்று நேரத்துக்குப் பிறகு பதில் கிடைத்தது. அந்த பதிலில் எந்தவிதமான எதிர்பார்ப்புக்கும் வழியில்லை என்று தோன்றியது. திசை தெரியாமல், கடலில் கப்பலில் பயணம் செய்வது மட்டும் விளங்கியது. புஷ்பராஜின் விஷயத்தை அவர் தெரிவித்தது மட்டுமே சற்று ஆறுதல் அளித்தது.

"இப்போது நாம் புஷ்பராஜுடன் தொடர்புகொள்ள முடிந்தால் நல்லது!" பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறினார.

"நான் டிக்சனிடம் பேசிப்பார்க்கிறேன்.

(தொடரும்...)

---

# இடை விலகலும் இழந்த கல்வியும்!

**- வாகரை வாணி -**

**ஒரு** மனிதன் எதனை இழந்தாலும் கல்விச் செல்வத்தை இழக்கக் கூடாது. கல்வி என்பது திருடரால் அபகரித்துச் செல்லவோ, வெள்ளம், தீ போன்றவற்றால் அழிக்கப்படவோ முடியாத ஒரு பொக்கிசம். கல்வி கற்றக் கற்க குறைந்து விடுவதில்லை. அறிவும் ஆளுமை விருத்தியும் கூடிக்கொண்டே இருக்கும். நமது நாட்டிலும் கல்வி ஒவ்வொரு பிரஜைக்கும் அடிப்படை உரிமையாக அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால், துரதிர்ஸ்டவசமாக வடக்கு, கிழக்கிலுள்ள இளம் பராயத்தினரின் கல்வி சிறிது காலம் பாழடிக்கப்பட்டு விட்டது. நாட்டில் இடம்பெற்ற ஆயுத வன்முறைகளின் விளைவாக வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ் சமூக இளம் சிறார்கள் அவர்களது கல்வியைத் தொடர முடியாமல் பலாத்காரமாக தடுக்கப்பட்டார்கள். கைகளில் பாடப்புத்தகங்களுடன் பாடசாலைக்குச் சென்ற சிறார்கள் வீடு திரும்பவில்லையென சில காலம் பெற்றோர்கள் பதைபதைத்துப் போயிருந்தார்கள். பாடசாலைக்குச் சென்றவேளையிலும், பாடசாலையில் வைத்தும், வீடு திரும்பும் போதும் கடத்திச் செல்லப்பட்ட சிறார்கள் ஆயுதங்களுடன் களமுனைகளுக்கு அனுப்பப்பட்டார்கள்.

> **நாட்டில் இடம்பெற்ற ஆயுத வன்முறைகளின் விளைவாக வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ் சமூக இளம் சிறார்கள் அவர்களது கல்வியைத் தொடர முடியாமல் பலாத்காரமாக தடுக்கப்பட்டார்கள்.கைகளில் பாடப்புத்தகங்களுடன் பாடசாலைக்குச் சென்ற சிறார்கள் வீடு திரும்பவில்லை யென சில காலம் பெற்றோர்கள் பதைபதைத்துப் போயிருந்தார்கள். பாடசாலைக்குச் சென்றவேளையிலும், பாடசாலையில் வைத்தும், வீடு திரும்பும் போதும் கடத்திச் செல்லப்பட்ட சிறார்கள் ஆயுதங்களுடன் களமுனைகளுக்கு அனுப்பப்பட்டார்கள்.**

அன்று இளம் சிறார்களுக்கு இழைக்கப்பட்ட இத்தகைய அநீதி இன்று ஒட்டுமொத்தமாக ஒரு சமூகத்தையே பின்னடைவிற்கு இட்டுச் சென்றுள்ளது. எதனை இழந்தாலும் இழக்கப்பட முடியாத ஒன்று கல்வி என்ற அடிப்படையில் நாம் இப்பொழுது கல்வியையும் இழந்து பரிதவித்து நிற்கின்றோம். வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ் சமூகத்தைச் சேர்ந்த முன்னாள் போராளிகளான பலர் தமது இளம்பராயக் கல்வியை பூர்த்தி செய்யாதவர்களாக இன்று நிலை தடுமாறி நிற்கின்றார்கள். இது அவர்களுக்கு மட்டுமின்றி அவர்களது குடும்பத்தாருக்கும், சமூகத்திற்குமான ஒரு பெரும் பாதிப்பாக இப்பொழுது உணர முடிகின்றது.

ஆயுதங்களை மட்டுமே நம்பி வழிநடத்தப்பட்ட இளம்பராயத்தினர் இன்று வளர்ந்து ஆளாகிவிட்ட போதிலும், கல்வித்துறையோடு சார்ந்த வழி வகைகளையும், வாழ்வாதார முன்னேற்றங்களையும் கண்டுகொள்ள, முடியாமல் தடுமாறிப்போய் நிற்கின்றார்கள். சீருடையோடு துள்ளிக் குதித்து பள்ளிக்குச் சென்றவர்களை வழிமறித்துக் கடத்திச் சென்று, ஆயுதங்களை கையில் திணித்து, யுத்த முனைகளுக்கு அனுப்பும் அராஜகங்கள் இப்பொழுது இல்லை. இடைவிலகிய மாணவர்களை மீண்டும் இணைத்துக் கொண்டு அவர்கள் கல்வியைத் தொடர்வதற்கு உதவி வழங்க அரசும், அரச சார்பற்ற நிறுவனங்களும் முயற்சிக்கின்றன. இந்த சந்தர்ப்பத்தை சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இலங்கையில் இலவசக்கல்வி ஒரு கொடையாகவும் வரப்பிரசாதமாகவும் உள்ளது. இலவச நூல்கள், இலவச சீருடைத் துணிகள், இலவச பாடபோதனைகள், மதிய உணவு, பசும்பால் ஒரு குவளை என்று பாலர் வகுப்பிலிருந்து பல்கலைக்கழகம் வரை எல்லாமே இலவசம்.

இத்தனைக்கும் மேலதிகமாக கல்விச் சமூகமொன்றை உருவாக்குவதற்காக அரசு பலகோடி ரூபா பணத்தைச் செலவு செய்கின்றது. வருடாந்த வரவு செலவுத்திட்டத்தில் கல்விக்காக பெருந்தொகை நிதி ஒதுக்கப்படுகிறது. இது எமது எதிர்கால சந்ததியையாவது அறிவுள்ள சமுதாயமாக உருவாக்கு வதற்கு உகந்த சூழலாகும். எனவே, இப்போதுள்ள சகல வளங்களையும் வசதி வாய்ப்புக்களையும் பயன்படுத்தி கல்வியின் முழுப்பயனையும் பெற கல்வியை இழந்த இந்த சமூகம் முயற்சிக்க வேண்டும்.

இன்று பெரியவர்களாகி, திருமணம் முடித்து, குடும்பச் சுமைகளோடு இருக்கும் இவர்களுக்கு அடிப்படைக் கல்வி கிடைக்காமல் போனது பெரும் துரதிர்ஸ்டம் என்றே செல்ல வேண்டும்.

பயங்கரவாதம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ள தற்போதுள்ள சூழ்நிலையில் இத்தனை வசதி வாய்ப்புக்களும் இருந்தும்கூட வடக்கு கிழக்கிலுள்ள மாணவர்கள் இடைவிலகிக் கொண்டு தமது கல்வியைப பாழாககுகிறார்கள் என்பதை இன்னமும் எவரும் அங்கீகரித்துக் கொண்டிருக்கமுடியாது.

"எனது குடும்பத்தில் ஒரு வேளை சாப்பாட்டிற்குக் கூட கஸ்ரமான நிலைமை. இப்படி இருக்கும் போது என்னாலோ என்னுடைய சகோதரர்களாலோ பள்ளிக்குச் சென்று படிக்கமுடியவில்லை. சப்பாத்து, படிப்பதற்கு தேவையான உபகரணங்கள் தேவைப்படும். ஆசிரியர்கள் ஒவவொரு நாளும் இது தொடர்பாக அவதானிக்கும் போது, நானும் எனது சகோதராகளும் மாட்டிக் கொள்வோம். அப்போது எனது குடும்ப நிலைமையினை ஆசிரியர்களிடமும், மாணவா மத்தியிலும் சொல்ல முடியாதது சங்கடம் என்பதனால் நான் பாடசாலைக்கு போவதனை சிறிது சிறிதாக குறைக்கத் தொடங்கினேன். இது என்னோடு மட்டும் முடியவில்லை என் சகோதரர்களையும் வாட்டி வதைக்கத் தொடங்கியது. என் தந்தையும் ஒரு நோயாளி. இந்த வேளையில்தான் நான் அம்மாவுடன் பன் வெட்டும் தொழிலுக்குச் சென்றால் நல்லது என எண்ணத் தோன்றியது. அம்மாவோடு ஒவ்வொரு நாளும் பன் வெட்டுவதற்காகச் செல்வேன். அம்மாவும் நானுமாக சேர்ந்து பன்வெட்டுவோம். அதனை தம்பியும் தங்கையுமாகச் சேர்ந்து கட்டி அடுக்குவர்கள். நானும் அம்மாவும், தங்கையும், தம்பியும் பன்வெட்டச் சென்றால் அப்பா வீட்டில் இருந்து கொண்டு இரண்டு சகோதரர்களையும் பராமரிப்பார். இதில் கிடைக்கும் வருமானத்தினைக் கொண்டுதான் எங்கள் குடும்ப வாழ்க்கை ஒரு வேளை உணவுடன் கழிகிறது.

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)

# மனதுக்கு நிம்மதி

**முழுக்க** முழுக்க தங்கத்தால் உருவாக்கப்பட்ட தங்க தேசத்தில் வாழ நேர்ந்தால் கூட, "சே... எங்கே பாத்தாலும் மஞ்சளா இருக்கே" எனக் குறை சொல்லும் மக்கள் இருக்கிறார்கள் என்கிறார் லோர்ட் ஜெஃப்ரி. குறை சொல்தல் சர்வதேசக் கெட்ட குணம்.

சிலர் மனிதர்களைக் குறிவைத்து குறைசொல்வார்கள். சிலர் மனிதர்கள் என்றில்லை. விலங்குகள், தெய்வங்கள், அஃறிணைப் பொருட்கள் என

# குறைசொல்ல வேண்டாமே!

எல்லாவற்றையும் குறை சொல்வார்கள். இது இன்று நேற்று தோன்றிய சமாச்சாரமல்ல. ஆதி மனிதன் ஆதாமே பழத்தைச் சாப்பிட்டுவிட்டு "நீர் தந்த இந்த ஏவாள்தான் பழத்தைக் கொடுத்து சாப்பிடச் சொன்னாள்" என்றுதானே கடவுளிடம் சொன்னார்!



> கடின உழைப்பாளிகள் குறை சொல்வதில் தங்கள் நேரத்தை வீணடிப்பதில்லை. சோம்பேறிகள், கடின உழைப்பைத் தவிர்ப்பதற்காக குறை சொல்லும் பாணியைக் கையாள்கிறார்கள். குறை சொல்வது எதிர்மறை சக்தி. அதன் விளைவுகள் எதிர்மறையாகவே இருக்கும். தான் சரி என நிரூபிக்க மற்றவை எல் லாம் தவறு என மதிப்பிடும் மனநிலை மனதின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு எதிரி.

"குறை சொல்வதால் மனதுக்கு ஓர் இனம்புரியாத திருப்தி கிடைக்கிறது. அதனால்தான் பலரும் குறைசொல்கிறார்கள்" என்கிறது உளவியல். குறை சொல்லுதல் மனதுக்கு தற்காலிகமான ஓர் இளைப்பாறுதலைத் தருகிறது. அதே வேளையில் பலரைக் காயப்படுத்துகிறது.

எதையாவது அடைய வேண்டுமென முயல்கிறோம். தொடர்ந்து அதை நோக்கிப் பயணிக்கிறோம். ஆனால் முடியவில்லை. நமது இயலாமையை ஒப்புக்கொள்ள நமது 'தற்பெருமை' இடம்கொடுக்காது. சட்டென பழியைத் தூக்கி இன்னொருத்தன் தலையிலே போட்டுவிட்டால் வேலை முடிந்தது.

அப்படிச் சொல்வதால் உண்மையான தோல்வியின் காரணங்கள் பிடிபடுவதே இல்லை. தோல்விக்கான காரணமே தெரியாவிடில் வெற்றிக்கான பாதையை எப்படித் தேர்வு செய்வது?

குறை சொல்வது மனிதனுடைய குறைபாடு. அடுத்தவர்களை மட்டும் தட்டுவதன் மூலம் தனது உயரத்தை அதிகரிக்கச் செய்யும் முயற்சி இது. ஆழ்மனதில் உறைந்து கிடக்கும் நமது விரோதத்தின் வேர்களே இந்த குறை பெனும் முட்களை விளைவிக்கின்றன.

அடுத்தவருடைய வளர்ச்சியோ, நிம்மதியோ, புகழோ, அழகோ மனசுக்குள் விதைக்கும் பொறாமை விதைகள்தான் பெரும்பாலும் குறைகளாய் முளை விடும். தன்னிடம் இல்லாத ஒன்றின் பள்ளத்தாக்கை நிரப்ப முயலும் மனதின் விகார முயற்சிகளில் இதுவும் ஒன்று.

'தற்பெருமை' எனும் ஆலமரத்தின் கிளை கள் இந்தக் குறை எனும் விழுதுகள். தற்பெருமை இருக்கும் மனிதர்கள் பிறரிடமுள்ள குறைகளை பூதக்கண்ணாடி கொண்டு பார்த்துத் திரிவார்கள். இல்லாததை இருப்பது போலச் சோடித்து மகிழ்வார்கள். தற்பெருமையை விலக்க வேண்டுமென முடிவெடுத்தால் இந்த கெட்ட பழக்கம் உங்களை விட்டுப் போய்விடும்.

பிறருடைய கவனத்தை ஈர்ப்பதற்காகவும் சிலர் குற்றம் குறைகளை அள்ளி விடுவதுண்டு. பிறர் தன்னைக் கவனிக்க வேண்டும் எனும் ஆர்வம் அவர்களுக்கு. உளவியல் இதை, தாழ்வு மனப்பான்மையின் வெளிப்பாடு என்கிறது.

தன்னை புத்திசாலியாய்க் காட்டிக் கொள்ளவும் சிலர் குறை சொல்வதைக் கையில் எடுப்பதுண்டு. அடுத்தவர்களையோ, அவர்களுடைய செயல்களையோ விமர்சித்து, குறை சொல்லும்போது தன் தலைக்கு மேல் ஒரு ஒளிவட்டம் உருவாவது போல கர்வம் அவர்களுக்குள் நுழையும்.

இப்படி குறை சொல்வது நமது வாழ்வின் ஒரு பகுதியாகவே மாறிவிட்டிருக்கிறது. ஒரு டிராபிக் சிக்னலில் கூட குறை சொல்லாமல் நம்மால் இருக்க முடிவதில்லை. ஹோட்டலில் வெயிட்டர் பத்து நிமிடங்கள் நமது மேசைக்கு வரவில்லையேல் குறையும், குற்றமும் சொல்ல வாய் துறு துறுக்கிறது. உங்களை யாராவது குறை சொன்னாலோ, நேர்மையற்று விமர்சித்தாலோ நீங்கள் அதைக் கைதட்டி ரசிப்பீர்களா என்பதை ஒரு நிமிடம் யோசித்துப் பாருங்கள். இல்லை என்பதுதானே உங்கள் பதில்?

அதே மனநிலைதான் உங்களால் கிண்டலடிக்கப்படும் நபருக்கும் இருக்கும் என்பதை உணருங்கள்.

பிறரை ஏற்றுக் கொள்ளும் மனம் இருந்தால் குறை சொல்லுதல் விலகி விடும். பிறரை ஏற்றுக் கொள்ளும் மனம் வேண்டுமெனில் முதலில் நம்மை நாமே ஏற்றுக் கொள்ள வேண்டும். எனவே முதலில் உங்களை உங்கள் இயல்புகளோடே ஏற்றுக் கொள்ளும் தன்னம்பிக்கையைக் கொண்டிருங்கள்.

குறை சொல்லுதல் உறவுகள் இடையேயான பிணைப்பை உடைத்துவிடும். பல விவாகரத்துகளுக்கே இந்தக் குறை சொல்லுதல் காரணமாகிவிடுகிறது. அன்பு உருவாகும் இடத்தில் குறை சொல்வது இருப்பதில்லை. ஆத்மார்த்தமான அன்பை உள்ளத்தில் தேக்குங்கள். அடுத்தவர்களைக் குறை சொல்லும் பழக்கம் ஓடியே போய்விடும்.

ஆக, கடின உழைப்பாளிகள் குறை சொல்வதில் தங்கள் நேரத்தை வீணடிப்பதில்லை. சோம்பேறிகள், கடின உழைப்பைத் தவிர்ப்பதற்காக குறைசொல்லும் பாணியைக் கையாள்கிறார்கள். குறை சொல்வது எதிர்மறை சக்தி. அதன் விளைவுகள் எதிர்மறையாகவே இருக்கும். தான் சரி என நிரூபிக்க மற்றவை எல்லாம் தவறு என மதிப்பிடும் மனநிலை மனதின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு எதிரி.

குறை சொல்வதிலிருந்து வெளியே வர விரும்பினால் பாராட்டப் பழகுங்கள். ஒரு நாளைக்கு ஐந்து பேரையாவது பாராட்டுவேன் என முடிவெடுங்கள். ஒரு நபரிடமிருக்கும் குறைகளைத் தாண்டி நிறைகளைக் கண்டுபிடிப்பீர்கள்.

அதேபோல, குறை சொல்லும் நண்பர் கூட்டத்திலிருந்து வெளியே வாருங்கள். குறைந்தபட்சம் குறை சொல் லும் பேச்சை ஆதரிக்காமல் இருங்கள். குறை சொல்வது உங்களுக்குப் பிடிக்காது என்பது உங்கள் நண்பர்களுக்குப் புரிந்துவிடும். அது உங்களுக்கு மரியாதையையும் பெற்றுத் தரும்.

இன்றிலிருந்து ஒரு மாதம் குறையே சொல்ல மாட்டேன், நல்ல விடயங்களைப் பாராட்டுவேன் என முடிவெடுத்துப் பாருங்கள். இந்த போட்டியில் ஜெயித்துவிட்டால் உங்களுடைய அடிப்படை இயல்பே மாறிவிடும். ஒருவேளை தோற்றுவிட்டால், அந்த நாளிலிருந்து அடுத்த ஒரு மாதம் முயற்சி செய்யுங்கள்!

குற்றம் சொல்வதை நீங்கள் நிறுத்தும் வினாடியில் உலகம் உங்கள் கண்ணுக்கு முன்பாக அழகாகத் தெரியும். உங்கள் உறவுகள் அழகாகத் தெரிவார்கள். உங்களுக்குக் கிடைத்திருக்கும் வாழ்க்கை ஆனந்தமாக மாறும். செடியில் இருக்கும் முட்களைத் தாண்டி, முட்களிடையே இருக்கும் ரோஜா கண்களில் தெரியும். வாழ்க்கை ஆனந்தமாய் மாறும். ●

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

## குறுக்கெழுத்துப் போட்டி - 434

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | ■ | 6 |
| 7 | 8 | ■ | 10 | 11 | 12 |
| 13 | ■ | 15 | ■ | 17 | 18 |
| 19 | 20 | 21 | ■ | ■ | ■ |
| ■ | 26 | ■ | 28 | 29 | 30 |
| 31 | 32 | 33 | ■ | 35 | 36 |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி 11.09.2011 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-434
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல.:- 1772, கொழும்பு. - த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்

தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

குறுக்கெழுத்துப் போட்டி இல.432 இற்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.

அ.யூட்ஸ் வசந்தகுமார், 43/2, சிவன்கோவில் வீதி, தோணிக்கல்,வவுனியா.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. M.J.பெர்னாண்டோ,சென் லூசியஸ் லேன்,கொட்டகேனா, கொழும்பு.13.
02. வை.தனபாலசிங்கம், நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.
03. எம்.பி.அகிலன், 39, கல்லூரி வீதி, திருகோணமலை.
04. A.S.அகஸ்ரின், 07ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
05 சு.கதிர்காமவேள், 61., மாட்டின் வீதி, யாழ்ப்பாணம்.
06 கே.இராஜகோபால், கந்தசுவாமி கோவிலடி, வட்டுக்கோட்டை.
07. யோ.ஜெகதீஸ்வரி, சரசாலை தெற்கு, சாவகச்சேரி.
08. அ.கு.சண்முகரத்தினம், பாரதிலேன், சங்கானை.
09. கி.கமலா, மடுமாதா வீதி, சின்னக்கடை,மன்னார்.
10. ம.தில்லைநாதன், சிறுப்பிட்டி, நீர்வேலி.

**இடமிருந்து வலம்**

01.திருக்குறளில் உள்ள அதிகாரங்களில் ஒன்று.
07.தாவரப் பகுதிகளில் இருந்து பெறப்படும் திரவப் பொருட்கள். (திரும்பியுள்ளது)
10.யாகத்தில் சொரியப்படும் நெய்.
17.உலகம் என்பதன் ஒத்த கருத்து.
19.விஜய் நடித்த திரைப்படமானது. (குழம்பியுள்ளது)
28.குதிரையின் உணவுகளில் விசேடமானது. (திரும்பியுள்ளது)
31.காடு என்றும் பொருள்படும். (திரும்பியுள்ளது)
35.மாமிசம் அல்லது ஊன்.


## குறுக்கெழுத்துப் போட்டி 432- விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 பா | 2 ர | 3 தி | 4 யா | 5 ர் | ■ |
| 7 லை | 8 க | ■ | 10 ழ் | 11 கூ | ■ |
| 13 வ | 14 டி | 15 கா | ■ | 17 ம | 18 தி |
| 19 ன | ■ | 21 த | 22 வா | 23 ம் | ■ |
| 25 ம் | 26 ப | 27 ல் | 28 கு | ■ | 30 ய் |
| ■ | ■ | ■ | 34 க் | 35 கு | 36 நா |

**மேலிருந்து கீழ்**

01.கணிதத்தில் பயன்படுத்தப்படும் அமைப்பு முறை ஒன்று.
02.வீதி(திரும்பியுள்ளது)
04.நீண்ட ஆயுளையுடைய உயிரினங்களில் இதுவும் ஒன்று. (திரும்பியுள்ளது)
06.விடுகதை என்றும் கூறலாம்.
11.வெல்லம் என்றும் கூறலாம். (திரும்பியுள்ளது)
15.மருத்துவப் பரிசோதனைகளில் அதிகம் பயன்படுத்தப்படும் விலங்கு.
20. சிறந்த பின்னணிப் பாடகி. (குழம்பியுள்ளது)
29.பறவைகள் அல்லது விளையாட்டுப் பொருள் ஒன்று. (திரும்பியுள்ளது.
30.பஞ்சமா பாதகங்களில் ஒன்று.

# உயிர்கள் உருவான விதம்



உயிர்கள் முதன்முதலில் 4.4 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றியிருக்கலாம் என்று கருதப்படுகிறது. உயிர்கள் தோன்ற மிக முக்கியமானது தண்ணீரும், காபனும்தான். டார்வின் 1871இல் தன் நண்பருக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில் அவர் குறிப்பிடுகையில், அமோனியா, பாஸ்பேட் உப்புகள் நிறைந்த ஒரு குளத்தில் ஒளி, வெப்பம், மின்சாரம் ஆகியவை ஒன்றாக சேரும்போது இரசாயன மாற்றங்கள் ஏற்பட்டு, ஒரு புரதம் உருவாகிறது. இது மேற்கொண்டு பல மாற்றங்களை அடைந்திருக்கலாம். இப்படித்தான் உயிர்கள் தோன்றியிருக்க வேண்டும் என்கிறார்.

ஆனால், இதைப்போன்ற ஒரு வினை நடப்பதை இன்றைய காற்று மண்டலம், அனுமதித்து இருக்காது. காற்றில் இருக்கும் ஒட்சிசனில் இந்தப் புரதம் கருகி, கரியமில வாயுவாக மாறியிருக்கும். ஆனால், 4.4 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் இப்போது இருக்கும் காற்று மண்டலம் இருந்திருக்காது. எனவே, அந்தச் சமயத்தில் டார்வின் சொன்னது போல், உயிர் உருவாகி இருக்கலாம்.

அப்பொழுது, ஏற்பட்ட சேர்மம் தன்னைப் போன்றே மற்றொன்றை படைக்கும் திறன் பெற்றிருக்க வேண்டும். இப்படி தொடர்ந்து அது தன்னைப் போன்றே பல படைப்புகளை உருவாக்கியிருக்க வேண்டும். ஒன்றுக்குப் பதில் பல்வேறுபட்ட தன்னைத்தானே படைக்கும் திறன் கொண்ட சேர்மங்கள் அப்போது உருவாகியிருக்க வேண்டும். அவை நாளடைவில் தம்மைச் சுற்றி ஒரு செல் சுவரைக் கட்டியிருக்கும். அதன்பின் உட்கரு, டி.என்.ஏ. ஆகியவை உருவாகியிருக்கும். நாளடைவில் சுற்றுப்புற வெப்பமும், காற்றழுத்தமும் மாற மாற, பல்வேறு ஒரு செல் நுண்ணுயிரிகள் தோன்றியிருக்கும். அப்போது தோன்றிய பல நுண்ணுயிரிகள் இன்றும் இருக்கின்றன.

ஒற்றை செல் உயிரினங்கள் தோன்றியதும், அவற்றில் இருந்து எப்படிப் பல செல் உயிரினங்கள் தோன்றியிருக்கக் கூடும் என்பதை டார்வினின் பரிணாம வளர்ச்சிக் கொள்கை மூலம் நாம் புரிந்து கொள்ளலாம்.




"ஸ்ரீதர் செத்ததுக்கு நீங்கதான் காரணம் என்று குடுக்கத்தான் போறேன். நீங்கள் எல்லாம் நாசமாகப் போகணும்... கடவுள் உங்க கண்ணைப் பிடுங்கி எடுத்துக் குருடாக்கணும்... அப்பத்தான் கடவுள் இருக்கிறார் என்று நான் நம்புவேன். செத்துப் போங்கடா கிராகதங்களா!"

ப்ரமோத் அவளைப் பிடிக்க முயற்சிக்க, பலவீனமாக அவன் மார்பில் குத்திவிட்டு அவன் கையைக் கடித்தாள். அவன் உதறிக்கொண்டு விலகினான். துவண்டு சரிந்து கீழே உட்கார்ந்து மூக்கைச் சிந்திக்கொண்டு அழுதாள் அகல்யா.

அங்கே இருந்த சாந்தகுமார் என்ற பெயர் படைத்த 'தினவாணி' பத்திரிகையின் நிருபர்.

"மிஸ் அகல்யா, நீங்க இந்தச் சம்பவத்தை பற்றிப் பத்திரிகைக்கு ஒரு வாக்குமூலம் கொடுக்கிறீர்களா...?"

"நிச்சயம்." என்றாள்.

'க்ளிக்' என்று ஒரு பிளாஷ் பிரமித்தது.

***

ரகு இரவு ஏழரை மணி சுமாருக்கு 'ராயல் சலூ' னிலிருந்து வெளியே வந்தான். லேசாகப் பின்பக்கத்தில் தலைமுடியைக் கொறித்துவிட்டு ஷேப் பண்ணிக்கொண்டு கண்ணாடி பார்த்துக்கொண்ட கையை மேலே தூக்கி சோம்பல் முறித்தபோது உடம்பு வலித்தது.

அந்தப் பையன் ஸ்ரீதரை அடித்த அடி உடம்பு உருவினாற்போல ஆகிவிட்டது. அவன் வெளியே வரும்போது கிருஷ்ண குமார் எதிர்ப்பட்டு,

"ரகு என்னை பீ.ரி மாஸ்டர் ப்ரகான்ஸா அவசரமாக பார்க்கோணுமாம். ஜிம்மில இருக்கிறார். ரகு எங்க இருந்தாலும் கூட்டிக்கொண்டு வா" என்றார் என்றான்.

"என்னடா.. அந்த சீனு பயல போய் சொல்லிட்டானா...? இருக்காது" என்று ஒரு சிகரெட் பற்ற வைத்துக்கொண்டான். பற்றவைத்ததும் அதைச் சுவைக்காமல் தூரப்போட்டான். சமீபத்தில் அவனுக்கு எப்போது சிகரெட் குடித்தாலும் மரத்தூளைக் குடிப்பது போல் இருந்தது.

> ரகு ஸ்ரீதரை காட்டுமிராண்டித்தனமாகத் அடித்ததினால் ஸ்ரீதர் சுய நினைவிழந்தான். சீனு அவனை வைத்தியசாலையில் அனுமதித்துவிட்டு அகல்யாவை அழைத்து வந்ததும் ஸ்ரீதர் நடந்தவற்றை எல்லாம் அகல்யாவிடம் ஒப்புவித்தான். தான் குணமடைந்து வந்ததும் அவளைத் திருமணம் செய்துகொள்வதாகவும் வாக்களித்தான். பின்னர் சிலிண்டர் அவசரமாகத் திறக்கப்பட்டு அதன் ரியூப் கழன்றுகொண்டு மீண்டும் அதை இணைப்பதற்கு முன் பிஸ் என்று பெரு மூச்சுவிட்டது. ஸ்ரீதரின் உயிர் பிரிந்தது. அகல்யாவை நோக்கிய நீட்டிய கை அப்படியே அவன் இறந்த பின்னும் அப்படியே தொங்கிக்கொண்டிருந்தது. ஸ்ரீதரின் சாவுக்குக் காரணமான ப்ரமோத், ரகு, சீனு ஆகிய மூவரையும் அவள் பொலிசில் இனம் காட்டத் தயாரானாள். ஆனால் அதை ப்ரமோத் ஏற்றுக்கொள்ளவில்லை.

ஜிம்மில் படுத்துக்கொண்டு தொடைத் தசைகளை வலுவூட்டிக்கொண்டிருந்தார் ப்ரகான்ஸா. ரகுவைக் கண்டதும் எழுந்து துண்டால் முகத்தைத் துடைத்துக்கொண்டு அறைக்குள் அழைத்துச் சென்றார்.

"ரகு உன்னை எத்தனை தரம் கூப்பிடுறது. எங்கெல்லாம் தேடறது... நோட்டிஸ் பலகை பார்க்கலையா?"

"பார்த்தேன் மாஸ்டர். கொஞ்சம் பிஸியா இருந்திட்டேன். என்ன விடயம்?" என்றான்.

"உங்கிட்ட ஒரு செய்தி சொல்லணும். அதுக்கு முன்னாடி சில கேள்விகள் கேக்கணும்."

"கேளுங்க" என்றான் ஒரு பத்திரிகையைப் புரட்டிக்கொண்டு. "கல்லூரியில இரத்ததான முகாம் வைச்சபோது நீ இரத்தம் கொடுத்ததானே?"

"ஆமாம்."

"உன் இரத்தத்தை ஒப்புக்கிறதுக்கு முன்னாடி இரத்த வங்கியில வழக்கம் போல சோதனை பண்ணியிருக்கிறாங்க."

"சரி."

"அதில அவங்க சில கேள்விகளை அனுப்பியிருக்கிறாங்க. அதுக்கு உடனே பதில் வேணுமாம். நாலு முறை போன் பண்ணிட்டாங்க."

"சொல்லுங்க."

"அவங்க எழுதியிருக்கிறதைப் படிக்கிறேன். இதுக்கும் எனக்கும் சம்பந்தமில்லை" என்றார் அவர். அவனை நேராகப் பார்க்காமல்.

"சரி."

"சமீபத்தில நீ யார் கூடயாவது செக்ஸ் உறவு வைச்சிருந்தியா? தயங்காமச் சொல்லு. நான் யார்க்கிட்டையும் சொல்லமாட்டேன்."

"வைச்சிருந்தா என்ன?"

"வைச்சிருந்தியா?"

"ம்."

"தெரிஞ்ச ஆளா?"

"இல்லை."

"கால்கேர்ளா?"

"ம்."

"எச்.ஐ.வி. அல்லது எயிட்ஸ் இருக்கிறவங்க யாரோடயாவது அந்த மாதிரி உறவு வைச்சிருந்தியா... தகாத உறவு?"

"என்ன சேர்! என்ன என்னவோ கேக்கிறீங்க?"

"டிரக்ஸ் எடுத்துப்பியா?"

"உண்டு. என்ன சேர் ஓவரா போயிட்டிருக்குது?"

"பாருப்பா. நீ குடுத்த இரத்தத்தில எலிசா டெஸ்ட் பொசிட்டிவ்வா இருக்குதாம்."

"அது யாரு எலிசா?"

"எலிசா எங்கிறது ஒரு பரிசோதனையப்பா. இதான் முதல் டெஸ்ட். இதுக்கப்புறம் ரெண்டு பரிசோதனை இருக்குதாம். அதையும் எடுத்த பின்னர் அதிலையும் உறுதிப்படுத்தியிருந்தாத்தான்..."

"உறுதிப்படுத்தியிருந்தா...?"

அவர் அவனைப் பார்ப்பதைத் தவிர்த்தார். அதைப் பற்றி இப்பவே என்னா? நீ போய் ஏனைய பரிசோதனைகளை எடுத்துக்க. கடவுள் புண்ணியத்துல ஒண்ணும் ஆகாது என்று நம்பு."

"கடவுள் புண்ணியத்தில என்றா நான் ஆளு அப்பேலு" என்று சிரித்தான் ரகு.

"மத்த பரிசோதனைகளுக்கெல்லாம் எங்க போகணும்?" என்றான்.

"எழும்பூர்ல இருக்குது. டாக்டர் ராஜமாணிக்கம் என்று ஒருத்தர் முன் அனுமதி கொடுத்திருக்கிறாரு... போவியா?"

" போய்த்தானே ஆகணும். என்ன விடயம் என்று பார்த்திடலாமே. பார்த்துத்தான் ஆகணும்."

ரகுவின் முகம் வெளிறியிருப்பதும் மூக்கு நுனியும் உதடுகளும் லேசாகத் துடிப்பதும் அவன் மிகவும் பதற்றமாக இருக்கிறான் என்பதை உணர்த்தின. அவன் ஜிம்மை விட்டு விலகியபோது தன் கையைக் கையால் குத்திக்கொண்டு சீனுவைத் தேடிச் சென்றான். அவனுக்கு ஏனோ சீனுவைக் கொல்ல வேண்டும் போல இருந்தது. அவன்தானே வெறுப்பேற்றி உசுப்பேற்றிவிட்டு...சே! எனக்கு எதுவும் வராது. வந்தாக் கூட என்ன? பேப்பர்ல பார்த்தேனே ஏதோ ஒரு மூலிகை கண்டுபிடிச்சிருக்கிறாங்கள் என்று. அதை ஒருக்கா கடிச்சிட்டால் போகுது. எயிட்ஸாவது எனக்காவது!"

வைத்தியசாலையில் ஸ்ரீதரின் தந்தை வந்திருந்தார். துக்கத்தால் வாயைப் பொத்திக்கொண்டு அழுதார். நெற்றியில் ஸ்ரீசூர்ணச் சுவடு முப்பது வருசப் பழக்கத்தைக் காட்டியது. பெரிய காதும் பற்களுமாக அழுதார். " போன் பண்ணிச் சொன்னான். அப்பா விசா கிடைச்சிருக்கு என்று. அமெரிக்கா போறதா இருந்தான் சேர்" என்றார் சம்பந்தமில்லாத ஒருவரிடம்.

"ஜி.ஆர்.ஈ.ல இந்த வருஷ ரெக்கோட் மார்க் இவன்தானாம். அத்தனை நம்பிக்கை வைச்சிருந்தேன். இப்படிப் போய் விபத்தில... என்ன ஆச்சு? என்று மண்ணில் உட்கார்ந்து அழ ஆரம்பித்தார்.

வைத்தியசாலைக்கு வந்திருந்த மக்கள் வேடிக்கை பார்க்க, அவரருகில் சென்று

"மாமா எழுந்திடுங்க என்றாள் அகல்யா. அவர்மேல் அனுதாபமும் பாசமும் பரிவும் ஏற்பட்டது.

**இன்பம் தொடரும்**

இவ்வாரச் சிறுகதை

# தியாக உள்ளம்

"இரண்டு பேரும் அரட்டை அடிச்சது போதும், சீக்கிரமா ரெடியாகுங்க" என்று அவசரப்படுத்தினாள் தாய் அன்னபூரணி.

"கொஞ்ச நேரம் பேசிக்கிட்டிருக்க விட மாட்டீங்களே. அம்மா இதோட எத்தனையோ தடவை பெண் பார்த்தாச்சு. இதுதான் கடைசி தடவையாக இருக்கணும்" என்று சற்று அதட்டலாகவே சொன்னான் ராகவன்.

"சரி அம்மாவோடை சண்டைபோடாதேடா. வாங்க எல்லோரும் கிளம்புவம்" என கௌசிக் கூறவே ராகவனுக்குப் பெண் பார்க்கப் புறப்பட்டனர் குடும்பத்தினர்.

அன்னபூரணிக்கு ஒரே புதல்வன் ராகவன் மட்டும்தான். போரின் போது அநாதரவாய் விடப்பட்ட நிலையில் கிடந்த ஓர் குழந்தையை தாமே எடுத்து வளர்த்தனர். அவன்தான் கௌசிக். அன்றிலிருந்து கௌசிக்கிற்கு எல்லாமே அவர்கள்தான். கௌசிக்கிற்கும், ராகவனுக்கும் ஒரே வயதுதான். எனவே இருவரும் தோழமை உணர்வுடன் பழகினர். இருவரும் ஒருவர் மீது ஒருவர் உயிரையே வைத்திருந்தனர். கௌசிக் தன்னை வளர்த்து ஆதரித்த குடும்பத்திற்கு என்றுமே நன்றி உடையவனாய் இருந்தான்.

ராகவனுக்கு எத்தனையோ தடவை பெண் பார்த்தும் எதுவுமே பொருந்திவரவில்லை. அதனால் அவனுக்கு திருமணத்தில் வெறுப்பே வந்துவிட்டது. இன்று பெற்றோரின் தொல்லை தாங்காமல் பெண்பார்க்கப் புறப்படுகின்றான்.

ஆனால் "பெண்ணுக்குப் பையனைப் பிடிக்கலையாம். வேற இடத்தில் பார்க்கலையம்மா" என்றார் தரகர்.

ஒரு சமயம் ராகவன் "கௌசிக் நீ ஒரு பெண்ணை விரும்புறதா சொன்னியே. யாருடா அவ. எனக்கு அவளக் காட்ட மாட்டியா?" என்றான்.

"நேரம் வரும்போது காட்டுறேன். அப்போது பார்க்கலாம் சரியா." என்றான்.

"ஏன் உன்ர காதலி பெரிய தேவதையோ?" என்றான் ராகவன்.

"எனக்கு அவ தேவதைதான்." என்றான் கௌசிக்.

"முதல்ல உன்ர கல்யாணம் நடக்கட்டும். அப்புறம் இதைப்பற்றி யோசிக்கலாம். அதுவரைக்கும் என் காதலியோடை பெயர் தேவதை என்று நினைச்சுக்கோ. இதெல்லாத்தையும் அம்மா, அப்பாக்கிட்டப் போட்டுக் குடுத்திடாதேடா" என்று புன்னகைத்த கௌசிக்கின் தோளைத் தட்டிக்கொடுத்தான் ராகவன்.

மாதங்கள் சில சென்றன. ஒரு நாள் கௌசிக் தன் காதலி அகல்யாவைச் சந்திப்பதற்காகச் சென்றான். "ஹாய் அகல்யா. எப்படி இருக்க. எதுக்கு அவசரமா வரச்சொன்னாய். ஏதாவது பிரச்சினையா?"

"ஆமா கௌசிக். எனக்கு வீட்டில மாப்பிள்ளை பார்க்கினம். இன்றைக்குச் சாயந்திரம் என்னைப் பெண் பார்க்க வருகினம். நீங்க எப்ப வீட்ட சொல்லப் போறீங்க. எனக்கு ஒரே பயமா இருக்கு கௌசிக்" என்று அழுதாள் அகல்யா.

"பயப்படாத அகல்யா. கொஞ்ச நாள் பொறுத்துக்கோ. அவங்க வந்து பார்த்திட்டுப் போகட்டும். ராகவனுக்குத் திருமணம் முடிஞ்சா நான் இதைப்பற்றி என் வீட்டில சொல்லிடுவன். அவனுக்கும் இன்றைக்குப் பெண் பார்க்கப்போறம். எல்லாம் நல்லபடியாக நடக்கட்டும் என்று நம்புவம். நீ பயப்பிடாம இரு" என்று கூறினாலும் அவனுக்குள் உள்ளூர அவளை இழந்துவிடுவோமோ என்ற பயமும் இருந்தது.



T. சிந்து, திருநெல்வேலி.

"சரி கௌசிக் நான் உங்கள நம்புறன். என்னை எமாற்றிவிடாதீங்க" என்று கூறிய அகல்யா அதற்குமேல் அங்கு நிற்காமல் சென்றுவிட்டாள்.

மாலை 4.00 மணி.

"கௌசிக், ராகவன் வரமாட்டேன்கிறான். நீதான் அவனை அழைச்சுக்கொண்டு வரணும். நீ சொன்னா கேட்பான். போப்பா" என்று கெஞ்சினாள் அன்னபூரணி. மெல்ல அவனது அறைக்குள் சென்ற கௌசிக் "ராகவா ஏன் வரமாட்டேன்கிறாய். அம்மா வருத்தப்படுறா வாடா போகலாம்" என்று ராகவனின் கையைப் பிடித்தான். ராகவனுக்கு மனமில்லாவிட்டாலும் கௌசிக்கின் வற்புறுத்தலுக்காகவே பெண் பார்க்கப் புறப்பட்டனர். பெண்ணை ராகவனுக்குப் பிடிக்கவேணும் என்று கௌசிக் மனதிற்குள் வேண்டிக்கொண்டான். ஏனென்றால் அவனுக்கு திருமணம் நடந்தால் அதன்பின்னர் தனது காதலை வீட்டிற்கு சொல்லிவிடலாம் என்ற எண்ணத்தில் மனதிற்குள் இறைவனை வேண்டிக்கொண்டான்.


ஆனால் அவனின் மகிழ்ச்சி இன்றுடன் பறிபோய்விடும் என்பதை அறியாதவனாய் ராகவனுக்காகப் பெண்பார்க்கப் புறப்படுகின்றான்.

"வாங்கோ வாங்கோ" என வாய் நிறைய புன்னகையுடன் வரவேற்றனர் பெண்வீட்டார். பொதுவான விடயங்கள் பற்றிப் பேசிவிட்டு பெண்ணை வரச்சொன்னார்கள். அடக்கமாக தலையைக் குனிந்து கொண்டு வந்து நின்ற அகல்யாவைப் பார்த்தும் அதிர்ந்தான் கௌசிக். அவன் காலடியிலிருந்து பூமி நழுவியது.

"என் அகல்யாவையா நான் ராகவனுக்காகப் பெண் பார்க்க வந்தேன். ஐயோ! என் அகல்யாவை நான் இழப்பதா. கடவுளே இது என்ன சோதனை" என வெளியில் சொல்ல முடியாமல் மனதிற்குள் புலம்பினான் கௌசிக். அதுவரை அவனைக் கவனிக்காத அகல்யா அப்போதுதான் மாப்பிள்ளையாக வந்திருப்பவனை நிமிர்ந்து பார்த்தாள்.

(22 ஆம் பக்கம் தொடர்ச்சி...)

# பொன்மொழி



உற்சாகமாக இருக்கத் தொடங்குவதுதான் வெற்றிகரமான வாழ்க்கை வாழத் தொடங்குவதற்கான முதல் அறிகுறி.

சுவாமி விவேகானந்தர்

# சிந்தியா பதில்கள்

✉ சிந்தியா! சாந்தன், முருகன், பேரறிவாளன் ஆகியோருக்கு தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படுவது பற்றி உமது பார்வை என்ன?

கே. சுந்தரமூர்த்தி,
யாழ்ப்பாணம்.

● பொதுவாகவே தூக்குத் தண்டனை என்பது சர்வதேச சமூகத்தால் ஏற்றுக்கொள்ளமுடியாதது. அந்த வகையில், தூக்குத் தண்டனை எவருக்கும் வழங்கப்படக் கூடாது என்பது பொதுவான நிலைப்பாடாகும்.

நீங்கள் குறிப்பிட்டவர்களுக்குக் கடுமையான தண்டனை கிடைக்க வேண்டும் என்பது மாற்றுக் கருத்து இருக்க முடியாது. தூக்குத் தண்டனையை விடவும், மிகக் கொடூரமான மனிதப் படுகொலைகளைப் புலிகள் நிகழ்த்திய போது அதை வீரம் என்று புகழ்ந்தார்கள். இன்று தூக்குத் தண்டனையை எதிர்ப்பது நகைப்புக்குரியதாகும்.

அவர்களைப் பொறுத்தவரை இவ்மூவரின் தூக்குத்தண்டனையும் உயிர்த்தியாகம் என்ற வகையில் வரவேற்கக் கூடியதாக இருந்திருந்தால் அது பிரபாகரனுக்குச் செய்யும் தியாகமாக இருந்திருக்கும்.

✉ சிந்தியா! பாராளுமன்றத் தெரிவுக்குழு தெரிவு செய்யும் தீர்வு யோசனை யாவது நிரந்தரத் தீர்வுக்குத் தெரிவு செய்யப்படுமா?

பாலகணேஸ்,
நீர்கொழும்பு.

● பல்வேறு சந்தர்ப்பங்களைத் தவறவிட்டவர்கள் வாய்ப்புக்களை உருவாக்கவும் தவறியிருக்கிறார்கள். ஆகவே பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு என்பது பல்வேறு சந்தேகத்துக்குரியது என விமர்சனங்கள் இருக்கின்றபோதும், பயன்படுத்திக்கொள்ள வேண்டிய இறுதி வாய்ப்பாகவே எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.

இதையும் தவறவிட்டால் அது, புதியதொரு சந்தர்ப்பத்தை உருவாக்கும் வாய்ப்பை ஏற்படுத்தித் தராது.

உருவாகுகின்ற வாய்ப்புக்களை நம்பிக்கையோடு கையாளுகின்ற திறமையும். உறுதியும் இருந்தால் வெற்றி கொள்ள முடியும். வாய்ப்புக்களை உருவாக்கத் தெரியாதவர்கள் உருவாகின்ற வாய்ப்புக்களை தெரிவாக்குவதே புத்திசாதுரியம்.

✉ சிந்தியா! தங்கத்தின் விலை அதிகரித்துக்கொண்டு செல்வதால் ஏற்படும் நனமை தீமைகள் என்ன?

ரகுநந்தினி,
திருகோணமலை.

● அமெரிக்கா, மற்றும் ஐரோப்பிய நாடுகளின் பொருளாதாரம் மிக நெருக்கடிகளைச் சந்திக்கும் வேளைகளில் எல்லாம் தங்கத்தின் விலை உயர்வடையவே செய்யும். கடந்த காலங்களைவிடவும் தற்போது நிலைமை கட்டுப்பாட்டை இழந்து செல்கிறது. ஆகவே வளர்முக நாடுகளில் தங்கத்தைக் கொள்வனவு செய்வது என்பது பெரும் காரியமாகவே இருக்கும்.

ஆகவே தங்கம் கொள்வனவு செய்வோர் சில காலம் காத்திருக்க வேண்டும். இவை வரதட்சனை பேய் பிடித்தவர்களுக்கு நரகத்துன்பம்தான்.

✉ சிந்தியா! கிருஸ்ண பரமாத்மா போரின்போது அர்ச்சுனனுக்குச் செய்த உபதேசம் எமது நிஜவாழ்க்கைக்கும் பொருந்துமா?

கே.துட்சாயினி,
புதுக்குடியிருப்பு.

● பொருந்த வேண்டும் என்பதுதான் அந்தப் போதனையின் நோக்கமே. ஆனால் நாம் எத்தனை பேர் அர்ச்சுனன்களாக வாழ்கின்றோம் என்பது கேள்விக்குறியே.

இந்நிலையில் கிருஷ்ணரின் போதனை- களை நமது வாழ்வியலோடு பொருத்திக்கொள்ள முடிந்தால் நமது மகிழ்ச்சியும் நமக்கான மகிழ்ச்சியும் எம்மிடமே தங்கியிருக்கும். அதற்காக ஒவ்வொருவரும் முயற்சிப்போம். அது வலி நிறைந்த முயற்சியாக இருந்தாலும் முயற்சிப்போம்.

✉ சிந்தியா! எண்ணங்களுக்கு வயதாகுதல் என்பது உண்டா?


எச்.எம்.எம்.மஸ்னவி,
புத்தளம்.

● எண்ணங்கள் எப்போதுமே இளமையானவை என்பது மட்டுமல்ல அவை, அவ்வவ்போது திறக்கின்றது. ஆகவே எண்ணங்கள் முதுமை அடைவதில்லை. மனிதன் முதிர்ச்சியடைந்தாலும் அவனது எண்ணங்கள் எப்போதும் இளமையாகப் பிறப்பெடுக்கின்றது.

✉ சிந்தியா! எந்தக் கவிஞருடைய கவிதை உங்களை மிகவும் கவர்ந்தது?

எச்.க.புருஷோத்மன்,
நுவரெலியா.

● கவிதையைப் படைக்கும் ஒவ்வொரு கவிஞனும் என்னைக் கவர்ந்தவர்கள்தான். அவர்களில் யாரை அதி- கம் பிடிக்கும் என்று என்னால் உறுதியாக் கூறமுடியவில்லை. படைப்புக்களைப் படைக்கும் ஒவ்வொருவரையும் நான் பிரம்மாக்களாகவே பார்க்கின்றேன். பிரம்மாக்களில் என்னிடம் உயர்வு தாழ்வு இல்லை.



---

இலக்கிய நயம் 42

கே.வி. குணசேகரம்

# முயற்சியே மூலதனம்

**"தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன் மெய்வருந்தக் கூலி தரும்."**

இக்குறள் சைவ சித்தாந்தத்தின் கடவுள்கொள்கையைத் தெளிவாகக் கூறுகிறது. விதியைவிட வலிமையானது வேறெதுவும் இல்லை. அவ்விதியை விலக்க முடியாது. விதியின்படிதான் ஒருவரது வாழ்க்கை நடைபெறும். விதியென்பது ஒவ்வொருவரும் செய்யும் கர்மங்கள். கர்மங்கள் என்பது வாழும்போது செய்யும் செயல்கள். நல்லவற்றைச் செய்தால் நன்மையும், தீயவற்றைச் செய்தால் தீமையும் வரும். இதை இறைவனால் கூடத் தடுக்க முடியாது. ஒருவர் செய்யும் நன்மை தீமைகளுக்கான பயன்களை அவருடன் சேர்த்து வைப்பதுதான் சைவ சித்தாந்தத்தின் முழுமுதற் கடவுளான சிவபெருமானின் தொழில்.

ஒருவன் முன்புசெய்த தீமைகளுக்கு அஞ்சி அதை உணர்ந்து நன்மை செய்தால் அவன் செய்யும் முயற்சிக்கான பலன் கட்டாயம் கிடைக்கும். முயற்சிதான் பயனைக் கொடுப்பது இதை "செய்யும் தொழிலே தெய்வம்" என்றொரு முதுமொழி உண்டு. எத்தொழிலானாலும் அதை நம்பிக்கையுடன் முயன்று செய்தால் வெற்றி கிடைக்கும். முயற்சி செய்யாமல் சோம்பியிருப்பவனது வாழ்வில் மகிழ்ச்சி இராது. அதனால் முயற்சி செய்தல் வேண்டும். சைவ சித்தாந்த நூல்களான திருவருட்பயன் முத்தியின்பத்தைப் பற்றிக் கூறி, அம்முத்தியின் பத்தைப் பெற முயற்சிக்க வேண்டும் என்று கூறி, முயற்சியைப் பற்றி விரிவா கக் கூறுகிறது. ஒவ்வொருவரின் முயற்சிக்கேற்பவே முத்தி கிடைக்கும் என்று கூறுகிறது. பெரு முயற்சியெடுப்பவன் ஒரு பிறப்பிலேயே முத்தியடைந்துவிடுவானென்றும் முயற்சி குறைந்தவர்கள் முயற்சிக்கேற்ப பல பிறப்புக்கள் எடுத்து முத்தி அடைவார்கள் என்றும் கூறுகிறது.

இக்குறள் முத்தியை மட்டுமன்றி உலக வாழ்வில் முயற்சியின பெருமையையும் சிறப்பித்துக் கூறுகிறது. நாமகள் பெரும் அழகியில்லாவிட்டாலும் சுமாரான அழகி. அத்துடன் பெரும் பணக்காரி. அவளின் தந்தையும், சகோதரர்களும் முரடர்கள். யாராவது ஏறுமாறாகக் கதைத்தால் உடன் தாக்கிவிடுவார்கள். நாமகளை ஆரூரான் விரும்பினான். அவள் எங்கு சென்றாலும் அவளைத் தொடர்ந்து செல்வான். அவள் அவனை அன்பொழுகப் பார்ப்பாள். உதட்டுக்குள் சிரிப்பாள். ஆரூரானின் நண்பன் நாதன் சொல்வான்; "நண்பா பலர் ஒரு பெண்ணை விரும்பலாம். ஆனால் தான் விரும்புவதை அவளுக்குத் தெரிவிப்பவன்தான் அவ- ளின் காதலைப் பெற முடியும். அவளது போக்கைப் பார்த்தால் அவள் உன்னை விரும்புகிறாள் போலத் தெரி- கிறது. காதலிக்கும் உனக்குத் துணிவு வேண்டும். துணிந்து உனது காதலை அவளுக்குச் சொல்" என்றான். ஆனால் ஆரூரான் பயம் காரண- மாக நாதனின் சொல்லைக் கேட்கமாட்டான். எந்நாளும் கோயிலுக்குச் சென்று தனது காதலைச் சிவனிடம் சொல்லி தன்னை நாமகளுடன் சேர்த்து வைக்கும்படி வணங்குவான். விரதங்கள் பிடிப்பான்.

ஆரூரா விரதம் பிடிப்பதிலும் கடவுளை வணங்குவதாலும் உனது காதல் கை கூடாது. துணிவுடன் முயற்சி செய்வதால்தான் காரியம் கைகூடும். நான் வாசித்த கதையொன்றைக் கூறுகின்றேன் கேள். ஒரு குடியானவன் சிவபெருமானை நோக்கிக் கடுந்தவம் புரிந்தான். அவனது தவத்தால் மகிழ்ந்த சிவன் அவன் முன்தோன்றி "உனக்கு என்ன வேண்டும்" என்று கேட்டார். குடியானவன் மகிழ்ந்து தான் பெரும் பணக்காரனாக வேண்டும் என்று கேட்டான். சிவன் அப்படியே ஆகட்டும் என்று கூறி மறைந்தார். பல மாதங்கள் கழிந்தன. அக் குடியானவன் பணக்காரனாக வில்லை. அதனால் அவன் மீண்டும் தவம் செய்தான். மீண்டும் தவம் செய்தான். மீண்டும் சிவன் அவன் முன் தோன்றினார். கடவுளே நான் இன்னும் பணக்காரனாகவில்லை



என்று அழுதான் குடியா- னவன். "மகனே நீ எந்த முயற்சியும் செய்யாமல் சோம்பேறித்தனமாக இருந்தால் எப்படிப் பணக்காரனாக வருவாய். ஓர் அதிர்ஷ்ட இலாபச் சீட்டை எடு. அதை உனக்குக் கிடைக்கச் செய்கிறேன். இல்லாவிட்டால் ஏதாவது கன்றுநடக் குழியைவெட்டு அதனுள் புதையலை வைக்கிறேன். முயற்சிசெய்யாவிட்டால் கடவுளின் அருள்கூடக் கிடைக்காது" என்றார். அதனால் நண்பா, துணிந்து அவளின் அருகே சென்று உனது காதலை வெளிப்படுத்து. அவளுக்குத் திருமணம் பேசுகிறார்கள். காதலிப்பவன் பயப்படக் கூடாது. பயந்தால் காதலி பறிபோய்விடுவாள்" என்றான் நாதன். அதன் பின்புகூட ஆரூரானுக்கும் பயமாக் இருந்தது.

## 04 ஆம் பக்கத் தொடர்ச்சி... கடாபியின் ஆட்சி...

எனவே மேற்குலகின் எதிர்பார்ப்புக்கு அமைய லிபியாவின் கடாபி அரசாங்கத்தோடு சேர்த்து வேட்டையாடப்பட்ட லிபிய மக்களின் வாழ்வும் எதிர்காலமும் சிறப்படைய தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய பாரிய பொறுப்பு நேட்டோ நாடுகளின் கைகளில் சுமத்தப்பட்டிருக்கிறது என்பதை குறித்த நாடுகள் உணர்ந்து கொள்ள வேண்டும். வெறுமனே உலக வல்லாதிக்க மிதப்பில் தம்மை மதிக்காதவர்களை மிதிப்பதுதான் இலக்கு என்ற மனோபாவ நிலையில் தொடர்ந்தும் சம்பந்தப்பட்டவர்கள் நடந்து கொள்வார்களாயின் எதிர்காலத்தில் பாதிக்கப்பட்ட அப்பாவி மக்களுக்கு பதில் சொல்ல வேண்டிய நிலை தோன்றும் என்பதை உரியவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஒருவகையில் பார்த்தால் மக்களின் கருத்துக்களுக்கு செவி சாய்க்காமல் சுதந்திர வாழ்வுக்கு வழி சமைக்காமல் முஅம்மர் கடாபி நடாத்திய சர்வாதிகார ஆட்சிதான் நேட்டோ நாடுகள் போட்ட கயிற்றைப் பிடித்துக் கொண்டு கிளர்ச்சியாளர்களாக வீதிக்கு வரவேண்டிய தேவையை அல்லது துணிவை லிபிய மக்களுக்கு ஏற்படுத்தியிருந்தது. இந்த அசாத்திய துணிவானது, எதிர்காலத்தில் தேவை ஏற்படின் ஏனையவர்களுக்கு எதிராகவும் திரும்பக் கூடுமென்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

## 05 ஆம் பக்கத் தொடர்ச்சி... தி.மு.க.வின் புதிய...

ஆனால், அதற்கான ஆதாரம் எதுவும் தன்னிடம் இருப்பதாக அவர் வெளிக்காட்டிக்கொள்ளவில்லை. சில நாட்களின்பின் கனிமொழி ஆதாரத்தை நீதிமன்றில் தாக்கல் செய்கிறார்.

கனிமொழி, மத்திய அமைச்சருமல்ல தொலைத் தொடர்பு அமைச்சின் அதிகாரியாக இருந்தவருமல்ல. ஆனால் பிரதமர் அன்றைய நிதியமைச்சர் மற்றும் அன்றைய தொலைத்தொடர்பு அமைச்சர் கலந்து கொண்ட முக்கிய முடிவெடுக்கும் கூட்டத்தின் மினிட் புக் அவரிடம் இருக்கிறது. அதை இப்போது தாக்கல் செய்கிறார்.

கனிமொழி இந்த ஆதாரத்தை தாக்கல் செய்யப்பட்ட போது நீதிமன்றில் அவருக்காக வாதாடியவர் மூத்த வழக்கறிஞர் சுஷில்குமார். கனிமொழிக்காக வாதாடும் இதே சுஷில்குமார்தான் ஆ.ராசாவுக்காகவும் வாதாடுகிறார். இதிலிருந்து சில விடயங்களை மிகச் சுலபமாக ஊகித்துக் கொள்ளலாம்.

1) ஆ.ராசா தனது வாதத்தின்போது முதல்நாள் பிரதமர் மற்றும் ப.சிதம்பரம் பற்றி பிரஸ்தாபித்துவிட்டு மறுநாளே அதை மழுப்பியது தி.மு.க. தரப்பால் காங்கிரஸ் கட்சிக்கு காட்டப்பட்ட ஒரு எச்சரிக்கை சிக்னல்.

2) அது ஒரு எச்சரிக்கை மாத்திரமே என்பதால் கைவசம் இருந்த ஆதாரங்கள் எதுவும் காண்பிக்கப்படவில்லை.

3) எச்சரிக்கை விடுத்தபின் சில நாட்கள் தாமதித்திருக்கிறார்கள், கனிமொழி விடுவிக்கப்படவில்லை.

4) இப்போது ராசாவுக்காக வாதாடிய அதே வக்கீல் கனிமொழிக்காக வாதாடும்போது ராசாவின் முன்னாள் அமைச்சு தொடர்பான ஆதாரம் ஒன்றைத் தாக்கல் செய்திருக்கிறார். இந்த ஆதாரம் பிரதமரையும் ப.சிதம்பரத்தையும் கிளீனாக கேஸில் இழுத்துவிடுகிறது.

5) இத்துடன், கனிமொழி குறைந்தபட்சம் ஜாமீனிலாவது வெளியேவிடப்பட வேண்டும் என்று லாஸ்ட் வோர்னிங் கொடுக்கப்பட்டுள்ளது. இதற்கும் மத்திய அரசு மசியா விட்டால்...

6) நிச்சயமாக இவர்கள் வசம், மேலும் சில ஆதாரங்களும் உள்ளன.

## 17 ஆம் பக்கத் தொடர்ச்சி... நீதிக்காகக் காத்தி...

இது இவ்வாறு இருக்கையில் அவசர காலச்சட்டம் என்ற போர்வையில் கைதாகி இன்னும் சிறைகளில் வாடுகின்ற நூற்றுக்கணக்கான அப்பாவித் தமிழ் இளைஞர்கள் குறித்த சட்டம் அகற்றப்படுகின்றதென்ற தங்களுடைய வாழ்விலும் குடிகொண்டிருக்கின்ற இது அகலுமா என்ற அங்கலாய்ப்புடன் அரசின் டுத்தகட்ட நகர்வுகளை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.

நாட்டில் இதுவரைகாலமும் இருந்துவந்த அவசரகால சட்டமானது எவரையும் பிடியாணை இன்றி கைது செய்வதற்கு வழக்குத் தொடுக்காது காலவரையறையின்றி சிறையில் அடைத்து வைப்பதற்கும் வழிசெய்கின்றது. இதனால் நூற்றுக் கணக்கான இளைஞர்கள் பல வருடங்களாக எதுவித வழக்குகளுக்கும் முகம்கொடுக்காது வீணே சிறைகளில் தங்களுடைய வாழ்வைக் கழித்துக் கொண்டிருக்கின்றார்கள். இன்று நாட்டின் சுமூகநிலை உருவாகி அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டு உள்ளதால் தங்களுக்கும் விடிவு கிடைக்க வேண்டும் என்பதே குறித்த அப்பாவிகளின் அபிலாசையாக உள்ளது. இது விடயத்தில் தற்போது நீதியமைச்சராக இருப்பவரும் பெரும்பான்மை இன மக்களின் உரிமைகள் தொடர்பில் அக்கறை கொண்டவருமான கௌரவ அமைச்சர் ரவுப்ஹக்கீம் ஜனாதிபதியின் அனுமதியுடன் சட்ட வல்லுனர்களுடன் கலந்தாலோசித்து தமது எதிர்காலத்தை பிரகாசமாக்குவார் என்று குறித்த கைதிகள் எதிர்பார்த்திருக்கின்றனர்.

அதேவேளை அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டிருப்பினும் பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்ந்தும் அமுலில் இருப்பதால் தொடர்ந்தும் சட்டச் சிக்கல்கள் உருவாக்கப்படலாம் என்ற அச்சமும் சட்டவல்லுனர்கள் மத்தியில் காணப்படுகின்றது. எனவே, வெறுமனே அவசர காலச் சட்டத்தை நீக்கிவிட்டோம். எந்த அவஸ்தையுமின்றி மக்கள் சிவில் சட்டங்களுக்கமைய வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் என்ற தோற்றப்பாட்டை பெயரளவில் மட்டும் ஏற்படுத்தாது நடைமுறை ரீதியிலும் மக்கள் அனுபவிக்கக் கூடிய சூழலை உருவாக்குவதும் அதற்குத் தடையாக இருக்கின்ற கற்களை அகற்ற வேண்டியதும் அதிகாரம் உள்ள அனைவரினதும் கடமையாகும்.

## 18 ஆம் பக்கத் தொடர்ச்சி... இடைவிலகலும்...

நான் படிக்க வேண்டும் என்னுடைய சகோதரர்களையும் படிக்க வைக்க வேண்டும் என்ற விருப்பமும் இருந்தது. வறுமை காரணமாக என்னால் ஒரு வருட காலம் பாடசாலைக்கு செல்ல முடியாமல் போய்விட்டது. இவ்வாறு கூறினார். 09ஆம் தரம் வரை படித்து ஒரு வருடம் வறுமை காரணமாக பாடசாலைக்குச் செல்லாதிருந்து மீண்டும் வகுப்பில் சேர்ந்து கொண்ட ரெட்ணசிங்கம் தவசீலன்.

இரவு வேளையில் லாம்பு வைப்பதற்கு லாம்பெண்ணை வாங்குவது கூட கஷ்ரமான நிலைமை. இப்படி இருக்கும் போது எப்படி என்னால் பிள்ளைகளை படிப்பிக்க முடியும் என்று கேள்வி எழுப்பிய தவசீலனின் தாய் இப்பொழுது பிரதேச செயலகத்தினூடாகக் கிடைத்த உதவியினால் எனது பிள்ளையை மீண்டும் பாடசாலைக்கு அனுப்புகின்றேன் என்றும் சந்தோசப் பட்டுக்கொள்கின்றார் தவசீலனின் தாய்.

பள்ளிப்படிப்பைக் கைவிட்டு இடைவிலகிய மாணவர்களுக்கு பிரதேச செயலகத்தினூடகவும், சிறுவர் நன்னடத்தைத் திணைக்களத்தினூடகவும், அரச சார்பற்ற நிறுவனங்களுக்கூடாகவும் பல்வேறு வகையான உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு பிரதேச செயலகத்திலுமுள்ள சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர்கள் பல்வேறு காரணங்களால் பள்ளிப்படிப்பை இடைநடுவில் கைவிடும் மாணவர்கள் மீண்டும் அவர்கள் பாடசாலைக் கல்வியைத் தொடர்வதற்கு உதவியளிக்கக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். இவ்வாறான நிலையில் எந்த வகையான காரணங்களாக இருந்தாலும் பாடசாலைக் கல்வியை கைவிட்ட மாணவர்கள் பற்றி அக்கறை எடுக்கும் எவரும் உடனடியாக எம்மை அணுகினால் மீண்டும் அவர்களை பாடசாலையில் சேர்ந்து படிக்க சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்று கூறுகிறார் வாகரைப் பிரதேச செயலகத்தில் சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தராகக் கடமையாற்றும் வி.யோகராஜா.

ஆண்டு தோறும் சுமார் 2 இலட்சம் இளையவர்கள் தமது பள்ளிப்படிப்பைக் கைவிடுவதாக சிறுவர் பராமரிப்பு மற்றும் நன்னடத்தை அதிகார சபை தெரிவிக்கிறது.

## 20 ஆம் பக்கத் தொடர்ச்சி... தியாக உள்ளம்...

பார்த்தவள் அப்படியே அருகிலிருக்கும் கௌசிக்கைக் கண்டதும் அவனைப் போலவே அவளும் அதிர்ச்சிக்குள்ளாகினாள். அவள் மனதிற்குள்ளும் ஒரு போராட்டம். அதற்கு மேல் நிற்கமாட்டாது உள்ளே சென்றுவிட்டாள். அப்போது ராகவன் "கௌசிக் இந்தப் பெண் அழகா, அம்சமா இருக்காடா, எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு. இவதான் எனக்கு மனைவியா அமையணும். இல்லாட்டால் எனக்குத் திருமணமே வேண்டாம்"என்று மெல்லிய குரலில் தனக்கு மட்டுமே கேட்கும்படி கூறிய ராகவனைப் பார்த்ததும் கௌசிக்கிற்கு வேதனை அதிகமாகியது. அவன் இதைச் சற்றும் எதிர்பார்த்ததேயில்லை. சற்று நேரத்தில் எல்லோரும் புறப்பட்டுவிட்டனர்.

ரர்கவன் எதிர்பார்த்த மாதிரியே பெண் மறுத்து விட்டாள் என்ற தகவலுடன் வந்தார் தரகர். ராகவன் தான் மனமுடைந்து போனான். கௌசிக்கிற்கு ஒரு புறம் மகிழ்ச்சியாகவும், இன்னொருபுறம் ராகவனை நினைத்தால் கவலையாகவும் இருந்தது. இது இடிப்படியிருக்க ஒரு நாள் ராகவன் " கௌசிக் நான் அதிர்ஷ்டமில்லாதவன் பார்த்தியா. எனக்கு அந்தப் பெண்ணைப் பிடிச்சிருக்கு. அவளுக்கு என்னைப் பிடிக்கலையாம். எனக்கு அவதான்டா வேணும். நீதான் கௌசிக் எனக்கு உதவணும்" என்று கூறிய ராகவனை இடைமறித்த கௌசிக் "அவசரப்படாதை ரகவா நான் அந்தப் பெண்ணோட பேசி சம்மதத்தைப் பெற்றுத்தாறன். நீ நிம்மதியாய் இரு" என்ற கௌசிக் அவனைக் கட்டியணைத்தான்.

அன்றும் வழமையாகச் சந்திக்கும் இடத்தில் சந்தித்துக்கொண்டனர் கௌசிக்கும் அகல்யாவும்.

"என்ன கௌசிக் நீங்க என்னை இப்படி ஏமாத்திட்டீங்கள். நான் என்ன பண்றது."

"அகல்யா நான் சொல்லப்போறதை நீ பொறுமையாகக் கேட்கணும். நீ ராகவனை ஏன் திருமணம் செய்யக் கூடாது." என்று கேட்டவன் அவளது முகத்தைப் பார்க்கக் கூட சக்தியற்றவனாய் திரும்பினான்.

"எ... என்னது... என்ன சொல்லுறீங்க கௌசிக்... உங்களை நான் நேசிக்கிறன் தெரியுமா" என்று கன்னத்தில் கண்ணீர் முத்துக்கள் கரைபுரண்டோடக் கூறினாள் அகல்யா.

"நான் உயிரிலும் மேலாக நேசிக்கிறது உன்னைத் தான். ஆனால் உன்னை மாதிரித்தான் நான் ராகவனையும் நேசிக்கிறன். அவனை எனக்குச் சிறு வயது முதலே தெரியும். என்னை வளர்த்த அந்தக் குடும்பத்திற்கு நான் நன்றிக்கடன் பட்டிருக்கிறன். அவனுக்காக நான் என் காதலியை இழக்கத் தயார். அகல்யா ப்ளீஸ் ராகவன் நல்லவன் நீ அவனைத் திருமணம் செய்" என்று அவனும் கலங்கியவாறே கூறினான்.

"முடியவே முடியாது கௌசிக்" என்றாள் அகல்யா.

"அகல்யா என்மேல அன்பிருந்தால் என்னை மறந்திட்டு ராகவனை செய். நீ இதற்கு மறுத்தால் நான் உயிரோட இருக்கமாட்டன்" என்றான் ராகவன்.

"நான் ராகவனையே செய்யிறன். உங்கட உயிர் என்னால போக வேண்டாம்" என்று கதறியவள் அவனையும் பாராமல் சென்றுவிட்டாள்.

திருமண வேலைகள் தடல்புடல்ாக நடந்து கொண்டிருந்தன. ராகவனுக்கோ மகிழ்ச்சி கொண்டாட்டம். ஆனால் அங்கே இரு உள்ளங்களில் ஒரே போராட்டம். வெளியே எல்லா வேலைகளையும் சிரித்த முகத்துடனே கவனித்துக்கொண்டிருந்த கௌசிக் உள்ளே அழுதுகொண்டிருந்தான். முகூர்த்த நேரத்தில் அகல்யாவின் கழுத்தில் மூன்று முடிச்சிட்டான் ராகவன். அந்த நேரத்தில் கௌசிக் அங்கே நிற்கவில்லை. யாரும் அதைக் கவனிக்கவும் இல்லை. நீண்ட நேரத்தின் பின்பு அடுத்த அறையிலிருந்து அலறல் ஒலி கேட்கவே எல்லோரும் பதற்றத்துடன் ஓடிச் சென்றனர்.

அங்கே கௌசிக் நஞ்சினை அருந்தி தற்கொலை செய்துகொண்டு இவ்வுலகத்தினை விட்டே போயிருந்தான்.

"ஐயோ கௌசிக் ஏன்டா இப்படிப் பண்ணினாய். நாங்க உனக்கு உன்ன துரோகம் செய்தோம்" என ராகவன் கௌசிக் மீது விழுந்து கட்டிப்புரண்டு கதறியழுதான். அகல்யாவும் "உங்களுக்காக நான் விட்டுக்கொடுத்தும் இப்படிச் செய்திட்டீங்களே கௌசிக்" என கதறவே ஒரு கணம் அவளைத் திகைப்புடன் பார்த்தான் ராகவன். அப்போது கௌசிக் படுக்கையிலிருந்து ஒரு கடிதம் கீழே விழுந்தது. உடனே அதை அவசரமாக எடுத்துப் பிரித்துப் படித்தான் ராகவன்.

"என் அன்பான ராகவனுக்கு. நீங்கள் எல்லோரும் என்னை மன்னிக்க வேண்டும். ராகவா! நான் சொல்லுறதைக் கேட்டால் உனக்கு அதிர்ச்சியாக இருக்கும். ஏன் தெரியுமா? நீ என்னை அடிக்கடி கேட்பியே நான் விரும்புற பெண் யாரென்று. அவ வேறு யாருமில்லை. இப்போது உன் மனைவியாயிருக்கும் அகல்யாதான். ஆமாம் அவதான் என் தேவதை. அது தெரியாமல் நீயே அவளிட்ட உனக்கு சம்மதத்தை வாங்கித் தரச்சொன்னாய். பாவமடா உனக்கென்ன தெரியும். நான் சொல்லியிருந்தால் நீயே விட்டுக்கொடுத்திருப்பாய். ஆனால் உனக்கு அகல்யாவைப் பிடித்திருந்தது. நீ எனக்கு உயிர். உனக்காக நான் என் காதலியை இழக்கத்தயார். என் காதலை உனக்குத் தியாகம் செய்கிறேன். இருந்தாலும் என் கண்முன்னே என் காதலி இன்னொருவனுக்கு மனைவியாவதைப் பார்க்கமுடியவில்லை. அதனால் நான் முடிவை தேடிக் கொள்கிறேன். நீ அகல்யாவை சந்தோசமாய் கண்கலங்காமல் வைத்திரு.

இப்படிக்கு,
உன் உயிர் கௌசிக்

கடிதத்தைப் படித்து முடிந்த ராகவன் கதறினான். "ஏன்டா முன்னாடியே சொல்லியிருந்தால் நானே உனக்குச் செய்து வைத்திருப்பேனே. நான் பாவியடா என்னால் உன்ர உயிர் போச்சுதே" என்று புலம்பினான். அழுதனர். எல்லோம் அழுதுகொண்டே இருந்தனர். அழத்தான் அவர்களால் முடியும். போன உயிர் திரும்பிவரவா போகிறது.

# இந்தவாரம் உங்கள் பலன்

(01.09.2011 தொடக்கம் 07.09.2011 வரை **ஸ்ரீதர்**

### மேடம்

இந்தவாரம் உங்களுக்கு மங்களகரமான வாரமாகும். பணம் தாராளமாகப் புரளும். கடன் மீதிகள் வசூலாகும். நீண்ட காலமாகக் காணாத ஒரு புது உறவு வந்து சேரும். தானதர்மங்கள் செய்வீர்கள். தொழில் ஸ்தானத்தில் மதிப்பு உயரும். திட்டம் போட்டது போல் எல்லாம் நடக்கும். கூட இருந்து தொழில் பார்ப்பவர்கள் தங்கள் சலுகைகளை விட்டுக்கொடுத்து ஸ்தாபன வளர்ச்சிக்கு உதவுவார்கள். பொலிஸ் தொடர்பான விடயங்கள் அனுகூலமாக அமையும். குடும்பத்திலுள்ளவர்கள் உதவி, ஒத்தாசை புரிவர். மாணவர்கள் கல்வியிற் கவனஞ் செலுத்துவர். சொந்த பந்தங்கள் வந்து ஒட்டிக்கொள்வார்கள். பக்கத்து வீட்டாருடன் கவனமாக நடக்கவும். பிள்ளைகள் வழியில் நல்ல சேதி கேட்கலாம். அதிர்ஷ்ட நாள்:ஞாயிறு

### இடபம்

இந்த வாரம் நல்ல பலன்களுள்ள வாரமாகும். எந்த வேலையையும் தாமதமின்றிச் செய்து முடிப்பீர்கள். பெரியவர்கள் உதவி கிடைக்கும். குடும்பத்தில் குதூகலம். பணவரவு நிறைய உண்டு. சுபகாரியங்களுக்கான அறிகுறி தோன்றும். நீங்கள் வெகுசிக்கனமாக நடந்தும் செலவுத்தானம் அதிகரிக்கும். குடும்ப உறுப்பினர்கள் உங்களுக்கு அனுகூலமாக நடந்துகொள்வர். எதிர்பார்க்காமலேயே பணம் தானாக வந்து சேரும். மகிழ்ச்சிக் கடலில் மூழ்கித் திளைப்பீர்கள். உறவுகள், தொழில் ஸ்தானத்தில் எவ்வளவு பாடுபட்டாலும் நல்லபெயர் எடுக்கமுடியாது. நம்பியிருந்தவர்கள் கூட நட்டாற்றில் தள்ளிவிட்டு விடுவார்கள். வீண்பழி சுமக்க நேரிடலாம். மாணவர்கள் நன்கு படிப்பார்கள். கலைஞர்கள், வர்த்தகர்கள் கௌரவம் பெறுவர். அதிர்ஷ்ட நாள்:வெள்ளி

### மிதுனம்

இந்த வாரம் உங்களுக்கு நல்ல யோகமான வாரமாகும். நீங்கள் நினைத்த காரியங்கள் யாவும் சுமுகமாக நடக்கும். எதிலும் உற்சாகத்துடன் ஈடுபடுவீர்கள். பிறகு செய்யலாம் என்று தள்ளிப்போட்ட காரியங்கள் விரைவில் ஈடேறலாம். உடம்பு கொஞ்சம் இயலாமல் இருக்கும். தொழில் ஸ்தானத்தில் அதிகமான பொறுப்புக்கள் வரும். செலவுகளும் தாராளமாக இருக்கும். சிலவேளைகளில் அதிகமான கோபம் வரும். அதனால் பாதிப்பும் உங்களுக்குத்தான். மாமன், மைத்துனர்கள், சகோதரர்கள் பங்காளிகள் தொடர்பில் அவதானமாக இருக்கவும். பொழுதுபோக்குவிடயங்கள் சந்தோஷத்தைக் கொடுக்கும். மாணவர்கள் கல்வியிற் கவனஞ் செலுத்துவார்கள். கலைஞர்கள், வர்த்தகர்கள் கொள்ளை இலாபமீட்டுவர். அதிர்ஷ்ட நாள்:வெள்ளி

### கடகம்

இந்தவாரம் உங்களுக்குக் கொஞ்சம் கஷ்டமான வாரமாகும். வீண் அலைச்சலையும் தேவையற்ற செலவுகளும் வந்து உடல் ஆரோக்கியத்தைக் குறைக்கும். ஞாபகமறதியால் அவதிப்படுவீர்கள். தொழில் ஸ்தானத்தில் வேலைகள் மந்த கதியில் நடைபெறும். 'நாம் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கும்' என்பது உங்கள் வாழ்வில் சரியாக இருக்கும். நண்பர்கள் ஆபத்து நேரத்தல் கைகொடுத்து உதவுவார்கள். தேக ஆரோக்கியம் சற்றுக் குறைவாகவே இருக்கும். இயந்திரங்கள் அடிக்கடி பழுதடைந்து வேலைகளை இழுத்தடிக்கும். எதிர்பாராத விதத்தில் பணம் வந்து சேரும். அதிர்ஷ்ட நாள்:புதன்

### சிங்கம்

இந்த வாரம் உங்களுக்குச் சங்கடம் தரும் வாரமாகும். திட்டமிட்டவாறு காரியங்கள் நடைபெறமாட்டாது. இதோ முடியுமாப்போல இருக்கும். பிறகு இழுத்தடித்துக் கொண்டே இருக்கும். பணவரவு சுமாராக இருக்கும். எதிர்பாராதவகையில் வீண்செலவு வரும். உறவினர்கள் உங்களை நம்பாமல் சந்தேகக் கண்கொண்டு பார்ப்பார்கள். பிள்ளைகள் செயல்கள் பெருமையைத் தேடித்தரும். செய்யவிட்டால் கோபிப்பார்கள். சகோதரர்கள் தாமாகவே வந்து உதவிகள் செய்வார்கள். உத்தியோக ரீதியில் நீங்கள் இதுவரைகாலமும் எதிர்பார்த்திருந்த சலுகைகள் கிடைக்கலாம். மாணவர்கள் விளையாடித் திரிவார்கள். வெளியிலிருந்து இனிப்பான செய்தி பறந்துவரும். அதிர்ஷ்ட நாள் திங்கள்.

### கன்னி

இந்த வாரம் உங்களுக்கு மங்களகரமான வாரமாகும். எதிர்பாராத விதத்தில் பணம் வந்து சேரும். உறவினர்கள் தங்கள் நன்மைக்காக வந்து ஒட்டிக்கொள்வார்கள். தேகநிலை சிறிது பலவீனமாயிருக்கும். புதிய திட்டங்கள் நன்மையை அளிக்கும். மருத்துவச் செலவு அதிகமாகும். சகோதரர்கள் கைமாறு கருதாமல் உதவிகள் செய்வார்கள். தொழில் ஸ்தானத்தில் மதிப்பு உயரும். மேலதிகாரிகள் சாதகமாக நடந்து கொள்வார்கள். நீண்டநாள் வராத உறவினர்கள் உங்களின் பாசத்துக்காக ஏங்குவார்கள். பெண்பிள்ளைகளால் நன்மை கிடைக்கும். மாணவர்கள் ஊக்கமாகக் கல்வியில் நாட்டமுறுவர். அயலவர்களால் தொல்லை உண்டு. கொடுத்த கடன் காசு வசூலாகும். இறை நம்பிக்கையையும் அதிகரிக்கும்.
அதிர்ஷ்ட நாள்: புதன்.

### துலாம்

இந்த வாரம் உங்களுக்குக் கலகலப்பான வாரமாகும். காரியங்கள் யாவும் சித்தியாகும். உறவினர்கள் வந்து நன்மையான விடயங்களைச் செய்து காட்டுவர். திட்டமிட்டபடியே காரியம் நடைபெறும். தகப்பனார் வழியில் பண வரவுகளைப் பெறுவீர்கள். உடம்பு ரீதியான சிறுசிறு உபாதைகளால் அவதிப்பட நேரிடும். வாகனங்கள் பழுதுபார்க்கும் செலவு தாராளமாக உண்டு. தொழில் ஸ்தானத்தில் எல்லாக் காரியமும் திட்டமிட்டவாறே நடைபெறும். மேலதிகாரிகளின் நல்ல வெகுமதியும் பாராட்டும் கிடைக்கும். நீங்கள் எதிர்பார்த்திருந்த ஒரு விடயம் வெற்றிவாகை சூடும். சுபகாரியங்கள் பற்றிய பேச்சுக்கள் இடம்பெறும். அதிர்ஷ்ட நாள்: செவ்வாய்.

### விருச்சிகம்

இந்த வாரம் உங்களுக்குச் சிக்கலான வாரமாகும். திட்டமிட்டவாறு எதுவும் நடைபெறாமல் இழுத்தடிப்பு வரும். வேலைப்பளு அதிகரிக்கும். தொழில் ஸ்தானத்தில் பல விதத்திலும் குறை கேட்பீர்கள். கொடுத்த கடன்காசு திரும்பி வராது. எதிலும் குழப்பமும் தடுமாற்றமும் உண்டாகும். நம்பி ஒப்படைத்த காரியங்கள் முடிவுறாது காலை வாரிவிடலாம். நீங்கள் முகங்கொடுத்துப்பேச முடியாத நிலை ஏற்படலாம். குடும்ப உறுப்பினர்கள் தேவையை நிறைவேற்றப்போய் எதிர்பாராத கடும் செலவு வரும்.மேலதிகாரிகளிடம் நீங்கள் கேட்ட எதுவுமே நடைபெறாது.
அதிர்ஷ்ட நாள்: வியாழன்.

### தனுசு

இந்த வாரம் உங்களுக்குச் சுபீட்சகரமான வாரமாகும். ஊக்கமும் உற்சாகமும் உங்கள் சொத்தாகும். நீங்கள் திட்டமிட்டபடியே எல்லாக் காரியங்களும் நடக்கும். வீண் அலைச்சல் வந்தாலும் காரியம் வெற்றியைத் தரும். மேலதிகாரிகள் பாராட்டிப் பேசுவர். சிலவேளைகளில் எதிர்பார்க்காமலேயே நல்ல பணவருவாய் உண்டு. குடும்ப உறுப்பினர்கள் ஒத்து நடக்கமாட்டார்கள். தேவையற்ற வீண் வம்புகளை விலைக்கு வாங்கி நிம்மதி குலையும். மாணவர்கள் ஏனோதானோ என்று நடந்து கொள்வார்கள். படிப்பு வேப்பங்காயாகக் கைக்கும். உறவினர்கள் ஒட்டியும் ஒட்டாமலும் பழகுவர். அதிர்ஷ்ட நாள்: வெள்ளி.

### மகரம்

இந்த வாரம் உங்களுக்கு சந்தோஷமான வாரமாகும். வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கிக் குவிப்பீர்கள். தீர்க்க தரிசனத்துடன் காரியங்களை மதிப்பிட்டு செய்வீர்கள். தொழில் ஸ்தானத்தில் மதிப்பு உருவாகும். 'செய்யும் தொழிலே தெய்வம்' என்று பேர்வாங்கிக்கொள்ளுங்கள். பெற்றோர் விடயத்தில் அக்கறை காட்டுவீர்கள். சிறிய விடயங்களைப் பெரிதாக்காமல் புரிந்துணர்வுடன் நடந்துகொள்வீர்கள். குடும்ப உறுப்பினர்கள் ஒத்துழைப்பு நல்குவார்கள். சகோதரர்களால் பிரச்சினை உருவாகலாம். மாணவர்கள் நன்கு கல்வி கற்பார்கள். கலைஞர்கள். வர்த்தகர்கள் இலாபம் ஈட்டுவர். அதிர்ஷ்ட நாள்: திங்கள்.

### கும்பம்

இந்த வாரம் உங்களுக்கு கஷ்டம் தரும் வாரமாகும். மனதில் என்றுமில்லாதவாறு ஒரு விரக்தி வந்து தோன்றிடும். வாழ்க்கையில் வெறுப்புக் காட்டுவீர்கள். எல்லாவற்றுக்கும் எரிந்துவிழ்வீர்கள். சிறுவிடயமும் உங்களுக்குப் பெரிதாய் விடும். தொழில் ஸ்தானத்தில் தடை, தாமதங்களை நேரிடலாம். வீணான வாக்குவாதங்களால் சண்டை சச்சரவுகள் வர வாய்ப்புண்டு. உங்கள் வேலைகளில் உங்களுக்கே நம்பிக்கை இல்லாமற் போய்விடும். இது ஏன்? எதற்காக என்று கேளாது உடனே உரியவற்றைச் செய்துவிடும் நீங்கள் மற்றவர்கள் மனதில் நிறைந்து நிற்பீர்கள். மாணவர்கள் கல்வியில் நாட்டமுறுவர்.
அதிர்ஷ்ட நாள்: செவ்வாய்.

### மீனம்

இந்தவாரம் மிக நல்ல பயனுள்ள வாரமாகும். வீண் செலவு வராது. குடும்ப உறுப்பினர்கள் நல்ல முறையில் நடந்துகொள்வார்கள். பண வருவாய் நிறைய உண்டு. குடும்பத்தில் ஏற்பட்ட வரம்புக்கு மீறிய தொல்லைகளால் நீங்கள் வெறுப்படைவீர்கள். ஒரு சிறிய வேலை ஒன்பது தரம் நிறைந்தே செய்யவேண்டி நேரிடலாம். ஒரு தரத்தில் முடியவே முடியாது. வீணான குதர்க்கவாதங்களைத் தவிர்க்கவும். உறவினர்கள் வந்து உதவி கேட்டால் மறுக்காமல் செய்வீர்கள். சிலவேளைகளில் வெளிநாட்டுக்குப் பயணம் சரிவந்தாலும் வரலாம். அதிர்ஷ்ட நாள்: புதன்.

# காதிலை பூ கந்தசாமி



## நோட்டீஸ் பலகை

நான் சொல்வதெல்லாம் பொய்
பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை
– காதில பூ கந்தசாமி –

**வணக்கமுங்கோவ்! எங்க பார்த்தாலும் கிறீஸ் பூதம் - மர்மமனிதர் என்று நாடே அல்லோலகல்லோலப்பட்டுக் கொண்டிருக்குது.**

**பொழுது சாய்ஞ்சா பொழுதுபோக்குக்கு றோட்டில போற பேர்வழியளை இப்பவே காணக்கிடைக்குதில்லையுங்கோ. மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் எண்டது போல கிராமப்புறங்களில புதுசாய் அறிமுகம் இல்லாத முகத்தைக் கண்டாலே சனம் ஒரு மார்க்கமாப் பார்க்குதுகள். நிலைமை இப்படி இருக்கேக்க எங்கட வாத்தியார் எதேச்சையாய் என்னிட்ட மாட்டிட்டார். வாத்தியார் என்ன நிலையில இருக்கிறார் எண்டு ஒரு கதை போட்டுப் பார்த்தனுங்கோ.**

**கா.பூ:-** என்ன வாத்தியார் யோசிச்சுக் கொண்டிருக்கிறியள். முகத்திலை வழமையாக களையக் காணேல்லை. ஏதோ பித்துப் பிடிச்ச மாதிரி இருக்கிறியள்.

**வாத்தி:-** என்னத்தைச் சொல்லுறது. புதுவீடு ஒன்று பாத்துக்கொண்டு இருக்கிறன். வீட்டை அவசரமாக் காலி பண்ண வேண்டியிருக்குது. அதுதான் ஊருராய் அலைஞ்சு வீடு தேடிக் களைச்சுப்போய் இருக்கிறன்.

**கா.பூ:-** ஏன் வாத்தியார்? நீங்கள் இப்ப இருக்கிற வீடு நல்ல சுவாத்தியமான வசதியான வீடுதானே. அதையேன் விட்டுட்டுப்போக நினைக்கிறியள்.

**வாத்தி:-** அது சுவாத்தியமான வீடுதானப்பா. ஆனாலும் சுதந்திரமாய் இருக்க முடியேல்லையே. முன்னமெல்லாம், பாதுகாப்பு எல்லைக்குள்ள இருந்தால் பிரச்சினை இல்லையெண்டு சொல்லி அப்படியான வீடுகளைத் தேடியெடுத்தனாங்கள். இப்ப என்னடா எண்டால் பாதுகாப்பான எல்லைக்குள்ள இருக்கிறதுதான் பிரச்சினையாகவே இருக்கு.

**கா.பூ:-** என்ன வாத்தியார் சொல்லுறியள்?

**வாத்தி:-** ஓம் தம்பி. உந்தக் கிறிஸ் பூதம் - மர்ம மனிசர் எண்டு வந்தாப்பிறகு பாதுகாப்பு எல்லைகளுக்குள்ள இருக்கிறதுதான் பிரச்சினையாக் கிடக்குது. அது தேவையில்லாத அசௌகரியங்களை ஏற்படுத்துது. அதுதான் கொஞ்சம் தூரவாய்ப் போய் இருப்பம் எண்டு யோசிக்கிறன்.

**கா.பூ:-** அது சரி வாத்தியார் உந்த கிறீஸ் பூதம் எண்டுற கதையெல்லாம் எந்தளவுக்கு உண்மை எண்டு நினைக்கிறியள்.

**வாத்தி:-** இதுவரை கிறீஸ் பூதத்தை நான்தான் பார்த்தனான் எண்டு ஆரும் உரிமைகோரேல்லை. உந்தக் கிறீஸ் பூதங்கள் ஆரையும் தாக்கினதாயோ அல்லது சேட்டை செய்ததாயோ பாதிக்கப்பட்ட எவரும் நேரடியாய் வாக்கு மூலம் கொடுக்கவுமில்லை. இடையில நிற்கிற பொதுவான வதந்தியலும், கதையளுமாத்தான் உலாவிக்கொண்டிருக்குது. எண்டாலும் உதுக்குப் பின்னால ஒரு சக்தி இருக்கிறதும், அந்தச் சக்தி ஏதோ ஒரு திட்டத்தோட உந்த விளையாட்டைச் செய்து கொண்டிருக்கிறதும் உண்மை.

**கா.பூ:-** அப்பிடியெண்டால் உந்த கிறீஸ் பூதங்கள் எல்லாம் ஆர் எண்டு நீங்கள் நினைக்கிறீங்கள்?

**வாத்தி:-** என்னமோ தெரியாது என்னைப் பொறுத்தவரைக்கும் எல்லாருமே ஒருதருக்கொருத்தர் அறிமுகம் இல்லாட்டி பூதங்கள்தான் மற்றவையின்ர பார்வையில.

## யாவும் கலப்படமற்ற கற்பனை

## மின்சாரத்துக்குக் கடிவாளமிட்டவர்



விரும்பி இருந்தால் பெரும் பொருள் ஈட்டி இருக்கலாம். ஆனால் பொருள் சேர்ப்பதைப் புறக்கணித்துவிட்டு. விஞ்ஞான அறிவைப் பெருக்கிக் கொள்ளுவதிலேயே கருத்தாக இருந்தார்.

இப்போது ∴பரடேக்கு 1831இல் வயது நாற்பது. வாரத்துக்கு இருபது பவுண்கள் சம்பளம் - தங்க இடம், நிலக்கரி, மெழுகுவர்த்திகள் இலவசம். ராயல் பல்கலைக்கழத்தில், மற்றொரு விஞ்ஞானப் பேரவையின் முன்னே, காந்தத்தினால் மின்சார சக்தியை உற்பத்தி செய்ய முடியும் என்பதை விளக்கினார். இருப்பத்தைந்து வருஷத்தின் இடைவிடாத கடின உழைப்பு. நம்பிக்கை. தோல்வி, புதுப்பிக்கப்பட்ட நம்பிக்கை - இப்படிப் பாடுபட்டு முடிவில் வெற்றியின் சிகரத்தை எட்டி விட்டார் ∴பரடே.

அப்படிப் பாடுபட்டதின் பலனை இன்று உலகம் அனுபவிக்கிறது. மின்சார மோட்டார், மின்சக்தியின் வேகத்தை மாற்றி அமைக்கும் டிரான்ஸ்∴பார்மர், மின்சக்தியை உற்பத்தி செய்யும் டைனமோ ஆகியவைகளை உலகுக்கு அளித்து விஞ்ஞான உலகிலேயே புதிய புரட்சியை உருவாக்கினார்.

முன்னேற்றத்துக்கான பல பாதைகளை வகுத்துக் கொடுத்தார். ராடார், சினிமா, தொலைக்காட்சி விண்வெளிப் பயணம், கம்பியூட்டர், மின் ரயில், வீட்டு வசதிக்கான ஒளி, சமையல் கருவிகள் இத்தனைக்கும் இதைப் போல் எத்தனையோ சாதனங்களுக்கும், அடிப்படையாக உள்ளது டைனமோ. இதை உருவாக்கியவர் மைக்கேல் ∴பரடே.

**உலகை வியக்க வைத்தவர்கள்**

[வியப்புக்கள் தொடரும்...]

Regd. as a News paper at the G.P.O.(QD/129/NEWS/2011)





# மனிதப் பாம்பு?

**அண்மையில்** மனிதத்தலையுடனான பாம்பு என்று செய்தி பல்வேறு இணையத்தளங்களிலும் காணொ-ளியுடன் வெளியிடப்பட்டிருந்தது. இது மலேசியாவில் காணப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. இதைப்பார்த்த பலரும் இது ஒரு கிரபிக் வேலை என விமர்சித்தனர். இருந்தாலும் இது உண்மைதான் என்பதை இன்றும்கூட உறுதிப்படுத்த முடியாமல் உள்ளது. எனினும் இந்த மனித்தலையுடனும் இரண்டு கைகளுடனும் காணப்படும் இந்த விசித்திரமான பாம்பு ஒரு மியூசியத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளதாகவே அறிய முடிகிறது. அதுதொடர்பான புகைப்படங்களும் வெளிவந்துள்ளன. பாடசாலை மாணவர்கள் குறித்த பாம்பை பார்வையிடுவதை காணலாம். மற்றும் இது மலேசியாவில் என வெளிவந்த செய்திகள் பொய்யானவையே என தோன்றுகிறது. காரணம் இங்கு காட்டப்பட்டுள்ள புகைப்படங்களில் சீனா அல்லது யப்பான் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளதோடு படங்களில் இருப்பவர்களும் அந்நாட்டைச் சேர்ந்தவர்களாகவே காணப்படுகிறார்கள். அந்த காட்சிகளை நீங்களும் பாருங்கள்.





# ஈர்ப்பு

**எந்தவொரு** காரியத்திலும் முன்னேற்பாடாக பாதுகாப்பை தேடிக் கொள்ள வேண்டும் என்பதை உணர்த்தும் பொருட்டு, 'தலைக்கு மேல் வெள்ளம் வருமுன் செய்துகொள்ள வேண்டும்.' என எமது மூத்தவர்கள் கூறுவதைக் கேட்டிருக்கின்றோம். ஆனால் இங்கு இந்தப் படத்தில் முழங்கால் வரை வெள்ளம் வந்ததையும் பொருட்படுத்தாமல் தொலைக்காட்சி பெட்டியின் மீது தங்கள் கவனத்தை செலுத்த விட்டு இருக்கின்றனர் இந்தக் குடும்பத்தினர்.


அண்மைக்காலமாக இலங்கை - இந்தியா போன்ற கீழைத்தேச நாடுகளில் அதிகரித்து வருகின்ற தனியார் தொலைக்காட்சி அலைவரிசையின் ஆதிக்கம் காரணமாக பெருமளவில் பெண்கள் தொலைக் காட்சியின்பால் ஈர்க்கப்படுவது அதிகரித்துவருகின்றது. அதுவும் தொலைக்காட்சித் தொடர் நாடகங்கள் பெண்களை அப்படியே கட்டிப் போட்டு வைத்திருக்கின்றது என்ற குற்றச்சாட்டு பரவலாக எழுப்பப்பட்டு வருகின்ற நிலையில் இப்புகைப்படம் குறித்த குற்றச்சாட்டுக்கு ஆதாரமாகக் காணப்படுகிறது.

மலை(ழை)யே வரினும் நாடகத்தொடர்களை பார்க்காமல் தவிர்க்க முடியாது என்ற மனோநிலை கொண்ட பெண்கள் தங்கள் சிந்தனைகளில் மாற்றங்களைக் கொண்டுவருவது இன்ப குடும்ப வாழ்விற்கு நன்மை பயக்கும்.

# பிறழ்வு




பொதுவாக கோழிகளுக்கு சிறிய அலகு இருக்கும். அதன்மூலம் உணவை அவை உட்கொள்கின்றன. ஆனால், ஹார்வேர்ட் பல்கலைக்கழகத்தை சேர்ந்த உயிரியல் பரிணாம வளர்ச்சி விஞ்ஞானி அர்காத் அபாஷ்னோங் தலைமையிலான நிபுணர் குழுவினர் புதுவிதமாக ஆய்வு மேற்கொண்டனர். கோழி கருவில் உள்ள டி.என்.ஏ.மூலக்கூறில் சிறிது மாற்றம் செய்து முதலையின் நீளமான தாடை போன்ற அலகை உருவாக்கியுள்ளனர். கோழி முட்டையில் சிறிய துவாரமிட்டு அதற்குள் சிறிய பாசிமணி அளவிலான புரோட்டீனை செலுத்தினர். அதை தொடர்ந்து முட்டை கருவின் வளர்ச்சியை கண்காணித்தனர். 14 நாட்களுக்கு பிறகு கோழியின் அலகு முதலையின் தாடை போன்று நீளமாக வளர்ந்தது. பறவைகள் மற்றும் விலங்குகளின் உடற்கூறு இயல் குறித்து அறிய இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டதாக விஞ்ஞானி அபாஷ்னோவ் தெரிவித்தார். இச்சோதனையின் மூலம் குழந்தை பிறப்பில் ஏற்படும் குறைபாடுகளை நீக்கமுடியும் என நம்பப்படுகிறது. இந்த சாதனை சுமார் ஆறரை கோடி ஆண்டு பரிணாம வளர்ச்சி வரலாற்றில் முக்கியமானதாக கருதப்படுகிறது.




# குளு குளு பையன்

முரசு 911 இன் இப்பகுதியில் பருமனான இந்தச் சிறுமி ஒருவரின் புகைப்படம் வெளியாகி இருந்ததை வாசகர்கள் மறந்திருக்கமாட்டீர்கள். அந்தச் சிறுமியை மிஞ்சும் வகையில் இந்தச் சிறுவனின் எடை காணப்படுகிறது. பிறந்து 7 மாதமான இச்சிறுவனின் நிறை 20kg ஆகும். மியாமி தலைநகரில் வசித்து வரும் இச்சிறுவனின், எடையைக் குறைப்பதற்கு வைத்திய ஆலோசனைகளை நாடியிருக்கின்றனர் பெற்றோர். எப்பொழுதுமே தங்கள் பிஞ்சுக் குழந்தைகள் குளுகுளுப்பாக இருக்க வேண்டும் என்பது பெற்றோரின் விருப்பம். ஆனால் அதுவே அளவுக்கு மிஞ்சிப் போவதை யாரும் விரும்பமாட்டார்கள் தானே!





# சர்ச்சை

அவுஸ்திரேலியாவின் நடுவர் டரெல் ஹெயர் என்பவருக்கு ஆசியப் பந்துவீச்சாளர்களைக் கண்டாலே அலேஜிக். அதுவும் அவுஸ்ரேலிய வீரர்களைத் திணறடிக்கும் ஆசியாவின் சுழல்பந்துவீச்சாளர்களை இவருக்கு கண்ணிலும் காட்டக் கூடாது. 1995 ஆம் ஆண்டு அவுஸ்ரேலிய சுற்றுப்பயணம் மேற்கொண்ட இலங்கை அணியில் இடம்பெற்றிருந்த முத்தையா முரளிதரன் பந்தை எறிவதாகக் கூறி சர்ச்சையைக் கிளப்பினார். அனைத்துத் தடை - களையும் தாண்டி தனது பந்துவீச்சை நிரூபித்து இன்று உலக சாதனையாளனாக கிரிக்கெட் வாழ்வை முடித்துள்ளார். இருந்தபோதிலும் நடுவர் டரெல் ஹெயருக்கு ஆசிய வீரர்கள் மீதான வெறுப்பு தணியவில்லை. இப்பொழுது இந்தியாவின் சுழல்பந்துவீச்சாளர் கர்ஜபான்சிங் பந்தை எறிவதாகக் கூறி புதிய சர்ச்சையைக் கிளப்பியுள்ளார். 1998 ஆம் இந்தியாவில் நடைபெற்ற அவுஸ்ரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டி மூலம் சர்வதேச அரங்கில் கால் பதித்த கர்ஜபான் இதுவரை 98 டெஸ்ட் போட்டிகளில் 406 விக்கெட்டினையும் அதேபோன்று 229 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 259 விக்கெட்டுக்களையும் கைப்பற்றியுள்ள கர்ஜபானின் பந்துவீச்சில் இப்பொழுது குறை காண்கிறார் டரெல் ஹெயர்.

கடந்த 12 வருடங்களுக்கு மேலாக பல்வேறு சர்வதேச நடுவர்கள் முன்னிலையில் பந்துவீசிய கர்ஜபான் மீது தற்போது சர்வதேச நடுவர் குழாமில் அங்கத்துவம் இழந்துள்ள டரெல் ஹெயர் குற்றம்சாட்டுவது தவறானது என்பதே கிரிக்கெட் விமர்சகர்களின் கருத்தாக இருக்கிறது. அவுஸ்ரேலிய நடுவர் - அவுஸ்ரேலியர்களின் எள்ளிநகையாடல்களால் விஸ்வரூபம் எடுத்த முரளி ஆயிரக்கணக்கான விக்கெட்டுக்களை புடுங்கி எறிந்தது போன்று கர்ஜபானும் தேவையற்ற வாய்த்தர்க்கத்தை விடுத்து பந்துவீச்சில் தனது கோபத்தைக் காண்பித்து விக்கெட் மழைபொழிய வேண்டும் என்பதே இந்திய கிரிக்கெட் ரசிகர்களின் எதிர்பார்ப்பாகும்.